## தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு** : TNPSC **ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**)

**பாடம்** : **வரலாறு**

**பகுதி** : இந்திய பண்பாட்டின் இயல்புகள்

©**காப்புரிமை** :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமை பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# வரலாறு

## இந்திய பண்பாட்டின் இயல்புகள்-வேற்றுமையில் ஒற்றுமை, இனம்,நிறம்,மொழி, பழக்க வழக்கங்கள், இந்தியா மத சார்பற்ற நாடு.

Ø இந்தியா, மனித இனத்தை பற்றி படிக்ககூடிய அருங்காட்சியகமாகவும், ஆய்வகமாகவும் திகழ்கிறது. எனவே, மனித இனங்களின் **அருங்காட்சியகம்** என சிறப்புடன் அழைக்கப்படுகிறது.

Ø இந்தியாவின் பழமையான மதம் வேத சமயமாகும்(இந்துமதம்).

Ø கி.பி.முதலாம் நூற்றாண்டில் கிறிஸ்தவமதம் ஏசுவின் சீடர் **புனித தாமஸ்** என்பவரால் இந்தியாவில் பரப்பப்பட்டது.

Ø இந்தியாவை விட்டு வெளியேற்றப்பட்ட பாரசீகர்களால் **ஜொராஸ்டிய மதம்** இந்தியாவில் பரப்பப்பட்டது.

Ø இஸ்லாமியர்கள் இந்தியாவில் இஸ்லாம் மதத்தை வேரூன்ற செய்தனர். இம்மதங்களைத் தவிர **புத்தம்**, **சமணம்**, **சீக்கிய மதங்களும்** இந்தியாவில் தோன்றின. இருந்த போதிலும், நமது சமய சகிப்புத்தன்மையால் சமய பூசல்களுக்கு இடமளிப்பதில்லை.

## மொழி

Ø இந்தியாவில் ஏறத்தாழ 845 **மொழிகள்** பேசப்படுகின்றன. அவற்றில் 22 **மொழிகள் அரசாங்கத்தால்** அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

Ø **தேவநாகிரி** வடிவிலான இந்தி அலுவல் மொழியாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

Ø **ஆங்கிலம்** அலுவலக தொடர்பு மொழியாக பயன்படுத்தப்படுகிறது.

## இலக்கியம்

Ø **இராமாயணமும்**, **மகாபாரதமும்** இருபெரும் இதிகாசங்களாகும்.

Ø **திருவள்ளுவரால்** இயற்றப்பட்ட **திருக்குறள்** தமிழில் மிகச்சிறந்த நூலாகக் கருதப்படுகிறது.

Ø **பகவத்கீதை** இந்துக்களின் புனித நூலாகும்.

Ø **உமறுப்புலவரின் சீறாப்புராணம் இறைதூதர் முகம்மது நபியின்** வாழ்க்கையைப்பற்றிக் கூறுகிறது.

Ø **வீரமாமுனிவரால்** இயற்றப்பட்ட **தேம்பாவணி** கிறித்தவ மதத்துடன் தொடர்புடையது.

## விழாக்கள்

Ø புத்த மதத்தினர் **புத்த பூர்ணிமாவையும்** சமணர்கள் **மகாவீர் ஜெயந்தியையும்** சீக்கியர்கள் **குருநானக் ஜெயந்தியையும்** கொண்டாடுகின்றனர்.

## பழக்க வழக்கங்கள் மற்றும் பாரம்பரியம்

Ø இந்திய பாரம்பரியம், விருந்தோம்பல், ஈகை, நட்பு, அன்பு, சுயநலமற்ற தன்மை, நீதி, நன்னடத்தை, ஒழுக்கம், உண்மை, அமைதி, கருணை, சமய உணர்வு, பெற்றோர் மற்றும் பெரியோரை மதித்தல் மற்றும் சகிப்புத்தன்மையை வலியுறுத்துகிறது. மேற்கூறிய பண்புகள் வேற்றுமைகளை மறந்து மக்கள் ஒற்றுமையுடன் வாழ உதவுகின்றன.

## கலை மற்றும் கட்டடக்கலை

Ø கட்டடக்கலையில் இந்தியா புகழ்பெற்றது.

Ø **அஜந்தா மற்றும் எல்லோரா** ஓவியங்கள் உலகப் புகழ் பெற்றவை.

Ø **காந்தாரக்கலையும் சிற்பங்களும்** இந்தியாவின் சிற்பக்கலையின் பெருமையை பறைசாற்றுகின்றன.

**<u>இசை மற்றும் நடனம்</u>**

Ø **பரத நாட்டியம்**, **குச்சுப்புடி**, **கதக்களி**, **மணிப்புரி**, **மற்றும் ஒடிசி** போன்றவை இந்தியாவின் புகழ்பெற்ற நடனக்கலைகள் ஆகும்.

**<u>தேசிய ஒருமைப்பாடு</u>**

Ø இந்தியர்கள் அனைவரும் சகோதர சகோதரிகள் என்ற எண்ணம் மற்றும் உணர்வு இந்திய ஒருமைப்பாட்டை வளர்க்க பெரிதும் உதவுகின்றன.

**<u>பகுத்தறிவாளர்களின் எழுச்சி</u>**

**<u>இராஜாராம் மோகன்ராய்</u>**

Ø 1972**ல்** வங்காளத்தில் **கூக்ளி** மாவட்டத்தில் பிறந்தார். 1815ல் **ஆத்மிய சபையை** நிறுவினார். பின்னர் 1828 ல் இந்த சபையே **பிரம்ம சமாஜமாக** வளர்ச்சி பெற்றது. இந்த அமைப்பின் மூலம் கடவுள் ஒருவரே என்று இராஜாராம் மோகன்ராய் பிரச்சாரம் செய்தார்.

Ø **உபநிடதங்கள்**, **விவிலியம்**, **குர்ரான்** போன்ற சமய நூல்களின் கருத்துக்களை ஒன்றிணைத்து பல்வேறு சமயத்தினரிடம் ஒற்றுமை ஏற்படுத்த முயற்சித்தார்.

Ø ஆத்மிய சபையின் பணியை **மகரிஷி திபேந்திரநாத் தாகூர்** (இரவீந்திரநாத் தாகூரின் தந்தை) இவர்தான் பிரம்ம சமாஜம் என்று இச்சபைக்கு பெயர் மாற்றம் செய்தார்.

Ø இந்தியாவின் தலைசிறந்த சமூக அமைப்பாக **பிரம்மசமாஜத்தை** உருவாக்கினார்.

Ø 1829ல் வில்லியம் பெண்டிங் பிரபு சதி முறையை ஒழிக்க முன்வந்தபோது இராஜாராம் மோகன்ராய் அவருக்கு உறுதுணையாக நின்றார்.

Ø குழந்தைத் திருமணத்தையும், பெண்சிசு கொலையையும், கடுமையாக எதிர்த்தார்.

Ø 1817ல் சமய பரப்பாளரான **டேவிட்ஹேர்** என்பவருடன் இணைந்து கல்கத்தாவில் **இந்துக் கல்லூரியை** (இதுவே தற்போதைய கல்கத்தா மாநில கல்லூரி) நிறுவினார்.

Ø இராஜாராம் மோகன்ராய் வங்காள மொழியில் வெளிவந்த முதலாவது வார இதழான **சம்வாத்கௌமுதியை** தொடங்கினார்.

Ø பாரசீக வார இதழான **மீரத் உல் அக்பார்** என்பதற்கு ஆசிரியராகவும் திகழ்ந்தார்.

Ø 1833-**ல்** இங்கிலாந்திலுள்ள **பிரிஸ்டல்** என்ற இடத்தில் அவர் மறைந்தார்.

## ஹென்றி விவியன் டெரோசியோ

Ø இளம் வங்காள இயக்கத்தை நிறுவினார்.

Ø கல்கத்தா இந்து கல்லூரியில் ஆசிரியராக பணிபுரிந்தார்.

Ø 1833ல் காலரா நோய்கண்டு இளம் வயதிலேயே இறந்தார்.

Ø அவரது சீடர்கள் **டெரோசியன்கள்** என்றும், அவரது இயக்கம் **இளம் வங்காள இயக்கம்** என்றும் அழைக்கப்பட்டது.

Ø பெண்ணுரிமை, பெண் கல்வியை பெரிதும் ஆதரித்தார்.

Ø உருவ வழிபாடு, ஜாதியின்மை, மூடநம்பிக்கைகள் ஆகியவற்றிற்கு எதிராக பல்வேறு அமைப்புகளை ஏற்படுத்தியும், விவாதங்கள் நடத்தியும் சீர்திருத்தத்தில் ஈடுபட்டனர்.

## சுவாமி தயானந்த சரஸ்வதி

Ø 1875 **ஆம்** ஆண்டு பம்பாயில் **சுவாமி தயானந்தசரஸ்வதி** ஆரிய சமாஜத்தை தோற்றுவித்தார்.

Ø குஜராத்தின் **கத்தியவார்** பகுதியில் 1824ம் ஆண்டு பிறந்தார்.

Ø வேதங்கள் உண்மையான அறிவுக்கு அடிப்படை என்று நம்பினார்

Ø **வேதகாலத்திற்கு திரும்புங்கள்** என்பதே அவரது முழக்கமாகும்.

Ø உருவ வழிபாடு, குழந்தை திருமணம், பிறப்பின் அடிப்படையிலான ஜாதிமுறை போன்றவற்றை அவர் எதிர்த்தார். கலப்பு மணத்தையும், விதவை மறுமணத்தையும் ஆதரித்தார்.

Ø பிற சமயங்களுக்கு மதம் மாறியவர்களை மீண்டும் இந்து அமைப்புகளுக்கு கொண்டு வரும் நோக்கத்துடன் **சுத்தி இயக்கத்தை** தொடங்கினார்.

Ø அவரது கருத்துக்களை உள்ளடக்கிய **சத்தியார்த்த பிரகாஷ்** என்ற நூலையும் எழுதினார்.

Ø பம்பாயில் தோற்றுவிக்கப்பட்ட போதிலும், ஆரியசமாஜம் இந்தியாவின் பல பகுதிகளில் தனது தாக்கத்தை ஏற்படுத்தியது.

Ø கல்வி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டது.

Ø 1886ல் முதலாவது **தயானந்த ஆங்கிலோ வேதபள்ளி** லாகூரில் நிறுவப்பட்டது.

Ø லாலா லஜபதிராய் அவர்களும் ஆரிய சமாஜத்தை சேர்ந்தவரே.

**<u>பிரார்த்தனை சமாஜம்</u>**

Ø 1867ல் பம்பாயில் **டாக்டர் ஆத்மாராம் பாண்டுரங்** என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. இது பிரம்ம சமாஜத்திலிருந்து உதயமானதாகும்.

Ø இந்து சமயத்திற்குள்ளேயே சீர்திருத்தங்களைக் கொண்டு வருவது இதன் நோக்கம்.

Ø சமபந்தி கலப்புமணம், விதவைகள் மறுமணம், பெண்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோர் மேம்பாடு போன்றவற்றில் அதிக கவனம் செலுத்தியது.

Ø 1870**ல் நீதிபதி எம்.ஜி.ராணடே, ஆர்.ஜி.பண்டார்கர்** இருவரும் இதில் சேர்ந்து இந்த இயக்கத்திற்கு மேலும் வலிமை சேர்த்தனர்.

Ø நீதிபதி இராணடே தக்காண கல்விக் கழகத்தையும் போற்றி வளர்த்தார்.

**<u>சுவாமி விவேகானந்தர்</u>** (1863 - 1902)

- இயற்பெயர் நரேந்திரநாத் தத்தா.
- ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் புகழ்பெற்ற சீடர்.
- ஸ்காட்டிஷ் சர்ச் கல்லூரியில் பயின்றார்.
- 1886ல் துறவறம் பூண்டார்.
- விவேகானந்தர் என்று அழைக்கப்பட்டார்.
- 1893ல் செப்டம்பரில் சிகாகோ (அமெரிக்கா)வில் நடைபெற்ற உலக சமயங்களின் மாநாட்டில் கலந்துகொண்டு இந்தியா மற்றும் இந்து சமயத்தின் புகழை உலகறியச் செய்தார்.
- மனிதனுக்கு செய்யும் சேவையே கடவுளுக்கு ஆற்றும் சேவை என்று அவர் திடமாக நம்பினார்.
- 1897ல் ஹவுராவில் உள்ள பேலூர் என்ற இடத்தில் **இராமகிருஷ்ண இயக்கத்தை** தோற்றுவித்தார்.
- இது ஒரு சமூக சேவை மற்றும் அறக்கொடை அமைப்பாகும்.

**<u>பிரம்மஞானசபை</u>**

- 1875ல் இரஷ்யாவை சேர்ந்த **பிளாவட்ஸ்கி அம்மையார்** மற்றும் அமெரிக்கா **கர்னல் ஹென்றி ஸ்டீல் ஆல்காட்** என்ற இருவராலும் நியூயார்க்கில் (அமெரிக்கா) பிரம்ம ஞானசபை நிறுவப்பட்டது.
- இன, நிற, சமய பாகுபாடுகள் இன்றி உலக சகோதரத்துவத்தை ஏற்படுத்துவதும், பண்டைய சமய மற்றும் தத்துவங்களை ஆய்வு செய்வதும் அவர்களது முக்கிய நோக்கங்களாகும்.
- 1882ல் **சென்னை அடையாறில்** தங்களது தலைமையிடத்தை நிறுவினர்.
- 1893ல் **திருமதி.அன்னிபெசண்ட் அம்மையார்** இந்தியாவிற்கு வந்து இச்சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.
- **மதன்மோகன் மாளவியாவுடன்** இணைந்து பனாரஸில் **மத்திய இந்திய பள்ளியை** நிறுவினார்.

Ø பின்னர் அது பனாரஸ் இந்து பல்கலைக்கழகமாக வளர்ச்சி பெற்றது.

**பண்டித ஈஸ்வர சந்திர வித்யாசாகர்**

Ø சிறந்த கல்வியாளர்.

Ø சமூக சீர்திருத்தவாதி.

Ø 1820ல் **வங்காளத்தில்** பிறந்தார்.

Ø வில்லியம் கோட்டை கல்லூரியில் வங்காள மொழி துறையின் தலைமை பண்டிதர் ஆனார்.

Ø இந்திய சமுதாயத்தில் கல்வியை பரப்புவதின் மூலமே சீர்திருத்தம் கொண்டு வரமுடியும் என நம்பினார்.

Ø **பெதூன்பள்ளியை** நிறுவ பெதூன் என்பவருக்கு உறுதுணையாக இருந்தார்.

Ø கல்வியை பரப்புவதற்கு அவர் மேற்கொண்ட முயற்சிகளை பாராட்டும் விதத்தில் அவருக்கு **வித்யாசாகர்** என்ற பட்டம் வழங்கப்பட்டது.

**ஜோதிபா கோவிந்தபூலே**

Ø மகாராஷ்டிரத்தில் ஒரு தாழ்த்தப்பட்ட குடும்பத்தை சேர்ந்தவர்.

Ø ஜாதி ஆதிக்கத்திற்கும் பிராமணிய சக்திகளுக்கும் எதிராக தனது வாழ்நாள் முழுவதும் நீண்ட போராட்டத்தை மேற்கொண்டார்.

Ø 1873ல் ஜாதிமுறையை எதிர்த்து போராட **சத்தியசோதக் சமாஜம்** என்ற அமைப்பை தோற்றுவித்தார்.

Ø இவரும், இவருடைய மனைவியும் இணைந்து 1851ல் பூனாவில் **முதலாவது பெண்கள் பள்ளியை** நிறுவினார்.

**<u>இராமலிங்கஅடிகள்</u>**

- 1823ல் பிறந்தார்.
- ஆன்மீக வாழ்க்கையில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட இவர் வடலூருக்கு அருகில் 1858ல் கருங்குழி என்ற இடத்திற்கு சென்றார். பின்னாளில் வடலூரில் தனது இருப்பிடத்தை அமைத்துக் கொண்டார்
- 1865ல் **சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை** நிறுவினார்.
- **திருவருட்பா** என்ற நூலை இயற்றினார்.
- மற்ற படைப்புக்கள் - **மனுமுறை கண்ட வாசகம்**, **ஜீவகாருண்யம்**,
- 1870 இல் வடலூருக்கு அருகில் உள்ள மேட்டுக்குப்பம் என்ற இடத்திற்கு சென்று 1872 **இல் சத்தியஞானசபையை** கட்டத் தொடங்கினார்.
- கடவுளை ஜோதி வடிவில் வழிபடலாம் என்று மக்களுக்கு எடுத்துக் கூறினார்.

**<u>ஸ்ரீவைகுண்ட சுவாமிகள்</u>**

- 1809 ஆம் ஆண்டு தமிழ்நாடு கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சாமித்தோப்பு என்ற ஊரில் பிறந்தார்.
- இயற்பெயர் - முடிசூடும் பெருமாள்.
- முத்துக்குட்டி என்று அழைக்கப்பட்டார்.
- ஜாதிமுறை மற்றும் தீண்டாமைக்கு எதிராக போராடினார்.
- அவரது போதனைகள் காலவாக்கில் **அய்யா வழி** என பெயர்பெற்றது.
- தென்திருவாங்கூர் மற்றும் தெற்கு திருநெல்வேலி பகுதிகளில் இது வேகமாக பரவியது.
- இவர் இயற்றிய சமய நூல்கள் - **அகில திரட்டு அம்மாணை**, **அருள்நூல்**,

**Ø** பல இடங்களில் **நிழல்தங்கல்** என்ற வழிபாட்டு தளங்கள் கட்டப்பட்டன.

**ஈ.வே.ரா. பெரியார்**

**Ø** சிறந்த சீர்திருத்தவாதி.

**Ø** 1921ல் கள்ளுக்கடை மறியலின் போது தன் சொந்த தோப்பிலேயே 1000 தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தினார்.

**Ø** 1924ல் வைக்கம் அறப்போராட்டத்தில் கலந்து கொண்டார்.

**Ø** வ.வே.சு அய்யரின் சேரன்மாதேவி குருகுலத்தில் வருணாசிரம நடவடிக்கையை எதிர்த்தார்.

**Ø** 1925**ல் சுயமரியாதை இயக்கத்தை** தொடங்கினார்.

**Ø** திராவிடர்களின் முன்னேற்றம், பிராமணிய ஆதிக்கத்திற்கு எதிர்ப்பு, இந்து சமய மக்களின் வாழ்வில் அவர்கள் ஏற்படுத்தியிருந்த கட்டுப்பாடுகளை உடைத்தெறிதல் போன்றவையே சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய நோக்கங்கள்.

**Ø** கலப்புத் திருமணத்தை ஆதரித்தார்.

**Ø** சடங்குகள் இல்லாத பல திருமணங்களை அவரே முன் நின்று நடத்திவைத்தார். அத்தகைய திருமணம் **சுயமரியாதை திருமணம்** என்று அழைக்கப்பட்டது.

**Ø** **குடியரசு**, **புரட்சி**, **விடுதலை** போன்ற தமிழ் ஏடுகளை தொடங்கி அவற்றின் மூலம் தனது கருத்துகளை பெரியார் பரப்பினார்.

**Ø** பெரியாரின் அரும்பணிகளை பாராட்டி தமிழ்நாடு பெண்கள் மாநாட்டில் 1938ம் ஆண்டு ஈ.வே.ராவுக்கு **பெரியார் பட்டம்** வழங்கப்பட்டது.

**Ø** 27.06.1970 ம் ஆண்டு ஐநாவின் யுநெஸ்கோ நிறுவனம் தந்தை பெரியாரை **தெற்கு ஆசியாவின் சாக்ரடீஸ்** என பாராட்டி போற்றியது.

**முஸ்லீம் சீர்திருத்த இயக்கங்கள்**

Ø தொடக்கத்தில் மேலை நாட்டு கல்வியை முஸ்லீம்கள் புறக்கணித்ததால் அவர்களிடையே சீர்திருத்த இயக்கங்கள் சற்று தாமதமாகவே தோன்றின.

Ø அத்தகைய முதல் முயற்சி 1863ல் கல்கத்தாவில் தோற்றுவிக்கப்பட்ட **முகமதிய இலக்கிய கழகம்** ஆகும்.

Ø ஆங்கில கல்வியையும், மேலைநாட்டு அறிவியலையும் பரப்புவதே இதன் முக்கிய நோக்கம்

**அலிகார் இயக்கம்**

Ø தோற்றுவித்தவர் - **சர் சையது அகமதுகான்** (1817 - 1898)

Ø முஸ்லீம்களின் சமூக மற்’றும் கல்வி மேம்பாட்டுக்காக தோற்றுவிக்கப்பட்டது.

Ø முஸ்லீம்களிடையே தாராள கருத்துக்களை பரப்புவதற்காக 1866ல் முகமதியர் கல்விக்கழகத்தை தோற்றுவித்தார்.

Ø ஆங்கில கல்விக்கென 1875ல் அலிகாரில் ஒரு பள்ளியை நிறுவினார். இதுவே பின்னர் முகமதிய ஆங்கிலேய கீழ்த்திசை கல்லூரியாகவும் தற்போதைய **அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகமாகவும்** வளர்ச்சியடைந்தது.

**தியோபாண்ட் பிரிவு**

Ø முஸ்லீம் உலேமாக்களின் வைதீக பிரிவினரால் தோற்றுவிக்கப்பட்டதே தியோபாண்ட் இயக்கம்.

Ø இது ஒரு மறுமலர்ச்சி இயக்கம்.

Ø **இதன் இரண்டு முக்கிய குறிக்கோள்கள்**

1. குர்ரான் மற்றும் ஹாடிஸ் இல் உள்ளவாறு இஸ்லாமிய போதனைகளை முஸ்லீம்களிடையே பரப்புவது.

2. அந்நிய ஆட்சியாளர்களுக்கு எதிராக ஜிகாத் என்ற உரிமை போராட்டத்தை தொடர்வது.

Ø **முகமதுஉல்ஹாசன்** என்ற புதிய தலைவர் இப்பிரிவின் சமய கருத்துக்களில் அரசியல் மற்றும் அறிவார்ந்த சிந்தனைகளை புகுத்தினார்.

**சீக்கிய சீர்திருத்த இயக்கம்**

Ø பஞ்சாப்பில் சீக்கிய சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின.

Ø **பாபா தயாள் தாஸ்** என்பவர் **நிரங்காரி** இயக்கத்தை தோற்றுவித்தார்.

Ø கடவுளை உருவமற்றவராக வழிபடவேண்டும் என்று கூறினார்.

Ø **பாபாராம்சிங் நாம்தாரி** இயக்கத்தை நிறுவினார்.

**பார்சி சீர்திருத்த இயக்கம்**

Ø 1851ல் **பிர்துஞ்சி நவுரோஜி மற்றும் எஸ்.எஸ்.பெங்காலி** என்பவர்களால் பம்பாயில் பார்சி சமய சீர்திருத்த சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.

Ø பெண் கல்வியை அவர்கள் ஆதரித்தனர்.

Ø தங்கள் சமூகத்தில் நிலவிய திருமண சடங்குகளில் சீர்திருத்தம் கொண்டு வர அவர்கள் விரும்பினர்.

Ø **ஜகத் மித்ரா** என்ற மாத இதழை **நவ்ரோஜி** நடத்தி வந்தார்.

Ø 20-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் பார்சிகளில் பெரும்பாலானோர் முக்கியப் பொறுப்புகளை ஏற்று இந்தியாவின் வளர்ச்சிக்கு சிறப்பான தொண்டினை ஆற்றினர்.

*****

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு** : TNPSC **ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**)

**பாடம்** : **வரலாறு**

**பகுதி** : **இந்தியா சுதந்திரம் பெற்றது வரை**

©**காப்புரிமை** :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமை பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்**,

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# வரலாறு

## இந்தியா சுதந்திரம் பெற்றது வரை

### ஐரோப்பியர்கள் வருகை

- கி.பி. (பொ.ஆ) 1453 ல் துருக்கியர்களால் கான்ஸ்டாண்டிநோபிள் என்ற பகுதி கைப்பற்றப்பட்ட பிறகு இந்தியாவிற்கும், ஐரோப்பாவிற்குமான நிலவழி மூடப்பட்டது.
- துருக்கி வட ஆப்பிரிக்காவிலும், பால்கன் தீபகற்பத்திலும் நுழைந்தது.

### போர்ச்சுக்கல்

- ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் போர்ச்சுகல் மட்டும் இந்தியாவிற்கு புதிய கடல் வழியைக் கண்டுபிடிப்பதில் மிகவும் ஆர்வமாக இருந்தது.
- போர்ச்சுக்கீசிய இளவரசர் ஹென்றி பொதுவாக மாலுமி ஹென்றி என அறியப்படுகின்றார்.
- 1487 ஆம் ஆண்டு போர்ச்சுக்கீசிய மாலுமியான பார்த்தலோமியா டயஸ் தென்னாப்பிரிக்காவின் தெற்கு முனையை அடைந்தார்.
- மன்னர் இரண்டாம் ஜான் அவரை ஆதரித்தார்.

### வாஸ்கோடகாமா

- வாஸ்கோடகாமா தென்னாப்பிரிக்காவின் தெற்கு முனையை அடைந்து, அங்கிருந்து மொசாம்பிக் பகுதிக்குத் தனது பயணத்தைத் தொடர்ந்தார்.
- இந்திய மாலுமி ஒருவரின் உதவியோடு கி.பி.(பொ.ஆ.) 1498 ல் கள்ளிக்கோட்டையை அடைந்தார்.
- அவரை மன்னர் சாமரின் வரவேற்றார்.
- இரண்டாவது போர்ச்சுக்கீசிய மாலுமி பெட்ரோ அல்வாரிஸ் காப்ரல் என்பவர் வாஸ்கோடகாமாவின் கடல் வழியைப்

பின்பற்றி 13 கப்பல்களில் சில வீரர்களுடன் 1500 ஆம் ஆண்டு கள்ளிக்கோட்டையை வந்தடைந்தார்.

- வாஸ்கோடகாமா 1501 ல் 20 கப்பல்களுடன் இரண்டாவது முறையாக இந்தியா வந்தடைந்தார். அப்பொழுது கண்ணனூரில் ஒரு வர்த்தக மையத்தை நிறுவினார்.
- பின்னர் கள்ளிக்கோட்டை, கொச்சின் பகுதிகளிலும் வர்த்தக மையத்தை நிறுவினார்.
- இதனால் கோபம் கொண்ட மன்னர் சாமரின் போர்ச்சுக்கீசியரை தாக்கி, தோற்கடிக்கப்பட்டார்.
- பின்னர் கொச்சின் போர்ச்சுக்கீசிய கிழக்கிந்திய கம்பெனியின் முதல் தலைநகரமாயிற்று.
- 1524 ல் வாஸ்கோடகாமா மூன்றாவது முறையாக இந்தியா வந்தபொழுது நோய்வாய்ப்பட்டு டிசம்பர் 1524 ல் கொச்சியில் காலமானார்.

**<u>பிரான்சிஸ்கோ அல்மெய்டா</u>** <u>(1505-1509)</u>

- இந்தியாவில் இருந்த போர்ச்சுக்கீசிய பகுதிகளுக்கு 1505 -ல் அனுப்பப்பட்ட முதல் ஆளுநர் ஆவார்.
- இந்தியாவில் போர்ச்சுக்கீசிய கப்பற்படையை பலப்படுத்துவதே அல்மெய்டாவின் நோக்கமாக இருந்தது. அதற்காக அவர் பின்பற்றிய கொள்கை “ நீலநீர்க்கொள்கை” எனப்பட்டது.

**<u>அல்போன்ஸா -டி-அல்புகர்க்</u>** <u>(1509-1515)</u>

- இந்தியாவில் போர்ச்சுக்கீசிய அதிகாரத்தை உண்மையில் நிறுவியவர் அல்போன்ஸா -டி-அல்புகர்க் ஆவார்.
- அவர் பிஜப்பூர் சுல்தானிடமிருந்து நவம்பர் 1510 ல் கோவாவைக் கைப்பற்றினார்.

**<u>நினோ-டி-குன்கா</u>** <u>(1529-1538)</u>

- அல்புகர்க்குவிற்குப் பிறகு கவர்னரான நினோ-டி-குன்கா 1530-ல் தலைநகரை கொச்சியிலிருந்து கோவாவிற்கு மாற்றினார்.

- 1534-ல் குஜராத்தின் பகதுார்ஷாவிடமிருந்து பசீன் பகுதியைக் கைப்பற்றினார்.
- போர்ச்சுக்கீசியர் இந்தியாவில் புகையிலை சாகுபடியை அறிமுகப்படுத்தினர்.
- 1556-ல் போர்த்துக்கீசியரால் கோவாவில் அச்சு இயந்திரம் அமைக்கப்பட்டது.
- அச்சு இயந்திரத்தின் உதவியால் ஓர் ஐரோப்பிய எழுத்தாளர் 1563ல் கோவாவில் “இந்திய மருத்துவ தாவரங்கள்” என்ற நூலை அச்சிட்டு வெளியிட்டார்.
- 17 ஆம் நூற்றாண்டில் போர்ச்சுக்கீசிய அதிகாரம் படிப்படியாக டச்சுவிடம் வீழ்ச்சியடைந்தது.

**டச்சுக்காரர்கள்**

- டச்சுக்காரர்கள் இந்தியாவிற்கு வந்தபிறகு அவர்களின் வர்த்தக மையத்தை மசூலிப்பட்டினம் என்ற இடத்தில் நிறுவினர்.
- இந்தியப் பொருட்களான பட்டு, பருத்தி, இண்டிகோ, அரிசி, மற்றும் அபினி ஆகியவை டச்சுக்காரர்கள் வர்த்தகம் செய்த பொருட்களாகும்.
- 1502 முதல் பழவேற்காட்டின் மீது கட்டுப்பாட்டை ஏற்படுத்திய போர்ச்சுக்கீசியர்கள், டச்சுக்காரர்களால் தங்களின் ஆதிக்கத்தை இழந்தனர்.
- பழவேற்காட்டில் டச்சுக்காரர்கள் 1613-ல் கெல்டிரியா கோட்டையைக் கட்டினர்.
- இந்தக் கோட்டை ஒரு காலத்தில் டச்சு அதிகார மையத்தின் இருப்பிடமாக இருந்தது.
- நாகப்பட்டினம், புன்னக்காயல், பரங்கிப்பேட்டை(PORTO NOVO) கடலூர் மற்றும் தேவனாம்பட்டினம் ஆகியன டச்சுக்காரர்களின் கோட்டைகள் மற்றும் கைப்பற்றிய பகுதிகளாகும்.

## ஆங்கிலேயர்கள்

- இங்கிலாந்து இராணி எலிசபெத் கிழக்கிந்திய நாடுகளுடன் வர்த்தகம் செய்ய கவர்னர் மற்றும் லண்டன் வர்த்தகர்கள் நிறுவனத்திற்கு 1600 டிசம்பர் 31 அன்று ஒரு அனுமதி பட்டயம் வழங்கினார்.
- 1608-ஆம் ஆண்டு ஜஹாங்கீர் அவைக்கு மாலுமி வில்லியம் ஹாக்கின்ஸ் சில சலுகைகளைப் பெற அனுப்பி வைக்கப்பட்டார்.
- ஆங்கிலேயர்கள் தங்களது முதல் வணிக மையத்தை வங்காள விரிகுடா கடற்கரையில் உள்ள மசூலிப்பட்டினத்தில் 1611-ல் நிறுவினர்.
- இது கோல்கொண்டா அரசின் ஒரு முக்கிய துறைமுகமாகும்.
- 1639-ல் பிரான்சிஸ் டே என்ற ஆங்கில வணிகர் சந்திரகிரி மன்னரான சென்னப்ப நாயக்கர் என்பவரிடமிருந்து மெட்ராசை குத்தகைக்குப் பெற்றார்.
- அங்கு ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி புனித ஜார்ஜ் கோட்டை என அழைக்கப்படும் தனது புகழ்வாய்ந்த வணிக மையத்தை நிறுவியது.
- 1690-ஆம் ஆண்டு சுதாநுதி என்ற இடத்தில் ஜாப் சார்னாக் என்பவரால் ஒரு வர்த்தகமையம் நிறுவப்பட்டது. சுதாநுதி, காளிகட்டம் மற்றும் கோவிந்தபூர் ஆகிய மூன்று கிராமங்களின் ஜமீன்தாரி உரிமையை 1698-ல் கிழக்கிந்திய கம்பெனி பெற்றது.
- 1757-ல் பிளாசிப் போர் மற்றும் 1764-ல் பக்சார் போருக்குப் பிறகு ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனி ஓர் அரசியல் சக்தியாக மாறியது.

## டேனியர்கள்

- டென்மார்க் அரசர் நான்காம் கிரிஸ்டியன் 1616 மார்ச் 17-ல் ஒரு பட்டயத்தை வெளியிட்டு டேனிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தை உருவாக்கினார்.

- அவர்கள் 1620-ல் தரங்கம்பாடி (தமிழ்நாடு), 1676-ல் செராம்பூர்(வங்காளம்) ஆகிய இடங்களில் குடியேற்றங்களை நிறுவினர்.
- செராம்பூர், டேனியர்களின் இந்தியத் தலைமையிடமாக இருந்தது.
- தரங்கம்பாடியை டேனியர்கள் டானஸ்பெர்க் என அழைத்தனர்.
- சீகன்பால்கு என்பவரை டென்மார்க்கின் அரசர் இந்தியாவிற்கு அனுப்பினார்.
  - அவர் தரங்கம்பாடியில் ஒரு அச்சுக் கூடத்தை நிறுவினார்.
- பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம், மன்னர் பதினான்காம் லூயியின் அமைச்சரான கால்பர்ட் என்பவரால் 1664-ல் உருவாக்கப்பட்டது.
- வியாபாரத்திற்காக இந்தியாவிற்கு வருகை தந்த நாடுகளுள் கடைசி ஐரோப்பிய நாடு பிரான்சு ஆகும்.
- இந்தியாவில் முதல் பிரெஞ்சு வணிக மையத்தை கரோன் என்பவர் சூரத் நகரில் நிறுவினார்.
- 1669-ல் மார்காரா என்பவர் கோல்கொண்டா சுல்தானின் அனுமதி பெற்று பிரான்சின் இரண்டாவது வர்த்தக மையத்தை மசூலிப்பட்டினத்தில் நிறுவினார்.
- 1742-ல் பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனியின் ஆளுநராக ஜோசப் பிராங்காய்ஸ் டியூப்ளே என்பவர் நியமனம் செய்யப்பட்டார்.

**<u>கிராம சமூகமும் வாழ்க்கை முறையும்</u>**

- காலனி ஆதிக்கத்திற்கு முன் இந்தியப் பொருளாதாரமானது வேளாண்மையை அடிப்படையாக கொண்ட பொருளாதாரமாக இருந்தது.
- இக்காலத்தில் வேளாண்மை மக்களின் முதல்நிலைத் தொழிலாக இருந்தது.
- நிலையான நில வருவாய் திட்டம், மகல்வாரி திட்டம், இரயத்துவாரி திட்டம் என்னும் மூன்று பெரிய நிலவருவாய்

மற்றும் நில உரிமை திட்டத்தை ஆங்கில அரசு இந்தியாவில் அறிமுகப்படுத்தியது.

**<u>ஆங்கில ஆட்சியின் கீழ் நிலவருவாய் திட்டங்கள்</u>**

- நிலையான நில வருவாய் திட்டம் → காரன்வாலிஸ் பிரபு
- இரயத்வாரி முறை → தாமஸ் மன்றோ
- மகல்வாரி முறை → வில்லியம் பெண்டிங் பிரபு

**<u>விவசாயிகளின் புரட்சிகள்</u>**

- Ø சந்தால் கலகம் (1855-1956)
- Ø இண்டிகோ கலகம் (அவுரி புரட்சி -1859-1960)
- Ø பாப்னா கலகம் (1873-1976)
- Ø தக்காண கலகம் (1875)
- Ø பஞ்சாப் விவசாயிகள் இயக்கம் (1890 - 1900)
- Ø சம்பரான் சத்தியாகிரகம் (1917-1918)

# வர்த்தகத்திலிருந்து பேரரசு வரை

- 15-ஆம் நூற்றாண்டில் நிலவழியாகவும், கடல் வழியாகவும், புதிய நிலவியல் கண்டுபிடிப்புகளின் சகாப்தமாக ஐரோப்பா விளங்கியது.
- 1498-ஆம் ஆண்டு போர்ச்சுகல் நாட்டைச் சேர்ந்த மாலுமி வாஸ்கோடகாமா ஐரோப்பாவிலிருந்து இந்தியா வருவதற்கான புதிய கடல்வழியை கண்டுபிடித்தார்.

## ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி நிறுவப்படுதல்

### பிளாசிப்போர்

- 1757- ஜூன்-23
- சிராஜ்-உத்-தெளலா, பிரெஞ்ச் கூட்டணி மற்றும் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கும் இடையே நடைபெற்றது.
- ஆங்கிய கிழக்கிந்திய கம்பெனியின் படைகள் வெற்றி பெற்றன.
- பிளாசிப்போர் வெற்றி ஆங்கிலேயரது அரசியல் அதிகாரத்தை இந்தியாவில் தொடங்கி வைத்தது மட்டுமல்லாமல், அடுத்த இரண்டு நூற்றாண்டுகளுக்கு அவர்களது ஆதிக்கத்தை நீடிக்கவும் செய்தது.


### பக்சார் போர்

- 1764- அக்டோபர் 22.
- சுஜா-உத்-தெளலா, இரண்டாம் ஷா-ஆலம், மீர்காசிம் / ஆங்கிலப் படைத்தளபதி ஹெக்டர் மன்றோ இடையே நடைபெற்றது.
- ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி வெற்றி பெற்றது.
- 1765 பிப்ரவரி 20-ல் நடந்த அலகாபாத் உடன்படிக்கையின் படி பக்சார் போர் முடிவுக்கு வந்தது.

- இராபர்ட் கிளைவ் அயோத்தி நவாப் சுஜா-உத்-தௌலா உடனும், முகலாயப் பேரரசர் இரண்டாம் ஷா-ஆலத்துடனும் தனித்தனியாக ஒப்பந்தம் செய்து கொண்டார்.
- இவ்வாறாக இராபர்ட் கிளைவ் வங்காளத்தில் இரட்டை ஆட்சி முறையை கொண்டு வந்தார்.

## கர்நாடகப் போர்கள்

1746 முதல் 1763 வரை நடைபெற்றது. இப்போர்களின் விளைவாக ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் அரசியல் அதிகாரம் வலுப்பெற்றது.



**<u>அடையாறு போர்</u>**

- 1746
- சென்னையின் அடையாறு நதிக்கரையில் அமைந்துள்ள சாந்தோம் என்ற இடத்தில் கர்நாடக நவாப் அன்வர்தீனுக்கும், பிரெஞ்ச் படைக்கும் இடையே இப்போர் நடைபெற்றது.
- நன்கு பயிற்சி பெற்ற ஐரோப்பிய படை இந்தியப் படையை வெற்றி பெற்று தங்கள் மேலாண்மையை நிலைநாட்டிய முதல் நிகழ்வு இதுவே ஆகும்.

**<u>ஆம்பூர் போர்</u>**

- 1749 ஆகஸ்ட் 3.
- பிரெஞ்ச் கவர்னர் டியூப்ளே, சந்தா சாகிப், முசாபர் ஜங் ஆகியோரின் கூட்டுப் படைகளால் கர்நாடக நவாப் அன்வர்தீன் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார்.
- இதன் மூலம் டியூப்ளேயின் அதிகாரம் உச்ச நிலையை அடைந்தது.

**<u>ஆற்காட்டுப் போர்</u>**

- 1751
- ஆங்கிலப் படைக்கும், பிரெஞ்ச் படைக்கும் இடையே நடைபெற்றது.
- ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர்.
- இத்தோல்வியால் பிரான்ஸ் நாட்டு அரசாங்கம் டியூப்ளேவை பாரிசுக்கு திரும்ப அழைத்தது.

**<u>வந்தவாசிப் போர்</u>**

- 1760 சனவர் 22.

- ஜெனரல் அயர் கூட் தலைமையிலான ஆங்கிலேயப் படைக்கும் லாலி தலைமையிலான பிரெஞ்சுப் படைக்கும் இடையே நடைபெற்றது.
- ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர்.

**முதல் ஆங்கிலேய மைசூர் போர்**

- 1767 - 1769
- ஆங்கிலப் படைக்கும் ஹைதாரபாத் நிஜாமுக்கும் இடையே நடைபெற்றது.
- ஆங்கிலப் படை தோல்வி.
- 1769 ஏப்ரல் 4-ல் மதராஸ் உடன்படிக்கை போரை முடிவுக்கு கொண்டு வந்தது.

**இரண்டாம் ஆங்கிலேய மைசூர் போர்**


- 1780- 1784
- ஆங்கிலேயருக்கும், ஹைதர் அலி, ஹைதாரபாத் நிஜாம், மராத்தியர்களுக்கும் (முக்கூட்டணி) இடையே நடைபெற்றது.
- ஆங்கிலேயப் படை வெற்றி பெற்றது.
- 1784 மார்ச் 7-இல் மங்களூர் உடன்படிக்கை போரினை முடிவுக்கு கொண்டு வந்தது.

**மூன்றாம் ஆங்கிலேய மைசூர் போர்**

- 1790-1792
- ஆங்கிலேயருக்கும், திப்பு சுல்தானுக்கும் இடையே நடைபெற்றது.
- ஆங்கிலப் படை வெற்றி பெற்றது.
- 1792-இல் ஸ்ரீரங்கப்பட்டின உடன்படிக்கை போரை முடிவுக்கு கொண்டு வந்தது.

**<u>நான்காம் ஆங்கிலேய மைசூர் போர்.</u>**

- 1799.
- ஆங்கிலேயருக்கும், திப்பு சுல்தானுக்கும் இடையே நடைபெற்றது.
- ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர்.
- திப்பு சுல்தானின் மரணம் இப்போரினை முடிவுக்கு கொண்டு வந்தது.




**<u>இந்தியாவில் ஆங்கிலேயரின் நிர்வாக அமைப்பு</u>**

- ஆங்கிலேயரின் இந்திய நிர்வாக அமைப்பு நான்கு முதன்மை நிறுவனங்களாக இயங்கியது.
- அவை குடிமைப்பணிகள், இராணுவம், காவல் மற்றும் நீதித்துறை ஆகும்.

**<u>குடிமைப்பணிகள்</u>**

- சிவில் சர்வீஸ் (குடிமைப் பணிகள்) என்ற வார்த்தை முதன் முதலில் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியால் பயன்படுத்தப்பட்டது.

- Ø சட்டங்களை முறையாக செயல்படுத்துதல், வரி வசூலித்தல் ஆகியன குடிமைப் பணியில் முதன்மைப் பணியாக இருந்தது.
- Ø 1786-இல் தலைமை ஆளுநராக காரன்வாலிஸ் பதவியேற்ற போது தனியார் வணிகத்திற்கு எதிராக சட்டங்களை இயற்றினார்.
- Ø 1798-இல் இந்திய கவர்னர் ஜெனரலாக பதவியேற்றுக் கொண்ட வெல்லெஸ்லி பிரபு அரசு ஊழியர்களுக்குத் தேவையான பயிற்சியை அறிமுகப்படுத்தினார்.
- Ø 1800-இல் கல்கத்தாவில் வில்லியம் கோட்டையில் மொழி, இலக்கியம், அறிவியல் ஆகிய துறையில் பயிற்சி வழங்குவதற்காக ஒரு கல்லூரியை நிறுவினார். கம்பெனியின் இயக்குநர்கள் இதனை ஏற்க மறுத்து 1806-இல் இங்கிலாந்தில் உள்ள ஹெய்லிபரி என்ற இடத்தில் கிழக்கிந்தியக் கல்லூரியை நிறுவினர்.
- Ø போட்டித்தேர்வு மூலம் அரசு ஊழியர் நியமனம் என்ற கருத்தை முதன் முதலில் 1833-ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் அறிமுகப்படுத்தியது.
- Ø திறந்த முறையிலான போட்டித்தேர்வு முறையில் கம்பெனி ஊழியர்களை தேர்ந்தெடுப்பது 1853-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறை 1858-ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தால் உறுதி செய்யப்பட்டது.
- Ø போட்டித்தேர்வுகளுக்கான அதிக பட்ச வயது 23 ஆக நிர்ணயிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1858-ஆம் ஆண்டு ஹெய்லிபரியில் இருந்த கிழக்கிந்திய கல்லூரி அகற்றப்பட்டது.
- Ø குடிமைப் பணிக்கு ஆட்களை தேர்வு செய்யும் பொறுப்பு குடிமைப்பணியாளர் தேர்வாணையம் வசமானது.
- Ø 1860-ஆம் ஆண்டு ஒரு ஒழுங்குமுறை ஆணையம் மூலம் தேர்வெழுத அதிகபட்ச வயது 22 ஆக குறைக்கப்பட்டது. மேலும், 1866-இல் 21- ஆகவும் 1876-இல் 19 ஆகவும் குறைக்கப்பட்டது.
- Ø 1861-ஆம் ஆண்டு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் இந்திய ஆட்சிப் பணி சட்டம் இயற்றப்பட்டது. வயது வரம்பு குறைத்தல் மற்றும் லண்டனுக்கு சென்று தேர்வு எழுதுதல் ஆகிய காரணங்களால்

வசதி படைத்த இந்தியர்கள் மட்டுமே ஐ.சி.எஸ் தேர்வு எழுதக் கூடிய சூழ்நிலை உருவானது.

- 1869-இல் சுரேந்திரநாத் பானர்ஜி, ரமேஷ் சந்திர தத் மற்றும் பிகாரி லால் குப்தா ஆகிய மூன்று இந்தியர்கள் ஐ.சி.எஸ் தேர்வில் வெற்றி பெற்றனர்.
- 1863-இல் ஐ.சி.எஸ் தேர்வில் தேர்ச்சி பெற்ற முதல் இந்தியர் சத்தியேந்திரநாத் தாகூர். இவர் கவிஞர் இரவீந்திரநாத் தாகூரின் மூத்த சகோதரர் ஆவார்.
- 1892-இல் ஐ.சி.எஸ் தேர்விற்கான வயதுவரம்பு 21-இல் இருந்து 23 ஆக உயர்த்தப்பட்டது.
- 1912-இல் அரசு பணியை பற்றி ஆராய்வதற்கு இஸ்லிங்டன் பிரபு என்பவரின் தலைமையில் ஒரு அரச ஆணையம் (ராயல் கமிஷன்) நிறுவப்பட்டது.
- இதன் உறுப்பினர்களாக இந்தியர்களான கோபால கிருஷ்ண கோகலே, சர் அப்துர் ரஹிம் மற்றும் நான்கு ஆங்கிலேயர்கள் இடம்பெற்றிருந்தனர்.
- 1918-இல் இந்திய ஆட்சிப்பணியில் 33 சதவீத இந்தியர்கள் தேர்வு செய்ய வேண்டும் என்றும் படிப்படியாக இவற்றை அதிகரிக்கவும் மாண்டேகு மற்றும் செம்ஸ் போர்டு ஆகியோர் பரிந்துரைத்தனர்.
- 1923-இல் ஏற்படுத்தப்பட்ட மற்றொரு அரச ஆணையத்திற்கு லீ பிரபு தலைவராக நியமிக்கப்பட்டார். இது இந்திய ஆட்சிப்பணி, இந்திய காவல்பணி, இந்திய காடுகள் பணி ஆகிய அனைத்து நியமனங்களும் இந்தியாவுக்கான அரசு செயலரின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது.
- அரசு பணியாளர் தேர்வாணையம் ஒன்றை உடனடியாக நிறுவுவதற்கும், லீ தலைமையிலான குழு பரிந்துரை செய்தது.
- 1935-ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் மத்தியில் கூட்டாட்சி அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒன்றும், மாகாணங்களில் - மாகாண அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒன்றும் உருவாக வழிவகை செய்தது.

**இராணுவம்**

- இந்தியாவின் பிரிட்டிஷ் நிர்வாகத்தின் இரண்டாவது முக்கியத் தூணாக விளங்கியது.
- கிழக்கிந்திய கம்பெனி தன்னுடைய இராணுவத்திற்கு ஆட்களை சேர்த்தது. அதற்கு சிப்பாய் இராணுவம் என்று பெயர்.
- இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியை நிறுவுவதிலும், விரிவுபடுத்துவதிலும் இராணுவத்தின் பங்களிப்பு சிறப்பானதாகும்.

**காவல்துறை**

- இந்தியாவில் முதன்முதலில் காவல்துறையை உருவாக்கியவர் காரன்வாலிஸ் பிரபு ஆவார்.
- ஜமீன்தார்களை காவல் பணிகளிலிருந்து விடுவித்த காரன்வாலிஸ் 1791-இல் முறையான காவல்துறையை உருவாக்கினார்.
- 1808-இல் மாவட்ட கண்காணிப்பாளர் பதவி நியமிக்கப்பட்டது.

**நீதித்துறை அமைப்பு**

- 1772-இல் இரட்டை ஆட்சி முறை ஒழிக்கப்பட்டு வரிவசூல் செய்வதையும், நீதி வழங்கும் அதிகாரத்தையும் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி ஏற்றுக்கொண்டது.
- அதன் விளைவாக சிவில் நீதிமன்றம் என்று அழைக்கப்பட்ட திவானி அதாலத் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் என்று அழைக்கப்பட்ட பௌஜ்தாரி அதாலத் ஆகியன ஏற்படுத்தப்பட்டன.
- 1773-ஆம் ஆண்டு ஒழுங்குமுறை சட்டத்தின் படி கல்கத்தாவில் ஒரு உச்சநீதிமன்றம் அமைக்கப்பட்டது.
- 1801-இல் மதராஸிலும், 1823-இல் பம்பாயிலும் உச்சநீதிமன்றங்கள் நிறுவப்பட்டன.
- 1832-இல் வில்லியம் பெண்டிங் பிரபு ஜூரி முறையை வங்காளத்தில் கொண்டு வந்தார்.
- வங்காளத்தில் வில்லியம் கோட்டையில் முதல் உச்ச நீதிமன்ற நீதிபதி சர் எலிஜா இம்பே ஆவார்.

- மதராஸ் உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய தலைமை நீதிபதி சர் திருவாரூர் முத்துச்சாமி ஆவார்.

## துணைப்படைத் திட்டம்

- 1798- இல் வெல்லெஸ்லி பிரபுவால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- வெல்லெஸ்லி பிரபு "இந்தியாவில் ஆங்கிலேய பேரரசு" என்பதை " இந்தியாவின் ஆங்கிலேய பேரரசு" என்று மாற்றினார்.
- துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக்கொண்ட முதல் நாடு ஹைதராபாத். (1798)

## வாரிசு இழப்புக் கொள்கை

- 1848-இல் டல்ஹௌசி பிரபுவால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1857-ஆம் ஆண்டு பெரும் புரட்சிக்கு இக்கொள்கை முக்கிய காரணமாக அமைந்தது.
- வாரிசு இழப்புக் கொள்கையின் மூலம் டல்ஹௌசி பிரபு இணைத்துக்கொண்ட பகுதிகள் - சதாரா (1848), ஜெய்த்பூர், சம்பல்பூர்(1849), பகத்(1850), உதய்ப்பூர்(1852), ஜான்சி(1853) மற்றும் நாக்பூர்(1854)

## இந்தியாவில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றதற்கான காரணங்கள்

- மிகப்பெரிய கடல் வலிமை.
- நெசவுத் தொழில் வளர்ச்சி
- அறிவியல் ரீதியாக பிரிக்கப்பட்ட தொழிலாளர்கள்
- பொருளாதார வளர்ச்சி மற்றும் ஆங்கிலேயரின் திறமைமிக்க இராஜ தந்திரம்.
- இந்திய வணிகர்களிடையே நிலவிய பாதுகாப்பின்மை உணர்வுகள், இந்திய அரசர்களின் சமத்துவமின்மை மற்றும் அறியாமை.

*************

**<u>வாரன்ஹேஸ்டிங்ஸ்</u>** <u>(1772-1785)</u>

- ஆங்கிலேயர் கிழக்கிந்திய வணிகக்குழு- 1600-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் நாள் நிறுவப்பட்டது.
- இதற்கான அரசப் பட்டயத்தை இங்கிலாந்து அரசி **முதலாம் எலிசபெத்** வழங்கினார்.
- 1639-**ல் பிரான்சிஸ் டே** என்பவர் சென்னையை நிறுவி அங்கு **செயின்ட் ஜார்ஜ் கோட்டையை** அமைத்தார்.
- 1690-**ஆம் ஆண்டு ஜாப் சார்னாக்** என்ற வணிகக் குழுவின் **முகவர் சுதநூதி**, **கோவிந்தபூர்**, **காளிகட்டம்** என்ற மூன்று கிராமங்களை விலைக்கு வாங்கினார்.
- 1772-ஆம் ஆண்டு வணிகக் குழு வில்லியம் கோட்டையின் ஆளுநராக **வாரன் ஹேஸ்டிங்கை** நியமித்தது.

**<u>வாரன் ஹேஸ்டிங்கின் சீர்திருத்தங்கள்</u>**

- **இராபர்ட் கிளைவ்** அறிமுகப்படுத்திய **இரட்டை ஆட்சி முறை** ஒழிக்கப்பட்டது.
- வரி வசூல் செய்யும் பொறுப்பை வணிக குழுவே ஏற்றது.
- கருவூலம் **மூர்ஷிதாபாத்திலிருந்து கல்கத்தாவிற்கு** மாற்றப்பட்டது.
- **கல்கத்தா** 1772-**இல்** வங்காளத்தின் தலைநகராகியது.
- **தஸ்தக்குகள்** எனப்பட்ட இலவச அனுமதிச் சீட்டுக்களை ஒழித்தார்.
- கல்கத்தாவில் ஒரு வங்கி தோற்றுவிக்கப்பட்டது.

**ஒழுங்குமுறை சட்டம்**(1773)

- இச்சட்டம் வணிகக்குழுவின் அரசியல் அமைப்பு வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் ஆகும்.
- 1774-ஆம் ஆண்டு அரச பட்டயத்தின் படி உச்சநீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டது.
- தலைமை ஆளுநருக்கு போதிய அதிகாரம் அளிக்கப்படவில்லை.
- **ரோஹில்லா போர் நடைபெற்ற ஆண்டு**(1774)
- மாரத்திய பகுதிகளுக்கும், அயோத்திக்கும் இடையே இருந்த ஒரு சிறு அரசு ரோகில்கண்ட். இதன் ஆட்சியாளர் **ஹபிஸ் ரகமத் கான்**.
- பின்னர் 1782 -ல் வாரன் ஹேஸ்டிங்ஸ் மற்றும் மகாஜதி சிந்தியா இருவருக்குமிடையே சால்பாய் உடன்படிக்கை கையெழுத்தாயிற்று.

- **பிட் இந்தியச் சட்டம் ஏற்படுத்தப்பட்ட ஆண்டு** 1784.
- வங்காள நவாப்பின் அன்னையும், பாட்டியும் **அயோத்தி பேகம்கள்** எனப்பட்டனர்.

**காரன் வாலிஸ் பிரபு** (1786-1793)

- வாரன்ஹேஸ்டிங்ஸ் பிரபுவைத் தொடர்ந்து 1786-ல் தலைமை ஆளுநராக பதவியேற்றார்.
- மூன்றாம் மைசூர் போர்
- நடந்த ஆண்டு (1790- 1792)
- ஆங்கிலேயருக்கும் .திப்பு சுல்தானுக்கும் இடையே நடைபெற்றது.
- ஸ்ரீரங்கப்பட்டினம் உடன்படிக்கை வாயிலாக போர் முடிவு.
- இந்திய ஆட்சி பணித்துறைக்கு அடித்தளம் அமைத்தவர்
- நீதித்துறையை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டவர், **நீதிபதி சர் வில்லயம்ஸ் ஜோன்ஸ்**.

- காரன் வாலிஸ் தனது சகப் பணியாளரான **ஜார்ஜ் பார்லோ** என்பவரின் உதவியுடன் ஒரு முழுமையான சட்டத்தை உருவாக்கினார்.
- காரன் வாலிஸ் பிரபுவின் மிக முக்கியமான நிர்வாக சீர்திருத்தம் வங்காளத்தில் அறிமுகப்படுத்திய நிலையான **நிலவரித் திட்டமாகும்**.

**வெல்லஸ்லிப் பிரபு** (1798-1805)

- **ரிச்சர்ட் கோலிவெல்லஸ்லி** தலைமை ஆளுநராக நியமிக்கப்பட்டது பிரிட்டிஷ் இந்திய வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாகும்.
- பேரரசு கொள்கையுடைய அவர் தம்மை “ **வங்கப்புலி**” என்று கூறிக்கொண்டார்.
- பிரிட்டிஷ் இந்தியப் பேரரசில் ஒன்றை உருவாக்க வேண்டும் என அவர் பின்பற்றிய திட்டம் **துணைப்படைத் திட்டம்**.
- துணைப்படைத் திட்டம் 1798-**இல் ஹைதாரபாத்தில்** அறிமுகப்படுத்தப் பட்டது.
- துணைப்படைத்திட்டத்திற்கு உட்படாத ஒரே பகுதி **மாராத்தியம்**.
- மாரத்தியர்களின் தலைவர் **நானா பட்னாவிஸ்**.
- **பசீன் உடன்படிக்கை ஏற்பட்ட ஆண்டு** 1802.
- பசீன் உடன்படிக்கை துணைப்படைத்திட்டத்தின் மணிமகுடம்.
- இரண்டாம் மாராத்திய போர் நடைபெற்ற ஆண்டு 1803-1805.

**ஹேஸ்டிங்ஸ் பிரபு** (1813-1823)

- இந்தியாவில் பிரிட்டிஷ் அரசை முதன்மையானதாக உண்மையில் மாற்றியவர் இவரே.
- **சகௌலி உடன்படிக்கை ஏற்பட்ட ஆண்டு** 1816.
- 1824-**ல் பிண்டாரிகளை** ஒடுக்கினார்.

- மாராத்திய கூட்டினணயை முறியடித்தார்.
- 3-ஆம் மாராத்திய போர் நடைபெற்ற ஆண்டு. 1817.
- ஆங்கிலம் மற்றும் மேலை நாட்டு அறிவியல் கல்விக்காக **கல்கத்தாவில்** பொதுமக்களால் **இந்து கல்லூரி** 1817-**ல்** நிறுவப்பட்டது.
- இக்கல்லூரியின் புரவலராக இருந்தவர் **ஹேஸ்டிங்ஸ் பிரபு**.
- 1818-ல் சீராம்பூர் சமயபரப்பாளரான **மார்ஷ்மேன்** என்பவரால் "**சமாச்சார் தார்பன்**" என்ற வங்காள மொழி வார இதழ் தோற்றுவிக்கப்பட்டது.
- **ஹேஸ்டிங்ஸ் பிரபு பம்பாய் மாகாணத்தை** உருவாக்கினார்.
- மாரத்தியரை வீழ்த்தினார்.
- **கூர்க்கர்களின்** கொட்டடத்தை நசுக்கினார்.

**<u>வில்லியம் பெண்டிங் பிரபு</u>** <u>(1828-1835)</u>

- 1803-**ஆம்** அண்டு சென்னையின் ஆளுநராக நியமனம் செய்யப்பட்டார்.
- இந்திய மக்களின் நலனைப் பேணுவதே இந்தியாவில் ஆளும் பிரிட்டிஷாரின் தலையாய கடமை என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்ட முதல் தலைமை ஆளுநர்.
- 1833- **ஆம் ஆண்டு பட்டயச் சட்டம்**. கிழக்கிந்திய வணிகக்குழுவின் அதிகார வரம்பெல்லையை வரையறை செய்தது. இச்சட்டத்தின் விதிகள் பெந்தாம் என்பவரின் தாராள மற்றும் பயன்பாட்டு தத்துவங்களை உள்ளடக்கியது.
- இந்தியாவின் **முதல் தலைமை ஆளுநர்** வில்லியம் பெண்டிங் பிரபு.
- தலைமை ஆளுநரின் ஆலோசனை குழுவில் நியமிக்கப்பட்ட **முதல் சட்ட உறுப்பினர் டி**.**பி**.**மெக்காலே**.

**சீர்திருத்தங்கள்**

- இராணுவத்துறையில் நடைமுறையில் இருந்த இரட்டை படி முறையை ஒழித்தார்.
- கீழ்மட்ட நீதிமன்றங்களில் அந்தந்த பகுதியின் மொழிகளிலேயே வழக்குகள் நடைபெற அனுமதித்தார்.
- உயர்மட்ட நீதிமன்றங்களில் பாரசீக மொழிக்கு பதிலாக ஆங்கிலம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- சதிமுறையை ஒழித்தார்.
- தக்கர்களை ஒடுக்கினார். தக்கர்களுக்கு எதிரான நடவடிக்கையை கர்னல் சீலிமேன் என்பவர் தொடங்கி இப்பணியினை திறமையுடன் செய்த காரணத்தால் " தக்கீ சிலீமேன்" என்று அழைக்கப்பட்டார்.
- பெண் சிசு கொலை தடுப்பு நடவடிக்கை மேற்கொண்டார்.
- ஆங்கில கல்வி முறையை அறிமுகப்படுத்தினார்.
- கல்கத்தாவில் மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டினார்.

**டல்ஹௌசி பிரபு** ( 1848- 1856)

- டல்ஹௌசி ஆட்சிக்காலத்தின் குறிப்பிடத்தக்க அம்சம் அவர் நடத்திய நாடு இணைப்பு கொள்கையே ஆகும்.
- வாரிசு இழப்புக் கொள்கையை கொண்டு வந்தார்.
- இக்கொள்கையை பயன்படுத்தி 1848-ல் "சதாரா" பிரிட்டிஷ் ஆட்சிப் பகுதியுடன் இணைத்துக்கொண்டார்.
- 1854-இல் ஜான்சி, நாக்பூர் இணைக்கப்பட்டது.
- மத்திய மகாணங்களில் பெரும்பகுதி பிரிட்டிஷ் ஆட்சியின் கட்டுப்பாட்டில் வந்தது. 1861-இல் முதன்மை ஆணையரின் தலைமையில் நிர்வகிக்கப்பட்டது.

- 1857- ஆம் ஆண்டு பெரும் கலகத்திற்கு பிறகு வாரிசு இழப்பு கொள்கை திரும்ப பெறப்பட்டது.

**சீர்திருத்தங்கள்**

- இந்தியாவின் வரைபடத்தையே மாற்றியமைத்தார்.
- சீரமைக்கப்படாத அமைப்பு என்ற திட்டத்தை அமைத்தார்.
- இரயில் பாதைகளை அறிமுகப்படுத்தினார்.
- 1853-இல் இரயில்வே அறிக்கை ஒன்றை தானே தயாரித்தார்.
- பம்பாயிலிருந்து - தானே வரை செல்லும் முதல் இரயில் பாதை 1853-இல் தொடங்கப்பட்டது.
- கல்கத்தாவையும், ராணிகஞ்ச் நிலக்கரி சுரங்கத்தையும் இணைக்கும் இரயில் பாதை 1854-ஆம் ஆண்டிலும், சென்னை அரக்கோணம் இடையிலான இரயில் பாதை 1856-ஆம் ஆண்டிலும் தொடங்கப்பட்டன.
- (உலகின் முதல் இரயில் பாதை 1825-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் தொடங்கப்பட்டது)
- தபால் தந்தி முறையை அறிமுகப்படுத்தினார்.
- 1852-ஆம் ஆண்டு ஓ ஷாகன்னசே என்பவர் தந்தி துறையின் முக்கிய கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.
- கல்கத்தா, பெஷாவர், பம்பாய், சென்னை போன்றவை தந்தி மூலம் இணைக்கப்பட்டன.
- தற்கால அஞ்சல்துறைக்கு அடித்தளம் அமைத்தவர் இவரே.
- 1854-இல் புதிய அஞ்சலக சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- அஞ்சல்தலைகளும் முதல் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டன.
- சர் சார்லஸ் உட் என்பவரின் 1854-ஆம் ஆண்டு “கல்வி அறிக்கை” “இந்தியாவின் அறிவுபட்டயம்” என கருதப்படுகிறது.
- கல்கத்தா, பம்பாய், சென்னை பல்கலைக்கழகங்கள் 1857-ஆம் ஆண்டு நிறுவப்பட்டன.

- பொதுப்பணித்துறையை ஏற்படுத்தினார்.
- அத்துறையை நவீனப்படுத்தியதன் மூலம் இந்தியாவின் பொறியியல் பணித்துறைக்கு டல்ஹெளசி அடித்தளம் அமைத்துக் கொடுத்தார்.
- இரயில் பாதை மற்றும் தந்தித் துறைகளின் தந்தை என்றும் நவீன இந்தியாவை உருவாக்கியவர் என்றும் புகழப்படுகிறார்.

**பாளையங்களின் தோற்றம்**

- விஜய நகர ஆட்சியாளர்கள் தங்கள் மாகாணங்களில் நாயக்கர்களை நியமித்தனர். இதையொட்டி மதுரை நாயக்கர் பாளையக்காரரை நியமித்தார்.
- 1529 ல் விஸ்வநாதர் மதுரை நாயக்கரானார்.
- அதன்மூலம் நாடு 72 பாளையங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாளையமும் ஒரு பாளையக்காரரின் கீழ் கொண்டுவரப்பட்டது.
- ஒவ்வொரு பாளையக்காரரும் ஒரு பிரதேசத்தின் அல்லது பாளையத்தின் உரிமையாளராக கருதப்பட்டார்.

**தென்னிந்தியாவில் தொடக்ககால புரட்சிகள்**

- 17 மற்றும் 18 ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் அரசியலில் பாளையக்காரர்கள் முக்கிய பங்கு வகித்தனர்.
- பாளையக்காரர்களிடையே இரண்டு பாளையங்கள் (முகாம்கள்) இருந்தன. அவை கிழக்கு பாளையம் (முகாம்), மேற்கு பாளையம் (முகாம்) என்பன ஆகும்.
- கிழக்கு பாளையங்களில் இருந்த நாயக்கர்கள் கட்டபொம்மனின் கட்டுப்பாட்டின் கீழ் ஆட்சி செய்தனர்.

- மேற்கு பாளையங்களில் இருந்த மறவர்கள் பூலித்தேவரின் கட்டுப்பாட்டின் கீழ் ஆட்சி செய்தனர். இந்த இரண்டு பாளையக்காரர்களும் ஆங்கிலேயருக்கு கப்பம் கட்ட மறுத்துக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.
- 1792 ஆம் ஆண்டு கர்நாடக உடன்படிக்கையால் ஒருங்கிணைக்கப்பட்ட ஆங்கிலேய அதிகாரம் பாளையக்காரர்களின் மீது செலுத்தப்பட்டது.

**<u>பாளையக்காரர் கிளர்ச்சி</u>**

- தமிழ்நாட்டில் விஜயநகர ஆட்சி விரிவுப்படுத்தப்பட்ட போது பாளையக்காரர் முறை வளர்ச்சி பெற்றது.
- பாளையம் என்று அழைக்கப்பட்ட ஒருசில கிராமங்களை உள்ளடக்கிய நிலப்பகுதிக்கு உரிமையாளர் **பாளையக்காரர்** என்று அழைக்கப்பட்டார்.
- இவர்களில் இரண்டு பிரிவினர் இருந்தனர்.
- மேற்குப்பிரிவில் மறவர் பாளையக்காரர்களும், தெற்குப் பிரிவில் தெலுங்கு பாளையக்காரர்களும் இருந்தனர்.

**<u>பூலித்தேவர்</u>**

- நெல்கட்டும் செவல் பாளையத்தின் மறவர் பிரிவின் தலைவர்.
- 1755-**இல் மாபெஸ்கான்**, பிரிட்டிஷ் படைத்தளபதி **கர்னல் ஹெரான்** தலைமையிலான படைகளின் உதவியோடு பாளையக்காரர்கள் மீது படையெடுத்தார்.
- பூலித்தேவர் மதுரையை தாக்கி **மாபெஸ்கானிடமிருந்து** அதனை கைப்பற்றினார். பூலித்தேவரின் இந்த இராணுவ வெற்றி மகத்தானதாகும்.

- ஒரு இந்திய வீரர் பிரிட்டிசாருக்கு எதிராக நின்று வெற்றிக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.
- தென்னிந்திய வரலாற்றில் சுதந்திர போராட்டத்தை துவக்கிய பெருமைக்கு உரியவர் **பூலித்தேவர்**.

**<u>வீரபாண்டிய கட்டபொம்மன்</u>**

- பாஞ்சாலங்குறிச்சியை சேர்ந்த தெலுங்குப் பிரிவின் தலைவர்.
- கட்டபொம்மனுக்கும் கிழக்கிந்திய வணிகக்குழுவிற்கும் கப்பம் கட்டுவது தொடர்பாக சச்சரவுகள் தோன்றின.
- 1792-ஆம் ஆண்டு கர்நாடக உடன்படிக்கையின்படி ஆர்காடு நவாப் இந்த உரிமையை ஆங்கிலேயருக்கு கொடுத்திருந்தார்.
- 1798-இல் கட்டபொம்மன் கட்ட வேண்டிய கப்பம் நிலுவையில் இருந்தது.
- கலெக்டர் ஜாக்சன் கட்டபொம்மனுக்கு மிரட்டல் கடிதங்களை அனுப்பினார்.
- வானம் பொழிகிறது, பூமி விளைகிறது எதற்காக நாங்கள் ஆங்கிலேயருக்கு வரி கட்ட வேண்டும் என கட்டபொம்மன் கூறியதாக வழக்காறு உள்ளது.
- 1798- மே 31-ஆம் நாள் கணக்குப்படி கட்டபொம்மன் கட்டவேண்டிய கப்பத்தொகை வழக்காறு நிலுவை 3310 பகோடக்களாகும்.(பகோடா என்பது ரூபாய்).
- 1799- மே திங்கள் சென்னையிலிருந்த வெல்லெஸ்லி பிரபு திருச்சி, தஞ்சை, மதுரை போன்ற இடங்களில் இருந்த பிரிட்டிஷ் படைகளை திருநெல்வேலிக்கு செல்ல உத்தரவிட்டார்.
- மிகுந்த அதிகாரங்களை பெற்ற **மேஜர் பானர்மேன்** இப்படையெடுப்புக்கு தலைமை வகித்தார்.
- விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் முகலாயர்கள் தெற்கில் தங்கள் மேலாண்மையை நிறுவினர்.

- கர்நாடகாவில் நவாப் முகலாயர்களின் பிரதிநிதியாக செயல்பட்டார்.
- பாஞ்சாலங்குறிச்சி பாளையமும் நவாப்பின் ஆளுகையின் கீழ் கொண்டுவரப்பட்டது.

**<u>கட்டபொம்மன்-ஜாக்சன் சந்திப்பு</u>**

- இராமநாதபுர கலெக்டர் காலின் ஜாக்சன் 1798ல் நிலுவைத் தொகையை செலுத்தச் சொல்லி கட்டபொம்மனுக்கு கடிதங்கள் எழுதினார்.
- 1798ல் கட்டபொம்மன் தனது அமைச்சர் சிவசுப்பிரமணியத்துடன் இராமநாதபுரத்தில் கலெக்டரை சந்தித்தார்.
- 1080 பகோடா பாக்கியை தவிர பெரும்பாலான வரியை கட்டபொம்மன் செலுத்திவிட்டதை கணக்குகள் சரிபார்த்தலுக்குப்பின் அறிந்த ஜாக்சன் சமாதானமடைந்தார்.
- கலெக்டர் ஜாக்சன் அவருடைய தவறான அணுகுமுறைக்காக பதவி நீக்கமும் செய்யப்பட்டார்.
- அவருக்குப்பின் கலெக்டராக எஸ்.ஆர்.லூஷிங்டன் நியமிக்கப் பட்டார்.

**<u>பாளையக்காரர்களின் கூட்டமைப்பு</u>**

- சிவகங்கையின் மருது பாண்டியார், அருகில் இருந்த பாளையக்காரர்களை ஒன்றிணைத்து ஆங்கிலேயர்களுக்கு எதிராக தென்னிந்திய கிளர்ச்சியாளர்களின் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கினர்.
- இந்த கூட்டமைப்பு ஓர் பிரகடனத்தை வெளியிட்டது. அது திருச்சிராப்பள்ளி அறிக்கை என அழைக்கப்பட்டது.

**<u>பாஞ்சாலங்குறிச்சி வீழ்தல்</u>**

- 1799 செப்டம்பர் ஐந்தாம் நாள் மேஜர் பானர்மேன் தன்னுடைய படையை பாஞ்சாலங்குறிச்சியை நோக்கி நகர்த்தினார்.
- கட்டபொம்மன் புதுக்கோட்டைக்கு தப்பிச்சென்றார்.
- களப்பூர் காடுகளில் மறைந்திருந்த கட்டபொம்மனை புதுக்கோட்டை ராஜா விஜயரகுநாத தொண்டைமான் கைது செய்து கம்பெனியிடம் ஒப்படைத்தார்.
- நாகலாபுரத்தில் சிவசுப்பிரமணியம் சிரச்சேதம் செய்யப்பட்டார்.
- அக்டோபர் 17, 1799 அன்று கட்டபொம்மன் கயத்தாறு கோட்டையில் தூக்கிலிடப்பட்டார்.

**<u>வேலுநாச்சியார்</u>**

- சிவகங்கையின் இராணி வேலுநாச்சியார் ஆவார்.
- இவர் 16ஆம் வயதில் சிவகங்கையின் இராஜா முத்து வடுகநாதருக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டார்.
- 1772ல் ஆற்காடு நவாப் மற்றும் பிரிட்டிஷ் படைகள் சிவகங்கையின் மீது போர் தொடுத்தன. அப்படை, முத்துவடுகநாதரை காளையார் கோயில் போரில் கொன்றது.
- வேலுநாச்சியார் தனது மகள் வெள்ளச்சி நாச்சியாருடன் தப்பித்து, திண்டுக்கல் அருகில் உள்ள விருப்பாச்சியில் கோபால நாயக்கர் பாதுகாப்பில் வாழ்ந்தார்.
- பின்னர், தனது நம்பிக்கைக்குரிய படைத்தளபதி மற்றும் தொண்டர், குயிலி என்பவரால் ஒரு தற்கொலை தாக்குதலுக்கு ஏற்பாடு செய்தார்.
- மருது சகோதரர்களின் உதவியுடன் சிவகங்கையைக் கைப்பற்றி மீண்டும் இராணியாக முடிசூட்டிக்கொண்டார்.
- இந்தியாவில் பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்ட முதல் (இந்தியப்) பெண்ணரசி ஆவார்.

- இவர் தமிழர்களால் “வீரமங்கை” எனவும் “தென்னிந்தியாவின் ஜான்சிராணி” எனவும் அறியப்படுகிறார்.

**<u>மருது சகோதரர்கள்</u>**

- மருது சகோரர்கள் பொன்னாத்தாள் மற்றும் மூக்கைய்யா பழனியப்பன் ஆகியோரின் மகன்கள் ஆவர்.
- மூத்த சகோதரர் பெரிய மருது. இளைய சகோதரர் சின்ன மருது எனவும் அழைக்கப்பட்டனர்.
- இவர்களில் மருது பாண்டியன் என்றழைக்கப்பட்ட சின்ன மருது பிரபலமானவர்.
- ஆங்கிலேயர்களுக்கெதிரான தீவிர நடவடிக்கைகளின் காரணமாக அவர் “சிவகங்கை சிங்கம்” என அழைக்கப்பட்டார்.

- சிவகங்கையை சேர்ந்த மருதுபாண்டியர் 1800- 1801-இல் ஏற்படுத்திய கிளர்ச்சி இரண்டாவது பாளையக்காரர் போர் என்று பிரிட்டிஷ் ஆவணத்தில் குறிக்கப்பட்டுள்ளது.
- இக்கிளர்ச்சியை ஒடுக்கியதன் மூலம் குறுநிலத்தலைவர்கள் அறவே ஒழிக்கப்பட்டனர்.
- 1801- **ஜூலை** 31-**இல்** கையெழுத்திடப்பட்ட **கர்நாடக உடன்படிக்கை** படி தமிழ்நாடு முழுவதையும் பிரிட்டிஷார் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர்.
- பாளையக்காரார் முறை முடிவை சந்தித்தது.
- வணிகக்குழு அவ்விடங்களில் **ஜமீன்தார்** முறையை அறிமுகப்படுத்தியது.

**<u>தென்னிந்திய கிளர்ச்சி</u>** <u>(1800-1801)</u>

- இப்பாளையக்காரர் போர் அதற்கு முன் நடந்த போர்களை விடவும் மிகவும் பெரிய அளவில் நடைபெற்றது.
- சிவகங்கையின் மருது சகோதரர்கள், திண்டுக்கல்லின் கோபால நாயக்கர், மலபாரின் கேரளவர்மன், மைசூரின் கிருஷ்ணப்பநாயக்கர் மற்றும் துண்டாஜி உள்ளிட்டோர் அடங்கிய கூட்டமைப்பால் போர் தொடங்கப்பட்டது.
- இக்கூட்டமைப்பிற்கு எதிராக ஆங்கிலேயர் போரை அறிவித்தனர்.

**திருச்சிராப்பள்ளி பிரகடனம்** (1801)

- சூன் 1801ல் மருது சகோதரர்கள் திருச்சிராப்பள்ளி பிரகடனம் என்றழைக்கப்பட்ட சுதந்திரப் பிரகடனம் ஒன்றை வெளியிட்டனர்.
- 1801 பிரகடனமே ஆங்கிலேயருக்கு எதிராக இந்தியர்களை ஒன்று சேர்க்கும் முதல் அழைப்பாக இருந்தது.
- இந்த அறிவிப்பின் ஒரு நகல் ஆற்காடு நவாபின் அரண்மனையான திருச்சி கோட்டை சுவரிலும், மற்றொரு நகல் ஸ்ரீரங்கம் வைஷ்ணவ கோயில் சுவரிலும் ஒட்டப்பட்டது.
- ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் கொள்கை பாளையக்காரர்களின் படைகளில் பிளவை ஏற்படுத்தியது.

**ஆங்கிலேயர் சிவகங்கையை இணைத்தல்**

- 1801 அக்டோபர் 24ஆம் நாள் மருது சகோதரர்கள், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர் கோட்டையில் தூக்கிலிடப்பட்டனர்.
- 1801 நவம்பர் 16ஆம் நாள் ஊமைத்துரை மற்றும் செவத்தையா கைது செய்யப்பட்டு பாஞ்சாலங்குறிச்சியில் தூக்கிலிடப்பட்டனர்.
- மேலும், 73 கிளர்ச்சியாளர்கள் மலாயாவின் பினாங்கிற்கு (பின்னர் வேல்ஸ் இளவரசர் தீவு என அழைக்கப்பட்டது) நாடு கடத்தப்பட்டனர்.

- 1801 சூலை 31ல் செய்து கொள்ளப்பட்ட கர்நாடக உடன்படிக்கைப்படி, தமிழ்நாட்டின் மீது ஆங்கிலேயர் நேரடி கட்டுப்பாட்டைப் பெற்றனர். இதனால் பாளையக்காரர் முறை நீக்கப்பட்டது.

**தீரன் சின்னமலை**

- தீரன் சின்னமலை ஈரோடு மாவட்டம் சென்னிமலை அருகிலுள்ள மேலப்பாளையத்தில் பிறந்தார்.
- அவரது இயற்பெயர் தீர்த்தகிரி.
- அவர் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியை எதிர்த்த கொங்கு நாட்டு பாளையக்காரர் ஆவார்.
- கொங்குநாடு என்பது சேலம், கோயம்புத்தூர், கரூர் மற்றும் திண்டுக்கல் பகுதிகளை உள்ளடக்கிய மதுரை நாயக்க அரசின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்பகுதி மைசூர் உடையார்களால் இணைக்கப்பட்டது.
- மூன்று மற்றும் நான்காம் மைசூர் போர்களுக்குப் பிறகு கொங்குநாடு முழுவதும் ஆங்கிலேயரின் வசமானது.
- தீரன் சின்னமலை, பிரெஞ்சு இராணுவத்தின் நவீன போர்முறை பயிற்சி பெற்றிருந்தார்.
- இவர் திப்புசுல்தான் பக்கம் இருந்து ஆங்கிலேயருக்கெதிராக போராடி வெற்றிபெற்றார்.
- திப்புசுல்தான் இறந்த பிறகு, இவர் ஓடாநிலையில் தங்கி ஆங்கிலேயரைத் தொடர்ந்து எதிர்த்துப் போராட, அங்கு ஒரு கோட்டையைக் கட்டினார்.
- சின்னமலை காவேரி, ஓடாநிலை மற்றும் அரச்சலூர் போன்ற இடங்களில் நடைபெற்ற போர்களில் கொரில்லா போர் முறையில் ஆங்கிலப் படைகளைத் தோற்கடித்தார்.

- இறுதிப் போரின்போது சின்னமலை தனது சமையற்காரர் நல்லப்பன் என்பவரால் காட்டிக் கொடுக்கப்பட்டதால் 1805ல் சங்ககிரி கோட்டையில் தூக்கிலிடப்பட்டார்.

## வேலூர் கலகம்

- தமிழ்நாட்டின் முந்தைய வடஆற்காடு மாவட்டத்தின் தலைநகரம் **வேலூர்**.
- தற்போது வேலூர் மாவட்டம் என்று அழைக்கப்பட்டது.
- 1806-**இல்** வேலூரில் இருந்த இந்திய சிப்பாய்கள் கலகத்தில் ஈடுபட்டனர்.
- இந்த எதிர்ப்பு வருங்காலத்தில் எழவிருந்த கலகத்திற்கு கட்டியம் கூறுவதாக அமைந்தது.
- 1803ல் வில்லியம் காவெண்டிஷ் பெண்டிங் என்பவர் சென்னை மாகாண கவர்னரானார்.
- அவரது காலத்தில் (1805-1806) சிலகட்டுப்பாடுகள் இராணுவத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- அதனைப் பின்பற்ற வேண்டுமென இராணுவ வீரர்கள் சென்னை மாகாண படைத்தளபதி சார் ஜான் கிரடாக் என்பவரால் கட்டாயப்படுத்தப்பட்டனர்.
- சிப்பாய்கள் அதனைத் தங்களை அவமானப்படுத்த ஆங்கிலேயரால் வடிவமைக்கப்பட்டது எனக்கருதினர்.

## கலகத்திற்கான காரணங்கள்

- கடுமையான கட்டுப்பாடுகள், புதிய ஆயுதங்கள், புதிய முறைகள் மற்றும் சீருடைகள் என அனைத்தும் சிப்பாய்களுக்கு புதிதாக இருந்தன.

- தாடி, மற்றும் மீசையை மழித்து நேர்த்தியாக வைத்துக்கொள்ள சிப்பாய்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.
- சமய அடையாளத்தை நெற்றியில் அணிதல், காதுகளில் வளையம் (கடுக்கன்) அணிதல் ஆகியன தடை செய்யப்பட்டன.
- ஆங்கிலேயர்கள், இந்திய சிப்பாய்களை தாழ்வாக நடத்தியதோடு மட்டுமல்லாமல் சிப்பாய்களிடையே இன பாரபட்சமும் காட்டினர்.

**<u>உடனடிக் காரணம்</u>**

- சூன் 1806ல் இராணுவத் தளபதி அக்னியூ ஐரோப்பிய தொப்பியை ஒத்திருந்த சிலுவை சின்னத்துடன் கூடிய ஒரு புதிய தலைப்பாகையை அறிமுகப்படுத்தினார்.
- அது பிரபலமாக அக்னியூ தலைப்பாகை என அழைக்கப்பட்டது.
- இந்து மற்றும் முஸ்லீம் வீரர்கள் ஒன்றாக இதனை எதிர்த்தனர்.

**<u>இதர காரணங்கள்</u>**

- வணிகக்குழுவின் இராணுவத்தில் பணியாற்றிய சிப்பாய்கள் பல்வேறு சிரமங்களை சந்தித்தனர்.
- கண்டிப்பான ஒழுக்கம், நடைமுறை, புதிய வகை ஆயுதங்கள், புதிய வழிமுறைகள், சீருடை போன்றவை சிப்பாய்களுக்கு புதியதாக தோன்றின.
- காதணிகளை அணிவதும், சமய சின்னங்களை இட்டுக்கொள்வதும் தடை செய்யப்பட்டன.
- இனப்பாகுபாடும் காணப்பட்டது.

- 1806 மே திங்கள் வேலூர் படையின் ஒரு பிரிவினர் இவ்விதிகளை எதிர்த்தனர்.
- ஆனால் அவர்களது கோரிக்கை நிராகரிக்கப்பட்டு, 500 முதல் 900 கசையடிகள் தண்டனை அளிக்கப்பட்டது.
- வேலூர் இராணுவப் புரட்சிக்கு பதே ஹைதர் மற்றும் மொய்சுதீன் இருவரும் இணைந்து திட்டம் தீட்டினர்.
- 1806 ஜூலை 10 - ஆம் நாள் முதல் மற்றும் 23-ஆம் படை பிரிவைச் சேர்ந்த இந்திய சிப்பாய்கள் கலகத்தை தோற்றுவித்தனர்.
- கிளர்ச்சியாளர்கள் திப்பு சுல்தானின் மூத்த மகன் பதே ஹைதர் என்பவரை புதிய சுல்தானாக அறிவித்தனர்.
- திப்பு சுல்தானின் புலிக்கொடியையும் பறக்கவிட்டனர்.
- இக்கிளர்ச்சி கர்னல் கில்லெஸ்பியினால் உடனடியாக அடக்கப்பட்டது.
- வேலூர் கலகம் தோல்வி அடைந்தது.

**<u>வேலூர் கலகத்தின் விளைவுகள்</u>**

- புதிய முறைகள் மற்றும் சீருடை ஒழுங்கு முறைகள் விலக்கிக் கொள்ளப்பட்டன.
- முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திப்புவின் குடும்பத்தினர் வேலூரிலிருந்து கல்கத்தாவிற்கு அனுப்பப்பட்டனர்.
- வில்லியம் காவெண்டிஷ் பெண்டிங் பணி நீக்கம் செய்யப்பட்டார்.

**<u>கலகத்தின் தோல்விக்கான காரணங்கள்</u>**

- இந்திய படை வீரர்களை வழிநடத்த சரியான தலைமையில்லை.

- ø கலகம் மிகச் சரியாக வடிவமைக்கப்படவில்லை.
- ø ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் கொள்கை இந்தியர்களின் ஒற்றுமையில் பிளவை ஏற்படுத்தியது.
- ø 1806ல் நடந்த வேலூர் கலகத்தை 1857ல் நடைபெற்ற " முதல் இந்திய சுதந்திரப் போரின் முன்னோடி" என வி.டி.சவார்க்கர் குறிப்பிடுகிறார்.

- ø வேலூர் கலகம் 1857-ஆம் ஆண்டு சிப்பாய் கலகத்துக்கு வழி வகுத்தது என்ற கூற்றை மறுத்தவர் வரலாற்று ஆசிரியர் **கே.கே.பிள்ளை**.
- ø 1857-ஆம் ஆண்டு முதல் இந்திய சுதந்திர போருக்கு வேலூர் கலகம் முன்னோடி எனக் கூறியவர் **சவார்க்கர்**.
- ø இந்திய விடுதலைக்கு தமிழர்களே முன்னோடிகளாக திகழ்ந்தனர் எனக் கூறியவர் **என்.சஞ்சீவி**.
- ø காலனி ஆதிக்கத்தை எதிர்த்து மருது சகோதரர்கள் நடத்திய போராட்டத்தின் தொடர்ச்சியே வேலூர் கலகம் என்று கூறியவர் வரலாற்று அறிஞர் **கே.ராசய்யன்**.

*************

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு** : TNPSC **ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**)

**பாடம்** : **வரலாறு**

**பகுதி** : **குப்தர்கள்**

©**காப்புரிமை** :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமை பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# வரலாறு

## குப்தர்கள் (கி.பி.270 - 570)

- Ø குப்தர்களின் பேரரசே இரண்டாவது இந்தியப் பேரரசாகும்.
- Ø குப்த ஆட்சியை நிறுவியவர் **ஸ்ரீகுப்தர்**.
- Ø அடுத்து பட்டத்திற்கு வந்தவர் அவருடைய மகன் கடோத்கஜன். இவர்கள் இருவரும் **மகாராஜா** என அழைக்கப்பட்டனர்,
- Ø கடோத்கஜனின் மகன் **முதலாம் சந்திரகுப்தர்** குப்த அரசை பேரரசாக மாற்றினார்.

### முதலாம் சந்திரகுப்தர் (கி.பி.320- 330)

- Ø **மகாராஜாதி ராஜா** அல்லது **அரசர்களுக்கு அரசன்** என்று முதலில் அழைக்கப்பட்டவர்.
- Ø லிச்சாலி வம்சத்துடன் மன உறவு கொண்டதன் மூலம் தனது வலிமையை பெருக்கிக் கொண்டார்,
- Ø லிச்சாலி வம்சத்தை சார்ந்த குமாரதேவி என்ற இளவரசியை மணந்து கொண்டார்.
- Ø **மெஹ்ருளி** இரும்புத் தூண் கல்வெட்டு அவரது போர் வெற்றிகள் பற்றி குறிப்பிடுகிறது.

### சமுத்திரகுப்தர் (கி.பி.330 - 380)

- Ø முதலாம் சந்திரகுப்தரை அடுத்து பட்டமேறியவர் சமுத்திரகுப்தர்.
- Ø குப்த மரபில் மிகச்சிறந்த அரசர் சமுத்திரகுப்தர்.
- Ø **அலகாபாத் கல்தூண் கல்வெட்டு** அவரது ஆட்சிபற்றி விவரமாகக் குறிப்பிடுகிறது. அவரது படையெடுப்பின் மூன்று நிலைகள் இக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ளன.

1. வட இந்திய ஆட்சியாளருக்கு எதிராக மேற்கொண்டவை.
2. தென்னிந்திய ஆட்சியாளர்களுக்கு எதிரான புகழ்மிக்க **தட்சிணபாதா** படையெடுப்பு.
3. வடஇந்திய ஆட்சியாளர்களுக்கு எதிரான இரண்டாவது படையெடுப்பு.

- சமுத்திர குப்தர் அச்சுதன், நாகபாணன் இருவரையும் முறியடித்து மேலை கங்கைச்சமவெளி முழுவதையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்.
- இவரது தென்னிந்திய படையெடுப்பின் போது பன்னிரெண்டு ஆட்சியாளர்களை முறியடித்ததாக **அலகாபாத் கல்தூண் கல்வெட்டு** குறிப்பிடுகிறது.
- பாடல்களை இயற்றும் திறமை பெற்று இருந்ததால் இவரை **கவிராஜன்** என்று கல்வெட்டு குறிப்பிடுகிறது. அவரது நாணயங்களில் வீணையுடன் அமர்ந்திருக்கும் காட்சி இசையில் அவருக்கு இருந்த ஆர்வத்தையும், திறமையையும் எடுத்து காட்டுவதாக உள்ளது.
- இவருடைய தக்காண வெற்றியை பாராட்டி **வின்சென்ட் ஸ்மித்** என்ற வரலாற்று ஆசிரியர் இவரை '**இந்திய நெப்போலியன்**" என குறிப்பிட்டார்.
- **வசுபந்து** என்ற குப்த அறிஞரும் **ஹரிசேனர்** என்ற வீரப் பாடகரும் இவரது அவையை அலங்கரித்தனர்.

**இரண்டாம் சந்திரகுப்தர்** (**கி.பி**.380-415)

- சமுத்திரகுப்தரின் மகன்.
- இரண்டாம் சந்திரகுப்தர் குப்த அரசர்களிலேயே தலைசிறந்தவர்.
- **விக்கிரமாதித்தன்** என அழைக்கப்பட்டார்.
- சாகர்களை வென்றதால் **சாகாரி** என அழைக்கப்பட்டார்.

- **பாடலிபுத்திரத்திலிருந்து உஜ்ஜெயினிக்கு** தலைநகரை மாற்றினார்.
- இவரது அரசவையில் **காளிதாசர்**, **ஆரியபட்டர்**, **தன்வந்திரி** போன்ற ஒன்பது அறிஞர்கள் **நவரத்தினங்களாக** விளங்கினர்.
- இவருடைய காலத்தில் சீன யாத்திரிகர் **பாஹியான்** வருகை தந்தார்.

**<u>குமாரகுப்தர்</u>**.

- சந்திரகுப்தரை அடுத்து ஆட்சியமைத்தவர் குமாரகுப்தர்.
- இவர் தன்னை **மகேந்திரதாதித்யன்** என அழைத்துக்கொண்டார்.
- இவர் காலத்தில்தான் **நாளந்தா பல்கலைக்கழகம்** தோற்றுவிக்கப்பட்டது.
- இவருடைய ஆட்சியில் ஹூணர்கள் என்ற முரட்டு சாதியினர் படையெடுத்து தாக்கினர்.

**<u>கந்தகுப்தர்</u>**.

- குமாரகுப்தரை அடுத்து பட்டமேற்றவர் கந்தகுப்தர்.
- ஹூணர்களை உண்மையில் எதிர் கொண்டு பேரரசை காப்பாற்றினார்.
- இவரது மறைவிற்கு பின் புருகுப்தர், புத்தகுப்தர், பாலாதித்யர் போன்றவர்களால் ஹூணர்களின் தாக்குதல்களில் இருந்து குப்த பேரரசை காப்பாற்ற முடியாததால் குப்த பேரரசு மறைந்தது.
- ஹூணர்களிடம் நடத்திய போரில் குப்த பேரரசு வீழ்ச்சியை எட்டியது.

## <u>இந்தியாவின் பொற்காலம்</u>

- இந்திய வரலாற்றில் குப்தர்களின் காலம் **பொற்காலம்** என அழைக்கப்படுகிறது.
- காந்தார சிற்ப முறை கைவிடப்பட்டு, இந்திய சிற்பமுறை மறுமலர்ச்சி பெற்றது.
- இக்காலத்தில்தான் இந்து சமயத்தின் முக்கிய நூலான **பகவத்கீதை** பாரதத்தில் சேர்க்கப்பட்டது.
- சமஸ்கிருத மொழி வளர்ச்சியடைந்தது.
- காளிதாசர் இயற்றிய நூல்கள்- **சாகுந்தலம்**, **இரகுவம்சம்**, **குமாரசம்பவம்**, **மேகதூதம்**, **ரிதுசம்காரம்**, **விக்ரமஊர்வசியம்**, **மாளவிகாக்னிமித்ரம்**.
- ஆரியபட்டர் **ஆரியபட்டியம்** என்ற கணித வானசாஸ்திர நூலையும், வராகமிகிரர் **பஞ்சசித்தாந்திகா**, **பிரகத்சம்கிதா** போன்ற நூல்களையும், வராகபட்டர் மருத்துவம் பற்றிய **அஷ்டாங்க சங்கிரகம்** எனும் நூலையும் இயற்றினர்.
- விஷ்ணுசர்மா **பஞ்சதந்திர கதையையும்** எழுதினார்.
- விசாகதத்தர் **முத்ரராராட்சசம்**, **தேவி சந்திரகுப்தம்** என்ற நாடகங்களை எழுதினார்.
- சுத்ரகர் எழுதிய **மிருச்சகடிகம்** நகைச்சுவைக்கும் சோகத்திற்கும் பெயர் பெற்றது.
- தண்டி, காவிய தரிசனம், தசகுமாரசரிதம் ஆகிய நூல்களை எழுதினார்.
- பாரவி கிருதார்ஜீன்யம் என்ற நூலை எழுதினார். இது அர்ஜீனனுக்கும் சிவபெருமானுக்கும் நடந்த மோதலை குறிப்பிடும் கதை.
- தற்போது காணப்படும் புராணங்கள் குப்தர்கள் காலத்தில் தொகுக்கப்பட்டதாகும்.

Ø இராமாயணம், மகாபாரத நூல்களுக்கு இறுதி வடிவம் குப்தர்கள் காலத்திலேயே அளிக்கப்பட்டது.

Ø கலை, இலக்கியம், அறிவியல் போன்ற துறைகளில் குப்தர்கள் காலத்தில் சிறப்பான வளர்ச்சி ஏற்பட்டது. எனவே தான் குப்தர்களின் காலம் பொற்காலம் எனப்படுகிறது.

*****

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு** : TNPSC **ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**)

**பாடம்** : **வரலாறு**

**பகுதி** : **சிந்து சமவெளி நாகரிகம்**

©**காப்புரிமை** :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமை பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# வரலாறு

## சிந்துசமவெளி நாகரிகம்

நாம் வாழும் காலத்தை கணினிக்காலம் என்கிறோம். மின்னாற்றல் கண்டுபிடிக்கப்பட்ட பின் மிகவும் மதிக்கப்படும் கண்டுபிடிப்பாக கணினி உள்ளதால் இது கணினிக்காலம் எனப்படுகிறது.

- ஆதி மனிதன் கல்லை பயன்படுத்திய காலம் கற்காலம் எனப்படும்.
- மனிதனுக்கு முதன்முதலில் தெரிந்த உலோகம் செம்பு (தாமிரம்)
- மனிதன் செம்பு, கல் இரண்டையும் பயன்படுத்திய காலம் செம்புக்கற்காலம் எனப்படுகிறது. அக்காலத்தில் தான் இந்தியாவின் மிகத் தொன்மை வாய்ந்த நகர நாகரிகமான சிந்து சமவெளி (ஹரப்பா) நாகரிகம் செழித்திருந்தது.
- சிந்துவெளி நாகரிகமே இந்திய நாகரிகத்தின் தொடக்கமாகும்.

- உலகின் தொன்மையான நாகரிகங்கள் பின்வருமாறு.
- மெசபடோமியா நாகரிகம் (3500 - 2000 பொ.ஆ.(மு) ,
- எகிப்து நாகரிகம் (3100 - 1100 பொ.ஆ.(மு),
- சிந்துசமவெளி நாகரிகம் (3300 -1900 பொ.ஆ.(மு),
- சீன நாகரிகம் (1700 - 1122 பொ.ஆ.(மு.)
- இவை அனைத்தும் நதிக்கரை நாகரிகங்கள் ஆகும்.

## மக்கள் நதிக்கரையில் குடியேறக் காரணம்

- வளமான மண்,
- ஆறுகளில் பாயும் நன்னீர் குடிப்பதற்கும்,
- கால்நடைகளின் தேவைகளுக்கும்,

- நீர்பாசனத்திற்கும் பயன்பட்டன.
- போக்குவரத்திற்கு ஏற்ற வழிகளாக இருந்தன.

**ஹரப்பா (புதையுண்ட நகரம்)**

- ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆட்சி செய்தபோது 1856 ஆம் ஆண்டு பஞ்சாப் மாநிலத்தில் சிந்துநதியின் கிளை நதியான ராவி நதிக்கரையில் இருப்புப்பாதை அமைத்தனர். அங்கு மணல்மேடு ஒன்றை கண்டனர். அதில் தரமான சுட்ட நீண்ட செங்கற்களும், கட்டிட இடிபாடுகளும் இருந்ததைக் கண்டனர்.
- 1921-ல் அகழ்வு ஆராய்ச்சியாளர்கள் அதே பகுதியை ஆய்வு செய்து தொன்மை இந்தியாவின் முதுபெரும் நகரம் அது என்பதை கண்டறிந்தனர்.
- ஹரப்பா என்ற சிந்தி மொழிச்சொல்லுக்கு “புதையுண்ட நகரம்” என்பது பொருள்.
- சுமார் 4700- ஆண்டுகளுக்கு முற்பட்ட நாகரிகம் இந்தியாவில் மலர்ந்திருந்ததாக கண்டறியப்பட்டது. இதைப் போன்றே நகரங்களின் இடிபாடுகள் மொகஞ்சதாரோ, சான்குதாரோ, கலிபங்கன், லோத்தல் போன்ற வேறு பல இடங்களிலும் கண்டெடுக்கப்பட்டன.
- மொகஞ்சதாரோ என்ற சிந்திமொழிச் சொல்லுக்கு “இடுகாட்டு மேடு” என்பது பொருள்.
- சிந்துவெளி நகரங்களின் கட்டமைப்பில் முக்கியத்துவம் வாய்ந்தவை “பெருங்குளம் மற்றும் தானியக்களஞ்சியம்” ஆகும்.
- கட்டடத்தொழில், நிலம் தேறுதல், மனை அளவீடு, கால்கோளுதல், தரமான கட்டுமானப் பொருட்களை தேர்ந்தெடுத்தல், வடிவக்கணித அமைப்பு பற்றி அறிதல், முதலிய பயன்பாட்டு அறிவியல் தொழில் நுட்பங்கள் நடைமுறையில் இருந்தன.

- ஆயுதங்கள், வீட்டு சாமான்கள், கருவிகள் முதலியவற்றை செய்ய செம்பையும் , வெண்கலத்தையும் பயன்படுத்தினர். தங்கமும் வெள்ளியும் அணிகலன்கள் செய்ய பயன்பட்டன.
- எடைக்கற்கள் ஒருவகை திண்மையான கற்களால் தயாரிக்கப்பட்டிருந்தன.
- செவ்வக வடிவலான நூற்றுக்கணக்கான முத்திரைகளும் அவற்றில் சித்திர வடிவிலான எழுத்துக்களும் கண்டறியப்பட்டுள்ளன.

**<u>எழுத்துமுறை</u>**

- இங்கு கண்டெடுக்கப்பட்ட சுட்ட களிமண் பலகைகளின் மீது எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.
- இவை சித்திர எழுத்துக்கள் ஆகும்.
- முத்திரைகளில் பொறிக்கப்பட்டிருந்த படங்களும் எழுத்து வடிவங்களும் இவர்கள் எழுத்துக் கலையில் பெற்றிருந்த தேர்ச்சியை புலப்படுத்துகின்றன.
- சிந்துவெளி மக்களின் முக்கியத்தொழில் விவசாயம். கோதுமை, பார்லி போன்றவற்றை விளைவித்தனர்.
- மக்கள் பருத்தி, கம்பளி ஆடைகளை அணிந்தனர்.
- தங்கம், வெள்ளி, தந்தம், விலை உயர்ந்த கற்கள் போன்றவற்றை அணிகலன்கள் செய்ய பயன்படுத்தினர்.
- ஏழை மக்கள் கிளிஞ்சல் மற்றும் தாமிரம் போன்றவற்றால் செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்தனர்.
- சிந்துவெளி மக்கள் டெரஹோட்டா எனப்படும் சுடுமட்பாண்டம் செய்வதில் திறமை மிக்கவர்களாக இருந்தனர்.
- மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்டுள்ள வெண்கலத்தால் ஆன நாட்டிய மங்கையின் உருவச்சிலை, தாடியுடன் காட்சி

தரும் ஒருவரின் சுண்ணாம்புக்கல் சிலை முதலியன அக்கால மக்களின் சிற்ப வேலைத்திறனுக்கு சிறந்த சான்றுகளாகும்.

- Ø மக்கள் பசுபதி என்ற சிவனையும், பெண் கடவுளையும். லிங்கம், சூலம். மரம் முதலியவற்றையும் வணங்கினர்.
- Ø இறந்தவர்களைப் புதைக்கும்போது அச்சடலங்களுடன் உணவு, அணிகலன்களையும் சேர்த்து தாழிகளிலிட்டு புதைத்தனர்.

<u>ஹரப்பா (புதையுண்ட நகரம்)</u>

Ø ஹரப்பா நகரத்தின் இடிபாடுகளை தமது நூலில் விவரித்தவர் **சார்லஸ்மேசன்**.

Ø இவர் கிழக்கிந்திய கம்பெனியின் படைவீரரும், ஆராய்ச்சியாளரும் ஆவார்.

Ø 1856 ஆம் ஆண்டு பொறியாளர்கள் லாகூரிலிருந்து கராச்சிக்கு இரயில்பாதை அமைக்கும் பொருட்டு நிலத்தை தோண்டியபோது அதிகமாக சுட்ட செங்கற்கள் கண்டறியப்பட்டன.

Ø 1920 - இல் தொல்பொருள் ஆய்வாளர்கள் ஹரப்பா மற்றும் மொகஞ்சதாரோ நகரங்களை அகழாய்வு செய்ய ஆரம்பித்தனர்.

Ø 1924 - இல் இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறையின் இயக்குநர் **ஜான்மார்சல்** ஹரப்பாவிற்கும், மொகஞ்சதாரோவிற்கும் இடையே பொதுவான அம்சங்கள் இருப்பதை கண்டறிந்தார்.

Ø ஹரப்பா நாகரிகம் மொகஞ்சதாரோவை விட பழமையானது.

Ø **நாகரிகம்** என்ற வார்த்தை பண்டைய இலத்தின் மொழி வார்த்தையான **சிவிஸ்** என்பதிலிருந்து வந்தது. இதன்பொருள் **நகரம்** ஆகும்.

Ø 1861 ஆம் ஆண்டு **அலெக்சாண்டர் கன்னிங்ஹாம்** என்ற நிலஅளவையாளர் உதவியுடன் **இந்திய தொல்லியல்துறை** நிறுவப்பட்டது. இதன் தலைமையகம் **புதுடில்லி**.

Ø ஹரப்பா நாகரிகம் ஒரு **நகர நாகரிகம்** ஆகும். காரணம்

சிறப்பான நகர திட்டமிடல்,கட்டிடக்கலை வேலைப்பாடு, தூய்மைக்கும், பொது சுகாதாரத்திற்கும் கொடுக்கப்பட்ட அதிக முன்னுரிமை, தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவீடுகள், விவசாய மற்றும் கைவினை தொழில்களுக்கான திடமான அடித்தளம்.

**<u>மெஹெர்கர் - சிந்துவெளி நாகரிகத்தின் முன்னோடி</u>**

Ø **மெஹெர்கர்** புதிய கற்கால மக்கள் வாழ்ந்த ஓர் இடம்.

Ø இது பாகிஸ்தான் நாட்டில் பலுசிஸ்தான் மாநிலத்தில் கோலன் ஆற்றுப்பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது.

Ø மூடப்பட்ட கழிவுநீர் வடிகால் அமைப்பு எல்லா நகரங்களிலும் இருந்தது. நீர் கசியாத கட்டுமானத்திற்கான மிகப் பழமையான சான்றான **பெருங்குளம்** அமைந்துள்ளது. இதில் நீர் கசியாமல் இருக்க இயற்கைதார் கொண்டு பூசப்பட்டுள்ளது.

Ø செங்கற்களால் கட்டப்பட்ட சுவர்களைக் கொண்ட **தானியக்களஞ்சியம்** ஹரியானா மாநிலத்தில் உள்ள **ராகிகர்கியில்** கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

Ø மொகஞ்சதாரோவில் இருந்த மிகப்பெரிய பொதுக்கட்டிடம் கூட்ட அரங்கம் ஆகும்.

Ø ஹரப்பா மக்கள் பெரும் வணிகர்களாக இருந்தனர்.

Ø ஆரக்கால் இல்லாத திடமான சக்கரங்களை பயன்படுத்தினர்.

Ø ஹரப்பா மக்கள் மெசபடோமியாவுடன் விரிவான கடல் வணிகம் நடத்தியுள்ளனர்.

Ø சுமேரியாவின் அக்காடிய பேரரசிற்குட்பட்ட அரசன் **நாரம்சின்** என்பவர் சிந்துவெளி பகுதியில் உள்ள மெலுக்கா என்னுமிடத்திலிருந்து அணிகலன் வாங்கியதாக குறிப்பு எழுதியுள்ளார்.

Ø குஜராத்தில் சபர்மதி ஆற்றின் ஒரு துணை ஆற்றின் கரையில் லோத்தல் என்னும் இடம் அமைந்துள்ளது.

Ø தற்கால குஜராத்தில் உள்ள லோத்தலில் கப்பல்கட்டும் மற்றும் செப்பனிடும் தளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

Ø குஜராத் மாநிலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள தந்தத்தினால் ஆன அளவுகோல் 1704 மிமீ. வரை சிறிய அளவீடுகளை கொண்டுள்ளது.

Ø மனிதர்களால் **முதன்முதலில்** கண்டுபிடிக்கப்பட்ட மற்றும் உபயோகப்படுத்தப்பட்ட உலோகம் **செம்பு**.

Ø மொகஞ்சதாரோவின் வெண்கலத்தால் ஆன **நடனமாது** என குறிப்பிடப்படும் சிறிய பெண்சிலை கிடைத்துள்ளது.

Ø சிந்துவெளி மக்கள் ஆபரணம் செய்ய சிவப்பு நிற மணிக்கற்களை பயன்படுத்தினர்.

Ø இவர்களுக்கு **இரும்பின்** பயன் பற்றி தெரியாது.

Ø பருத்தி ஆடைகளே பயன்பாட்டில் இருந்தன. மேலும், கம்பளி ஆடைகளும் உபயோகப்படுத்தப்பட்டது

Ø சிந்துசமவெளி மக்களிடையே **தாய் தெய்வ வழிபாடு** இருந்திருக்கலாம்.

Ø சிந்துவெளி மக்களின் முதன்மையான தொழில் பற்றி எதுவும் தெரியவில்லை. எனினும், வேளாண்மை, கைவினை பொருள்கள் செய்தல், பானை வனைதல், அணிகலன்கள் செய்தல், கால்நடை வளர்த்தல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளனர். சக்கரத்தின் பயனையும் அறிந்துள்ளனர்.

Ø முதல் எழுத்து வடிவம் **சுமேரியர்களால்** உருவாக்கப்பட்டது.

Ø மொகஞ்சதாரோவில் தொல்பொருள் ஆராய்ச்சி நடைபெறும் இடம் உலக பாரம்பரிய தளமான **யுனெஸ்கோ** அமைப்பால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

Ø சிந்துவெளி நாகரிகம் உலக பழமையான நாகரிகங்களில் ஒன்று.

Ø சிந்துவெளி நாகரிகம் பரவியுள்ள முக்கிய பகுதிகள் - **குஜராத்**, **பாகிஸ்தான்**, **இராஜஸ்தான்**, **ஹரியானா**.

**ø** தென்னிந்தியாவின் பெருங்கற்கால முதுமக்கள் தாழிகளில் காணப்படும் கோட்டுருவக் குறியீடுகள் சிந்துவெளி எழுத்துக்களை ஒத்திருப்பதும், தமிழக ஊர்பெயர்கள், பாகிஸ்தானின் சிந்துப்பகுதி ஊர்பெயர்களை ஒத்துள்ளமையும், சிந்துவெளி நாகரிகத்திற்கும், தமிழ் பண்பாட்டிற்கும் உள்ள உறவை நிலைநிறுத்துகின்றன.

**<u>ஹரப்பா நாகரிகம் அழியக்காரணங்கள்</u>**

- சுற்றுச்சுழல் மாற்றம்,
- வெள்ளப்பெருக்கு,
- ஆரியர்களின் படையெடுப்பு,
- அயலவர் படையெடுப்பு,
- இயற்கை சீற்றங்கள்,
- காலநிலை மாற்றம்,
- காடுகள் அழிதல்,
- தொற்றுநோய் தாக்குதல்.

******

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு** : TNPSC **ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**)

**பாடம்** : **வரலாறு**

**பகுதி** : **டெல்லி சுல்தானியர்கள்**

©**காப்புரிமை** :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமை பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்**,

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# வரலாறு

## டெல்லி சுல்தான்கள் (கிபி.1206 முதல் கிபி.1526)

**அடிமை வம்சம்** (**மாம்லுக்**)- **கி**.**பி**.1206-1290 - **குத்புதீன் ஐபெக்**

கில்ஜி வம்சம்- **கி**.**பி**.1290-1320- **ஜலாலுதீன் கில்ஜி**

துக்ளக் வம்சம்- **கி**.**பி**.1320-1414 -**கியாசுதீன் துக்ளக்**

சையது வம்சம்- **கி**.**பி**.1414-1451- **கிசிர்கான்**

லோடி வம்சம்- **கி**.**பி**.1451-1540 - **பஹ்லுால் லோடி**

**Ø** இந்தியாவில் மாம்லுக், கில்ஜி, துக்ளக், சையது, லோடி ஆகிய மரபினா் ஆட்சி செய்துள்ளனா்.

## அடிமை வம்சம் (1206-1290)

- Ø இந்தியாவில் முஸ்லீம்களின் ஆட்சி முகமது கோரியால் கி.பி.(பொ.ஆ) 12 ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டது.
- Ø அவருக்கு மகன்கள் இல்லாத காரணத்தால் பன்டகன் (இராணுவப் பணிக்காக விலைக்கு வாங்கப்பட்ட அடிமைகளைக் குறிக்கும் பாரசீக சொல்) எனும் தனிவகை அடிமைகளைப் பேணினார்.
- Ø 1206 இல் கோரியின் இறப்பிற்குப் பின்னர், அவரின் அடிமையான குத்புதீன் ஐபக் இந்தியாவிலிருந்த துருக்கியப் பகுதிகளுக்கு அரசராக தன்னை அறிவித்துக்கொண்டார்.
- Ø அடிமை வம்சத்தின் ஆட்சிக்கான அடிக்கல்லை அவா் நாட்டினார். இவ்வரச மரபு ”மம்லுக்” அரச மரபென்றும் அழைக்கப்பட்டது.
- Ø மம்லுக் எனும் அராபிய வார்த்தைக்கு “அடிமை” என்று பொருள்.

- குத்புதீன் ஐபக், சம்சுதீன் இல்துமிஷ், கியாசுதீன் பால்பன் ஆகிய மூவரும் இம்வம்சத்தைச் சேர்ந்த மூன்று மாபெரும் சுல்தான்கள் ஆவர்.
- அடிமை வம்சத்தினர் இத்துணைக்கண்டத்தை எண்பத்து நான்கு ஆண்டுகள் ஆட்சி செய்தனர்.

**குத்புதீன் ஐபக்** (1206-1211)

- மாம்லுக் மரபினை நிறுவியவர் குத்புதீன் ஐபக். இவர் இந்தியாவில் துருக்கிய ஆதிக்கத்தை தொடங்கி வைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.
- "மாம்லுக்" - குரானின்படி "அடிமை"யை குறிக்கும் சொல் ஆகும். ஹாசன்நிசாமி, பக்ரேமுதிர் போன்ற அறிஞர்களை ஆதரித்தார்.
- இவர் பல இலட்சங்களை கொடையாக வழங்கியதால் "லக்பாக்ஷா" என புகழப்பட்டார்.
- குத்புதீன் லாகூரைத் தலைநகராகக் கொண்டு தனது ஆட்சியைத் தொடங்கினார்.
- பின்னர் தனது தலைநகரை டெல்லிக்கு மாற்றினார்.
- கீழை கங்கைச் சமவெளியைக் (பீகார், வங்காளம்) கைப்பற்றும் பொறுப்பைப் பக்தியார் கல்ஜி என்பாரிடம் ஒப்படைத்தார்.
- ஐபக் டெல்லியில் குவ்வத்-உல்- இஸ்லாம் மஸ்ஜித் எனும் மசூதியைக் கட்டினார். அதுவே இந்தியாவிலுள்ள மிகப் பழமையான மசூதி எனக் கருதப்படுகிறது.
- குதுப்மினாருக்கு அவரே அடிக்கல் நாட்டினார். ஆனால் அவரால் அப்பணிகளை முடிக்க இயலாமல் போயிற்று. அவருடைய மருமகனும் அவருக்குப் பின் ஆட்சிப் பொறுப்பேற்றவருமான இல்துமிஷ் குதுப்மினாரைக்கட்டி முடித்தார்.

Ø கி.பி.1210ம் ஆண்டு குதிரை மீது அமர்ந்து போலோ விளையாடிக்கொண்டிருந்த போது குத்புதீன் நிலை தடுமாறி விழுந்து இறந்துபோனார்.

**இல்துமிஷ்** (**கி.பி.**1211 - **கி.பி.**1236)

- Ø மத்திய ஆசியாவில் வாழ்ந்த இல்பாரி என்ற பழங்குடி இனத்தில் பிறந்தவர். சிறுவனாக இருந்தபோதே குத்புதீனுக்கு அடிமையாக விற்கப்பட்டார்.
- Ø ஐபக்கின் மகன் ஆரம் ஷா திறமையற்றவராக இருந்தார். எனவே துருக்கியப் பிரபுக்கள் ஐபக்கின் படைத்தளபதியும் மருமகனுமான இல்துமிஷைச் சுல்தானாகத் தேர்வு செய்தனர்.
- Ø இவருடைய ஆட்சியின்போது தான் மங்கோலியர்கள் செங்கிஸ்கானின் தலைமையில் இந்தியாவின் எல்லைப்பகுதிகளை அச்சுறுத்தினர்.
- Ø மங்கோலியர்கள் தாக்குதல் மேற்கொண்டால் அதை எதிர்கொள்வதற்காகத் துருக்கியப் பிரபுக்கள் நாற்பதுபேரைக் கொண்ட ஒரு குழுவை உருவாக்கினார். அக்குழு “சகல்கானி“ அல்லது நாற்பதின்மர் என அறியப்பட்டது.
- Ø இல்துமிஷ் தனது படைகளில் பணியாற்றியோர்க்கு “இக்தாக்களை“ (நிலங்கள்) வழங்கினார்.
- Ø “இக்தா“ என்பது ராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியத்திற்காகக் கொடுக்கப்பட்ட நிலமாகும்.
- Ø நிலத்தைப் பெற்றவர் இக்தாதார். தனக்கு வழங்கப்பட்ட நிலங்களிலிருந்து வரிவசூல் செய்து கொள்வார்.

.

- Ø இல்துமிஷ் வெளியிட்ட "டங்கா" என்ற வெள்ளி நாணயம் 175 கி. எடை கொண்டது. "ஜிடால்" என்ற செம்பு நாணயமும் அவர் வெளியிட்டார்.
- Ø குதுப்-உத்-தீன்-பக்தியார் என்ற சூஃபித் துறவியின் நினைவாக குதுப்மினார் என்ற கோபுரத்தைக் குத்புதீன் ஐபெக் கட்டத்தொடங்கினார். அதனை இல்துமிஸ் கட்டி முடித்தார்.
- Ø இல்துமிஷ் படை பிரிவில் "நாற்பதின்மர் குழு" என்ற தொகுதிமுறை உருவாக்கப்பட்டது. அவர்கள் சகல்கான்கள் எனப்பட்டனர்.
- Ø அராபிய மொழியில் நாணயங்கள் வெளியிட்ட முதல் துருக்கியர் இல்துமிஷ்.
  - Ø இருபத்தாறு ஆண்டுகள் ஆட்சிபுரிந்த இல்துமிஷ் 1236 ஏப்ரல் மாதம் இயற்கை எய்தினார்.

**இரசியா** (**கி**.**பி** 1236- 1240)

- Ø இல்துமிஷ்மின் திறமை வாய்ந்த மகன் ருக்குதீன் பிரோஷ் மரணமுற்றதால், இல்துமிஷ் தனது மகளான ரஸ்ஸியா சுல்தானாவைத் தனக்குப் பின்னர் டெல்லியின் அரியணைக்கான வாரிசாக அறிவித்தார்.
- Ø ரஸ்ஸியா, ஜலாலுதீன் யாகுத் எனும் எத்தியோப்பிய அடிமையைத் தனது தனி உதவியாளராக நியமித்து அவரைப் பெரிதும் நம்பத் தொடங்கினர்.
- Ø அப்போக்கு துருக்கிய பிரபுக்கள் கலகம் செய்யக் காரணமாயிற்று.
- Ø அவருக்கு எதிராகத் துருக்கிய பிரபுக்கள் செய்த சதியால் 1240 இல் ரஸ்ஸியா கொலையுண்டார்.
- Ø சுல்தான்கள் வரிசையில் வந்த முதல் பெண் அரசி "**சுல்தானா இரசியா**"

**பால்பன் கி.பி**.1246- 1287)

- கியாசுத்தின் பால்பன் துருக்கிய இனத்தில் **இல்பாரி** என்னும் பிரிவைச் சார்ந்தவர்.
- தெய்வீக உரிமை கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டவர்.
- **பைபோஸ்** என்னும் புதிய வணக்க முறையை நடைமுறைப்படுத்தினார்.
- பைபோஸ் முறைப்படி மன்னரைச் சந்திக்க வருபவர், அவரது காலை முத்தமிட்டு வணங்கவேண்டும்.
- பால்பன் ஓர் அடிமையாக, தண்ணீர் சுமக்கும் தொழிலாளியாக வேட்டைக்காரனாக, தளபதியாக, இராஜதந்திரியாக சுல்தானாக வாழ்ந்தவர். அதோடு டெல்லி சுல்தான்களில் குறிப்பிடத்தக்கவர். - லேன்புல் கூற்று.
- தெய்வீகக் கோட்பாடு என்பது அரசர் கடவுளின் பிரதிநிதியாகக் கருதப்படுவதாகும்.
- பால்பன் **இந்தியக் கிளி** எனப் பாராட்டப்பட்ட **அமீர்குஸ்ருவையும்**. **அமீர்ஹாசன்** என்ற அறிஞரையும் ஆதரித்தார்.
- அடிமைவம்ச மன்னர்களில் சிறந்த மன்னராக **பால்பன்** திகழ்ந்தார்.
  - “நாற்பதின்மர்” என்றறியப்பட்ட துருக்கியப் பிரபுக்கள் குழு அவரோடு பகைமை பாராட்டியதால் அவ்வமைப்பைப் பால்பன் ஒழித்தார்.
  - பால்பனுக்கு எதிராகக் கலகம் செய்ததால் வங்காள மாகாண ஆளுநராக இருந்த துக்ரில்கான் கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார்.
  - அதன் பின்னர் ஜலாலுதீன் முறையாக அரியணை ஏறினார். அவரிலிருந்து கில்ஜி வம்சத்தின் ஆட்சி தொடங்கிற்று.

## கில்ஜி அரச வம்சம் ( 1290- 1320)

### ஜலாலுதீன் கில்ஜி ( 1296-1316)

- ஜலாலுதீன் ஆட்சியின்போது பல படையெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் பெரும்பாலான படையெடுப்புகளைத் திட்டமிட்டுத் தலைமையேற்று நடத்தியது காராவின் ஆளுநரான அலாவுதீனின் கில்ஜி ஆவார். அவர் ஜலாலுதீனின் உடன் பிறந்தோரின் மகனாவார்.
- அவரின் முக்கியப் படையெடுப்பு தக்காண அரசான தேவகிரிக்கு எதிராக மேற்கொண்டதாகும்.
- அலாவுதீன் தேவகிரி யாதவ அரசர் ராமச்சந்திரனைத் தோற்கடித்த பின்னர் அந்நகரைக் கொள்ளையடித்துப் பெருஞ்செல்வத்தோடு திரும்பினர். பின்னர் ஜலாலுதீனை வஞ்சகமாகக் கொன்றார்.
- அதனைத் தொடர்ந்து 1296ல் தன்னை டெல்லியின் சுல்தானாக அறிவித்துக்கொண்டார்.

### **அலாவுதீன் கில்ஜி** (**கிபி**.1296 - 1316)

- டெல்லி சுல்தான்களில், முதன் முதலில் தென்னிந்தியப் படையெடுப்புகளை மேற்கொண்டவர் அலாவுதீன் கில்ஜி ஆவார். அவரது நம்பிக்கைக்கு உரிய தளபதி **மாலிக்கபூரை** தென்னிந்திய அரசர்களுக்கு எதிராக அனுப்பினார்.
- தென்னிந்தியாவை சேர்ந்த தேவகிரியை ஆண்ட யாதவ அரசர் இராமச்சந்திரதேவன், வாரங்கல் அரசர் இரண்டாம் பிரதாபருத்ரன் மற்றும் ஹொய்சால அரசர் மூன்றாம் வீரபல்லாளன் ஆகியோர் தோற்கடிக்கப்பட்டு திறை செலுத்தும் அரசர்கள் ஆகினர்.
- அலாவுதீன் கில்ஜி தம்மை கடவுளின் பிரதிநிதியாக கருதினார்.

- நிரந்தரமான பெரும் படையை உருவாக்கினார். படைப்பிரிவில் குதிரைகளுக்கு சுடுபோடும் **தாக்** முறையை அறிமுகப்படுத்தினார்.
- வாழ்க்கைக்கு தேவைப்படும் பொருட்களின் விலைகளை நிர்ணயித்து அங்காடி சீர்திருத்தங்களை மேற்கொண்டார். அஞ்சல் முறையை மேம்படுத்தினார்.
  - அலாவுதீன் டெல்லி சுல்தானியத்தை ஒருங்கிணைத்து உறுதிப்படுத்தினார்.
  - பஞ்சாபில் மங்கோலியர்களுக்கு எதிராக, ராஜஸ்தானத்திற்கும் குஜராத்திற்கும் எதிராக என அவருடைய படையெடுப்புகள் பாராட்டுக்குரியனவாகும்.
  - தனது தலைமைத் தளபதி மாலிக் கபூரை 1310ல் தென்புலத்தின் வெகுதொலைவிலுள்ள மதுரை வரை படையெடுக்கப் பணித்தார்.
  - தேவகிரி யாதவர்கள், துவாரசமுத்திரத்தின் ஹொய்சாளர்கள், வாரங்கல் காகதியர்கள், மதுரைப் பாண்டியர்கள் ஆகிய அனைவரும் அலாவுதீனின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டனர்.

**<u>சித்தூர் சூறையாடல்</u>** (1303)

சித்தூர் ராஜபுத்திரப் படைகளை அலாவுதீனின் படைகள் திணறடித்த நிலையில் தோல்வியடைந்து விடுவோம் என்ற சூழலில் கோட்டைக்குள் இருந்த ஆடவரும் பெண்டிரும் தங்களது பண்டைய மரபின்படி "ஜவ்ஹர்" எனப்படும சடங்கை நடத்தினர், இதன்படி ஆடவர் கோட்டையை விட்டு வெளியேறிப் போர்க்களத்தில் மாள்வர். பெண்கள் தீப்புகுந்து தங்களை மாய்த்துக் கொள்வர்.

- டெல்லியிலும் ஏனைய இடங்களிலும், முகாமிட்டிருந்த தனது படைப் பிரிவுகளுக்காகக் கட்டாய உணவு தானியக் கொள்முதல் முறையை அறிமுகம் செய்தார்.
- கொள்முதல் விலை சுல்தானால் நிர்ணயம் செய்யப்பட்டது.
- அலாவுதீன் 1316ல் இயற்கை எய்தினார்.

- அவருடைய வழித்தோன்றல்கள் அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்வதில் தோல்வியுற்றதால் கியாசுதீன் துக்ளக் என்பவர் அதிகாரத்தைத் கைப்பற்றி துக்ளக் அரசவம்ச ஆட்சிக்கு அடிக்கல் நாட்டினார்.

**துக்ளக் அரசவம்சம்** (1320-1324)

- அலாவுதீன் கில்ஜியின் இறப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் குழப்பத்தின் காரணமாக டெல்லி சுல்தானியம் பல பகுதிகளை இழக்க நேரிட்டது.
- அவற்றை மீட்பதே கியாசுதீனுக்குப் பெரும் பணியாக அமைந்தது.
- ஜானாகான் முகமதுபின் துக்ளக் எனும் பெயரோடு 1325ல் அரியணை ஏறினார்.

**முகமது பின் துக்ளக்** (1325- 1351)

- முகமது பின் துக்ளக் மிகவும் கற்றறிந்த மனிதர். ஆனாலும் அவர் குரூரம் நிறைந்தவராவார்.
- அலாவுதீன் நாடுகளைக் கைப்பற்றினார், கொள்ளையடித்தார். ஆனால் முகமது பின் துக்ளக் இத்துணைக்கண்டம் முழுவதையும் தனது நாடாக மாற்றக் கனவு கண்டார்.
- தனது இறையாண்மையை விரிவு செய்வதற்கு வசதியாக தனது தலைநகரை டெல்லியிலிருந்து நாட்டின் மையப்பகுதியிலிருந்த தேவகிரிக்கு மாற்றினார்.
- தேவகிரியின் பெயரையும் தௌலதாபாத் என மாற்றினார்.
- தனது திட்டம் தவறானது என முகமது பின் துக்ளக் உணர்ந்ததால் மீண்டும் டெல்லிக்கே திரும்புமாறு அனைவருக்கும் ஆணையிட்டார்.
- சுல்தானுடன் டெல்லி திரும்பிய மொராக்கோ நாட்டுப் பயணியான இபன்பதுதா டெல்லியை அடைந்தபோது அது,

"காலியாக, கைவிடப்பட்டதாக ஆனால் குறைந்தளவு மக்களுடன் இருந்தது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

- Ø முகமது பின் துக்ளக் சுல்தானாக இருபத்தைந்து ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார்.
- Ø துக்ளக் 1351 மார்ச் 23ல் மரணமடைந்தார்.
- Ø கிபி.1325இல் இளவரசர் ஜூனாகான் "**முகமதுபின் துக்ளக்**" என்ற பட்டப் பெயருடன் அரசரானார்.
- Ø தமது தலைநகரை **டில்லியிலிருந்து தேவகிரிக்கு** மாற்றினார்.
- Ø முகமதுபின் துக்ளக் **அடையாள நாணயத்தை** அறிமுகப்படுத்தினார்.
- Ø துக்ளக் வெள்ளி தாங்கா நாணயங்களுக்கு பதில் **செப்பு** நாணயங்களை வெளியிட்டார்.
- Ø முகமதுபின் துக்ளக் ஏற்படுத்திய திட்டங்கள் அனைத்துமே சிறந்தவைகள் ஆகும். ஆனால் சூழ்நிலைகளை அறிந்து அவற்றை நடைமுறைப்படுத்தவில்லை. எனவேதான் அவரது திட்டங்கள் அனைத்தும் தோல்வியில் முடிந்தன.

**பிரோஸ் துக்ளக் (கிபி**.1351 -1388)

- Ø முகமது பின் துக்ளக்கைத் தொடர்ந்து கியாசுதீனின் இளைய சகோதரரின் மகனான பிரோஷ் அரியணை ஏறினார்.
- Ø அவரால் கிளர்ச்சிகளை அடக்கவும் இயலவில்லை, பிரிந்துசென்ற மாகாணங்களை மீட்கவும் முடியவில்லை.
- Ø பிரோஷா துக்ளக்கின் இறுதி நாட்கள் மகிழ்ச்சி நிறைந்தவையாக இல்லை. அவருடைய மகன் முகமது கான் தந்தைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார்.
- Ø 1388 இல் தனது 83வது வயதில் பிரோஷ் ஷா துக்ளக் இயற்கை எய்தினார்.

- Ø முகமதுபின் துக்ளக்கினால் வழங்கப்பட்ட **தக்காவி** என்னும் விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்தார்.
- Ø மக்களிடமிருந்து நான்கு வகையான வரிகளை வசுலித்தார்.

  **கரோஜ்** - விளைச்சலில் பத்தில் ஒரு பங்கு

  **கம்ஸ்** - போர்களில் கைப்பற்றிய பொருட்களில் ஐந்தில் ஒரு பங்கு

  **ஜெஸியா** - முஸ்லிம் அல்லாதவர்களள் மீது விதிக்கப்பட்ட வரி

  **ஜகாத்** - குறிப்பிட்ட இஸ்லாமிய சடங்குகளை செய்வதற்கு வசூலிக்கப்படும் கட்டணம்.

Ø **நீர்பாசன வரிவிதித்த** முதல் சுல்தான் இவர்.

Ø பெரோஸ் துக்ளக் பொதுப்பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

Ø **பதூஹத் - இ - பெரோஷாஹி** என்னும் தன்வரலாற்றுநூலை எழுதினார்.

Ø ஜியா உல்பரணி என்ற அறிஞரை ஆதரித்தார். இவரது காலத்தில் **குதுப்-பெரோஸ்-ஷாஹி** என்ற நூலும் எழுதப்பட்டது.

**<u>தைமூர் படையெடுப்பு (கிபி.</u>**<u>1398)</u>

Ø சாமர்கண்ட் பகுதியை தைமூர் என்பவர் ஆட்சி செய்தார். இவர் இந்திய நாட்டு செல்வ செழிப்பை அறிந்ததால் இந்தியாவின் மீது படையெடுக்க முடிவெடுத்தார்.

Ø கிபி.1398ல் டெல்லி தைமூரால் கைப்பற்றப்பட்டது. டெல்லி மக்களை கொன்று குவித்தார்.

- Ø பிரோஷ் ஷா துக்ளக் மரணமுற்று பத்தாண்டுகள் கழிந்த நிலையில் “தாமர்லைன்” என்றழைக்கப்பட்ட தைமூர் டெல்லியைத் தாக்கிச் சூறையாடி மாபெரும் மனிதப் படுகொலையை அரங்கேற்றினார்.

- Ø தைமூரின் படையெடுப்பால் டெல்லிக்கு அடுத்ததாக அதிகம் பாதிப்புக்கு உள்ளான பகுதி பஞ்சாப் ஆகும்.
- Ø தங்கம், வெள்ளி, நகைகள் என பெரும் செல்வத்தைக் கொள்ளையடித்து எடுத்துச்சென்றார்.
- Ø மேலும் தைமூர் செல்லும்போது சாமர்கண்டில் நினைவுச்சின்னங்களைக் கட்டுவதற்காகத் தச்சுவேலை செய்வோர், கட்டடக் கலைஞர்கள் போன்ற இந்தியக் கைவினைஞர்களையும் உடன் அழைத்துச் சென்றார்.

Ø தைமூரின் படையெடுப்பு துக்ளக் மரபின் வீழ்ச்சிக்கு அடிகோலியது.

**<u>சையதுமரபு (கிபி.</u>**<u>1414-1451)</u>

Ø துக்ளக் மரபின் வீழ்ச்சிக்கு பின்னர் சையது மரபினர் டெல்லியை ஆளத் தொடங்கினார்கள்.

Ø தைமூர் படையெடுப்பால் டெல்லிப் பகுதியில் நிகழ்ந்த அரசியல் குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட முல்தானின் ஆளுனர் **கிஸிர்கான்**, (கிபி.1414-1421) டெல்லியின் ஆட்சியைக் கைப்பற்றி கிபி.1414 இல் சையது மரபினைத் தொடங்கினார்.

Ø கிஸிர்கானின் இறப்பிற்கு பின்னர் அவரது மகன் **முபாரக்ஷா** மன்னரானார்.

Ø இவர் டெல்லி நீதிமன்றத்தில் இந்து மத உயர் குடியினரை நியமித்தார். யமுனை நதிக்கரையில் **முபாரக்பாத்** என்னும் நகரை நிர்மானித்தார்.

Ø இந்நிலையில் கிபி.1434ல் முபாரக் கொல்லப்பட்டார்.

Ø முபாரக் மரணத்தை அடுத்து அவரது சகோதரனின் மகனான **முகமதுஷா** மன்னரானார்.

- லாகூர் ஆளுனர் பஹ்லுல் லோடி உதவியுடன் மாளவத்தின் மீது படையெடுத்து அதனை வென்றார். இவ்வெற்றிக்குக் காரணமான பஹ்லுல் லோடிக்கு "**கானிகானா**" என்ற பட்டத்தைச் சுட்டினார்.
- கிபி.1445ல் முகமது ஷா இயற்கை எய்தினார்.
- முகமதுஷாவை அடுத்து **அலாவுதீன் ஷா** மன்னரானார்.
- இவர் திறமையற்று செயல்பட்டதால் லாகூரின் ஆளுநர் **பஹ்லுல் லோடி** டெல்லியின் ஆட்சியை கைப்பற்றினார்.
- அதோடு அலாவுதீன் ஷாவுக்கு கட்டாய ஓய்வளித்தார்.
- கிபி.1457ல் சையது வம்சம் முடிவுக்கு வந்தது.
- தைமூர் டெல்லியை விட்டுச்செல்வதற்கு முன்பாக கிசிர்கான் என்ற தனது பிரதிநிதியை ஆளுநராக நியமித்துச் சென்றார்.
- அவர் 1414ல் சையது அரச வம்சத்தைத் தோன்றுவித்தார். அவ்வரச வம்சம் 1451 வரை நீடித்தது.
- அவ்வம்சத்தின் கடைசி சுல்தான் அலாவுதீன் ஆலம் ஷா 1451ல் அரச பதவியைத் துறந்தார்.
- இது சிர்ஹிந்த் (பஞ்சாப்) பகுதியின் ஆளுநராக இருந்து பகலூல் லோடிக்கு டெல்லியின் சுல்தானாகும் வாய்ப்பினை வழங்கியது.
- அவரே லோடி வம்ச ஆட்சியைத் தோற்றுவித்தார்.

**<u>லோடிமரபு</u>**

- டெல்லியில் ஆண்ட சுல்தான்களில் லோடி மரபே இறுதியாக ஆட்சி செய்தது.
- இம்மரபைத் தொடங்கி வைத்தவர் **பாஹ்லால் லோடி** ஆவார்.
- இவர் அரியணையில் அமராமல் உயர்குடியினருடன் கம்பளத்தில் அமர்ந்து ஆட்சி செய்தார்.
- 1489ல் பகலூல் லோடியைத் தொடர்ந்து அவரது மகன் சிக்கந்தர் லோடி சுல்தானாகப் பொறுப்பேற்றார்.

Ø **சிக்கந்தர்ஷா** என்ற பட்டப்பெயருடன் ஆளத் தொடங்கினார்.

Ø தமது பேரரசை பஞ்சாப் முதல் பீகார் வரை விரிவடையச்செய்தார். ஆக்ரா நகரை கட்டினார்.

Ø செனாய் இசையை இவர் மிகவும் விரும்பினார்.

Ø **லஹ்ஜட்-இ-சிக்கந்தர் ஷாஹி** என்ற இசைத்தொகுப்பு இவர் காலத்தில் உருவாக்கப்பட்டது.

Ø லோடி மரபின் சிறந்த அரசான இவர் கிபி.1517இல் மரணமடைந்தார்.

**<u>லோடி மரபின் முடிவு</u>**

Ø சிக்கந்தர் லோடியை அடுத்து **இப்ராஹிம் லோடி** பட்டமேற்றார்.

Ø தவுலத்கான் லோடியின் மகன் தில்வர்கான் லோடியை இவர் கொடுமைப்படுத்தியதால் தவுலத்கான் லோடி காபுல் மன்னர் பாபரை உதவிக்கு அழைத்தார்.

Ø **பாபர்** தமது பெரும் படையுடன் இந்தியாவிற்கு வந்து **கிபி.1526ல் நடைபெற்ற முதலாம் பானிபட்** போரில் **இப்ராஹிம் லோடியை** வென்றார்.

Ø இந்த வெற்றியானது டெல்லியில் சுல்தான்களின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து முகலாயர் ஆட்சியை தொடங்கி வைத்தது.

**<u>சுல்தான்களின் ஆட்சியின் நிர்வாகம்</u>**

Ø கிபி.1206முதல் 1526 வரை 320 ஆண்டுகள் ஆண்ட டெல்லி சுல்தான்களின் ஆட்சியானது இராணுவ ஆட்சியாக இருந்தது.

**<u>சுல்தான்களின் அமைச்சர்கள்</u>**.

Ø **வசீர்** - பிரதம அமைச்சர் மற்றும் நிதியமைச்சர்

Ø **திவானி ரிஸாலத்** - வெளியுறவு அமைச்சர்

Ø **சுதர்-உஸ்-சாதர்** - இஸ்லாமியச் சட்ட அமைச்சர்

- **திவானி இன்ஷா** - அஞ்சல்துறை அமைச்சர்.
- **திவானி அர்ஸ்** - பாதுகாப்பு அல்லது படைத்துறை அமைச்சர்
- **காஸி-உல்-கஸாத்** - நீதித்துறை அமைச்சர்

**<u>நகர நிர்வாகம்</u>**

- பேரரசு பல இக்தாக்களாகப் பிரிக்கப்பட்டன. அதனை நிர்வகித்தோர் **இக்தார்** என்றழைக்கப்பட்டனர்.
- **இக்தாக்கள் ஷிக்**, **பர்கானா**, **கிராமங்கள்** ஆகிய உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டன.
- **ஷிக்** பகுதியின் நிர்வாகி **ஷிக்தார்** என்று அழைக்கப்பட்டார். பர்கானாவின் முக்கிய அலுவலர்கள் **அமில்** அல்லது **முன்ஷிப்** என்று அழைக்கப்பட்டனர். மேலும், **கருவூலர்**, **அனுங்கோ** ஆகியோர் நிர்வாகத்தில் இடம்பெற்றனர்.
- நீதித்துறையில் தலைமை நீதிபதி **காஸி-உத்-கவாத்** எனப்பட்டார்.

**<u>கலை மற்றும் கட்டடக்கலை</u>**

<u>சுல்தான்களின் கட்டட அமைப்பை மூன்று வகைப்படுத்தலாம்</u>.

- 1.டெல்லி அல்லது பேரரசு கலைபாணி,
  2.நகரக் கலைபாணி,
  3.இந்துக்கள் கலைபாணி.
- குதுப்மினார், குவாத் உத் இஸ்லாம் மசுதி, பால்பனின் சமாதி ஆகியன மாம்லுக் கால அழகிய கட்டடங்களாகும்.
- டெல்லியில் அமைந்துள்ள சீரி நகரம் ஹரத்நிஜாமுதின் அலுயாவின் தர்கா, அலாய்தார்வாசா ஆகியவை கில்ஜி காலக்கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டாகும்.

**<u>இலக்கியம்</u>**

Ø **உருதுமொழி** சுல்தான்களின் காலத்திலேயே உருவாக்கப்பட்டது.

Ø **அல்பருனி** என்ற அறிஞர் அரபு, பாரசீக மொழிகளில் புலமை பெற்றிருந்தார்.

Ø இவர் **கிதாப்-உல்-இந்த்** என்ற நூலை இயற்றினார்.

Ø இந்தியாவில் பல்லாண்டு காலம் தங்கியிருந்து இவர் கஜினி முகமது அவையிலும் இடம்பெற்றிருந்தார்.

Ø சுல்தான்களின் ஆட்சியில் **நீதிமன்றத்தில் பாரசீக மொழி** நடைமுறையில் இருந்தது.

Ø கிபி.1526ல் முதலாம் பானிப்பட் போரில் லோடி வம்சம் முடிவுக்கு வந்ததால் சுல்தான்களின் ஆட்சியும் முற்றுப் பெற்றது.

Ø **டெல்லியைத்** தலைநகராகக் கொண்டு முகலாயப் பேரரசு உருவானது.

********

# தமிழ்நாடு அரசு

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு** : TNPSC **ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**)

**பாடம்** : **வரலாறு**

**பகுதி** : **தமிழர்களின் பண்பாடு மற்றும் தமிழ்நாட்டின் புராதனங்கள்**

©**காப்புரிமை** :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமை பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்**,

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# வரலாறு

## தமிழர்களின் பண்பாடு மற்றும் தமிழ்நாட்டின் புராதனங்கள்

### தமிழ்நாட்டின் பண்பாட்டு மரபுகள்

· இந்தியாவில் வேதகாலத்திற்கு முன்பு சிந்துசமவெளியை மையமாகக் கொண்ட திராவிட நாகரிகம் தழைத்திருந்தது.

· ஆரியர்களின் வருகைக்குப்பின் தென்னிந்தியா குறிப்பாக தமிழகம், திராவிட நாகரிகத்தின் மையமாக மாறியது.

· தொன்மையான பாலி மற்றும் சமஸ்கிருத இலக்கியங்கள், தமிழ் மற்றும் தென்னிந்தியப் பகுதிகளை “திராமிளா” என்றும் மற்றும் திராவிட என்ற சொற்களால் குறிப்பிட்டன.

· வடநாட்டை ஆரிய வர்த்தம் எனவும், தென்னாட்டை “திராமிளா” மற்றும் “திராவிட” என்றும் வேறுபடுத்திக் காட்டுகின்றனர்.

· கி.மு.500 முதல் கி.பி.1300- வரை தமிழ்நாட்டின் அரசியல் வரலாறு 3 பகுதிகளாக பிரிக்கப்பட்டது.

· சங்க காலம்

· களப்பிரர் காலம்

· தமிழ்ப் பேரரசுகளின் காலம்

### ஆட்சிமுறை

· சங்ககால அரசு மன்னராட்சி முறையில் அமைந்திருந்தது.

· இருப்பினும் மன்னர் அமைச்சரவையின் ஆலோசனைகளுக்கு மதிப்பளித்தார்.

· அவை, நாளவை, மன்றம் எனவும், அரசவை அழைக்கப்பட்டது.

### சமுதாயம்

· தொல்காப்பியத்திலுள்ள பொருளதிகாரத்தில் சங்க காலத் தமிழரின் சமூக நிலை கூறப்படுகிறது.

· புவியியல் அமைப்பில் தமிழ்நாட்டிலுள்ள நிலப்பகுதிகள் மலையும் மலைச் சார்ந்த பகுதியை குறிஞ்சி எனவும், காடும் காடு சார்ந்த பகுதியை முல்லை எனவும், வயலும் வயல் சார்ந்த பகுதியை மருதம் எனவும், கடலும் கடல் சார்ந்த பகுதியை நெய்தல் எனவும், மலையின்றி வளம் குன்றிப் போன பகுதியை பாலை என ஐந்திணைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன.

· திணைகளின் அடிப்படையில் மக்களும், பின்வருமாறு அழைக்கப்பட்டனர்.

· குறிஞ்சி நில மக்கள்- குறவர்(அ) வேடர்
· முல்லை நில மக்கள்- இடையர்(அ) ஆயர்
· மருத நில மக்கள் - உழவர்
· நெய்தல் நில மக்கள் - பரதவர்(அ) மீனவர்
· பாலைப்பகுதி மக்கள் - கள்வர்

**<u>சமயம்</u>**

· சங்க காலத்தில் வழிபாட்டு முறைகள் திணை அடிப்படையில் அமைந்திருந்தன.

· சோழர் ஆட்சியின் இறுதியில் "முருக வழிபாடு" இருந்தது.

· யாழ் என்ற நரம்புக் கருவியும், குழல் என்ற கருவியும் மற்றும் முழவு என்ற தோல் கருவியையும் இசை நிகழ்ச்சிகளில் பயன்படுத்தினர்.

· பல்லவர்களது குடிமையான் மலைக்கல்வெட்டில் உருத்திராச்சாரியார் என்ற புகழ் பெற்ற இசைக்கலைஞரைப் பற்றிய செய்தி உள்ளது.

· சமண, பௌத்த சமணங்கள் போன்று தமிழர்களும், தீதும் நன்றும் பிறர்தர வாரா என்ற கருத்தைக் கொண்டிருந்தனர்.

## தமிழ்நாட்டின் புராதனங்கள்

· 1958 - **சனவரி** 14-**ஆம்** நாள் தமிழ்மொழி மாநிலத்தின் ஆட்சி மொழியாக கொண்டு வரப்பட்டது.

· தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பு 1,30,058 **சதுர கிலோ மீட்டர்**.

· முக்கோண வடிவமைப்பில் அமைந்துள்ள தமிழ்நாடு இந்திய மாநிலங்களில் 11- **வது இடத்தை** வகிக்கிறது.

**மாநில சின்னங்கள்**

· மாநிலப் பறவை - **மரகதப்புறா**.

· மாநிலப் பூ - **செங்காந்தள் மலர்**

· மாநில விலங்கு - **வரையாடு**

· மாநில மரம் - **பனைமரம்**

· தமிழகத்தின் தோற்றம் சுமார் 6000 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாகும்.

· சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு திராவிட பாரம்பரியத்துடன் ஆரிய நாகரிகம் கலந்ததன் காரணமாக நாகரிகத்தின் **தொட்டிலாக தமிழகம்** விளங்குகிறது.

· **மதுரையில் திகழ்ந்த முதல் தமிழ்ச்சங்கம்** கடல்கோளால் அழிந்தது.

· **இரண்டாம் தமிழ்ச் சங்கம் கபாடபுரத்திலும்**,

· 3-**ஆம் தமிழ்ச்சங்கம் மதுரையிலும் அமைந்தது**.

· தமிழ் மொழிக்கே உரித்தான சிறந்த இலக்கண நூலான **தொல்காப்பியம்**, கடைச்சங்க காலத்தில் உருவானதாகும்.

· செம்மொழியாக உயர்த்தப்பட்டுள்ள தமிழ் மொழி செம்மொழி **தரவரிசையில் எட்டாவதாகும்**.

· பண்டைய தமிழகத்தை **சேர**, **சோழ**, **பாண்டிய** மற்றும் **பல்லவ** மன்னர்கள் ஆண்டனர்.

· அவர்களின் ஆட்சியில் கலை, இசை, வணிகம், மற்றும் வேளாண்மை போன்றவை மிக வளர்ச்சி அடைந்த நிலையில் காணப்பட்டதால் அவர்கள் ஆட்சிக் காலம் **தமிழ்நாட்டின் பொற்காலம்** எனப் போற்றப்படுகிறது.

· கிறிஸ்துவ டச்சு பாதிரியார்களால் முதல் தமிழ் அச்சகம் **தரங்கம்பாடியில்** தொடங்கப்பட்டது.

· தமிழ்நாட்டின் மிகப்பெரிய சிகரம் **தொட்டபெட்டா** ஆகும்.

· தமிழ்நாட்டின் காலநிலை அயனமண்டல வகையைச் சார்ந்தது.

· முதலாம் நூற்றாண்டில் **கரிகாலனால் கட்டப்பட்ட கல்லணை** தமிழகத்தில் கால்வாய் பாசனம் பயன்படுத்தப்பட்டு வந்ததற்கான சரித்திர சான்றாகும்.

· இன்று வரை பயன்படுத்தப்பட்டு வரும் கல்லணை உலகின் மிகப் பழமையான நீர் மேலாண்மைத் திட்டமாகும்.

· தமிழ்நாட்டின் இரண்டு கடற்கரைகள் குறிப்பிடத்தக்கதாகும்.

1. **மெரினா கடற்கரை**

· உலகின் இரண்டாவது நீண்ட கடற்கரை.

· சுமார் 13 கி.மீ. நீளமுடையது.

· சென்னை நகரில் முக்கிய சுற்றுலா தளங்களில் ஒன்று.

2. **இராமேஸ்வரம் கடற்கரை**.

· அழகிய கடல் நிலத்தோற்றங்களுக்கும், அலையில்லா கடல் பரப்பிற்கும் இக்கடற்கரை புகழ்பெற்றது.

· இங்கு கடல் அலைகள் 3 செண்டிமீட்டருக்கும் மிகாத அளவிற்கு எழும்புவதால் இது பார்ப்பதற்கு ஒரு மிகப்பெரிய ஏரி போன்ற தோற்றத்தை அளிக்கிறது.

******

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு** : TNPSC **ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**)

**பாடம்** : **வரலாறு**

**பகுதி** : **தமிழ்நாடு திராவிடக் கட்சிகள் மற்றும் பிரபலமான திட்டங்கள்**

©**காப்புரிமை** :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமை பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்**,

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# வரலாறு

## தமிழ்நாட்டில் திராவிட இயக்கம்

### திராவிட முன்னேற்ற கழகம்

- 1916-இல் பிராந்திய அரசியல் தமிழ்நாட்டில் உணரப்பட்டது.
- 1912-இல் நடேச முதலியார் மற்றும் சிலரால் **திராவிடச் சங்கம்** அமைக்கப்பட்டது.
- பின்னர் திராவிடச் சங்கம் , **நீதிக்கட்சி** என்று பெயர்பெற்றது.
- 1944-இல் பெரியார் **திரு.ஈ.வெ.இராமசாமி** தலைமையில் திராவிடர் கழகம் அமைக்கப்பெற்றது.
- திரு.சி.என்.அண்ணாத்துரையும் அதில் சேர்ந்தார்.
- 1949 - செப்டம்பர் திங்கள் 17-ஆம் நாளன்று **திராவிட முன்னேற்றக் கழகத்தை** அண்ணா துவக்கி வைத்தார்.
- 1949 முதல் 1957 - வரை தி.மு.க. ஒரு சமுதாய அமைப்பாக மக்களுக்கு பணியாற்றியது.
- 1963 அக்டோபர் திங்கள் 23 அன்று திராவிட நாடு என்னும் கொள்கை கருத்தியலை அண்ணா சந்தித்தார்.
- உதயசூரியன் தி.மு.க-வின் தேர்தல் சின்னமாகும்.
- 1957-இல் முதல் முறையாக தி.மு.க.தேர்தலில் போட்டியிட்டது.
- 1967-இல் நடைபெற்ற நான்காவது பொதுத் தேர்தல்களில் தி.மு.க. ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது.
- 1967-இல் அண்ணா முதலமைச்சர் ஆனார்.
- 1969-ஆம் ஆண்டு பிப்ரவரி 3-ஆம் நாள் வரை பதவியில் நீடித்தார்.
- அண்ணாவின் மறைவிற்கு பின்னர் திரு.மு.கருணாநிதி தமிழ்நாட்டின் முதலமைச்சரானார்.

## அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்

- கட்சித்தலைவர் என்ற முறையில் திரு.மு.கருணாநிதி 1972-இல் அக்டோபர் திங்கள் 13- அன்று கருத்து வேறுபாடு காரணமாக திரு.எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களை கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கினார்.
- 1972-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18-ஆம் நாளன்று தனது சொந்த கட்சியை எம்.ஜி.ஆர். நிறுவினார்.
- அதற்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று பெயர் சூட்டினார்.
- 1976- செப்டம்பர் 12-ஆம் நாள் எம்.ஜி.ஆர். தனது கட்சியின் பெயரை அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று மாற்றினார்.
- எம்.ஜிஆர்.. மறைவிற்குப் பின் செல்வி.ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையின் கீழ் கட்சி பலமும், வரவேற்பும் பெற்றது.
- அ.தி.மு.கவின் அடிப்படை கருத்தியல் **அண்ணாயிசம்** ஆகும்.
- ஏழ்மையையும், தீண்டாமையும் ஒழிப்பது அண்ணாயிசத்தின் அடிப்படைக் கொள்கை.
- முதல் முறையாக அ.தி.மு.க. 1973-ஆம் ஆண்டு மே- திங்கள் திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதியில் தோ்தலை சந்தித்தது.

## தெலுங்குத் தேசம்

- ஒரு மாநில அரசியல் கட்சி.
- என்.டி.இராமராவ் 1982- மார்ச் 29-ஆம் நாள் இக்கட்சியை தோற்றுவித்தார்.

- இக்கட்சி 1983, 1985, 1994 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற ஆந்திர மாநில சட்டசபை தேர்தல்களில் வெற்றியடைந்தது.
- இவருக்குப்பின் 1995-இல் திரு.எம்.சந்திரபாபுநாயுடு தொடர்ந்தார்.

**அகாலி தளம்**

- இது சமயம் சார்ந்த அரசியல் கட்சி.
- மாஸ்டர்.தாராசிங் என்பவர் இவருக்கு தலைவராக இருந்தார்.

# அரசியல் கட்சிகள்

- இந்தியா 1950 ஆம் ஆண்டு மக்களாட்சி நாடானது.
- துடிப்பான ஒரு மக்களாட்சி நாட்டிற்கு ஒரு வலிமையான அரசியல் கட்சி முறை அவசியமான ஒன்றாகும்.
- கட்சி முறை என்பது நவீனகால தோன்றல் ஆகும்.
- மக்களாட்சியில் மக்கள் எந்த விஷயங்கள் குறித்தும் தங்களது கருத்துக்களை வெளியிடலாம்.

**அரசியல் கட்சிகள் என்றால் என்ன**?

- அரசியல் கட்சிகள் என்பவை தன்னார்வத்தோடு ஏற்படுத்தப்பட்ட தனி மனிதர்களின் அமைப்பு ஆகும்.
- இவை பரந்த கருத்தியல் அடையாளங்களோடு சில கொள்கைகளை ஏற்றுக்கொண்டு சமூகத்திற்கான திட்டங்களையும் நிரல்களையும் வடிவமைக்கின்றன.
- மேலும் அரசியல் கட்சிகள் மக்களின் ஆதரவைப் பெற்று தேர்தலில் வெற்றிப்பெறுவதன் மூலம் தமது கொள்கைகளை நடைமுறைப்படுத்துகின்றன.அவற்றின் அளவு, அமைப்பு மற்றும் கொள்கை ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபடுகின்றன.

- எந்த ஒரு அரசியல் கட்சியும் பின்வரும் மூன்று கூறுகளைக் கொண்டிருக்கும்.

1. தலைவர்
2. செயல் உறுப்பினர்கள்
3. தொண்டர்கள்

## அரசியல் கட்சிகளின் முக்கியத்துவம்

- அரசியல் கட்சிகள் மக்களாட்சியின் முதுகெலும்பு எனலாம்.
- அரசியல் கட்சிகள் முறையாக அமைக்கப்பட்ட அரசாங்கத்தின் ஒரு பகுதியாக இல்லாமல் அரசாங்கத்தை அமைக்கும் முக்கிய காரணிகளாக இருக்கின்றன.
- அவை பொதுக்கருத்துக்களை உருவாக்குகின்றன. கட்சிகள் குடிமக்களுக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் இடையே பாலமாக சேவை செய்கின்றன.
- **ஒரு கட்சி அங்கீகரிக்கப்படுவது எவ்வாறு எனில்** ஐந்து ஆண்டுகளாக அரசியல் செயல்பாடுகளில் ஈடுபட்டிருக்க வேண்டும்.
- வேட்பாளர்கள் குறைந்தபட்சம் 6% ஓட்டுக்களை இறுதியாக நடைபெற்ற பொதுத் தேர்தலில் பெற்றிருக்க வேண்டும்.


## அரசியல் கட்சிகளின் இயல்புகள்

- அரசியல் கட்சிகள் பொதுவான குறிக்கோள் மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட மதிப்பீடுகளை கொண்ட மக்கள் குழுக்களாக இருக்கின்றன.
- தனக்கென கொள்கை மற்றும் திட்டங்களைக் கொண்டிருக்கின்றன.
- அரசியல் அமைப்பின் வழியாக ஆட்சியைக் கைப்பற்ற முயல்கின்றன.
- தேசிய நலன்களை வலியுறுத்த முயற்சி செய்கின்றன.

**கட்சியின் தேர்தல் அறிக்கை**

v தேர்தலுக்கு முன்பான பரப்புரையில் வேட்பாளர்கள் தங்களது கட்சி ஆட்சிக்கு வந்தால் மேற்கொள்ளப்படும் திட்டங்கள், கொள்கைகளை அறிவிப்பார்கள்.

## அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள்



## கட்சி முறைகளின் வகைகள்

- Ø மூன்று வகையான கட்சி முறைகள் நடைமுறையில் இருக்கின்றன.

### 1.**ஒரு கட்சி முறை**

- Ø இம்முறையில் ஒரே அரசியல் கட்சி மட்டும் அரசாங்கத்தை ஏற்படுத்தும் உரிமையைக் கொண்டிருக்கும்.
- Ø இவ்வகையான ஒரு கட்சி முறை சீனா,வடகொரியா மற்றும் கியூபா ஆகிய நாடுகளில் நடைமுறையில் இருக்கின்றன.

### 2.**இரு கட்சி முறை**

- Ø இம்முறையில் இரண்டு கட்சிகள் அதிகாரத்தை பங்கு கொள்ளும் வகையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும்.
- Ø இவற்றில் ஒன்று ஆளும் கட்சியாகவும் மற்றொன்று எதிர்க்கட்சியாகவும் செயல்படும்.
- Ø இருகட்சி முறை பிரிட்டன் (தொழிலாளர் கட்சி மற்றும் பழமைவாதக் கட்சி அமெரிக்க ஐக்கிய நாடுகளில் (குடியரசுக்கட்சி மற்றும் ஜனநாயகக் கட்சி) காணப்படுகின்றன.

### 3.**பலகட்சி ஆட்சி முறை**

- Ø அதிகாரத்திற்கான போட்டி மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட கட்சிகளிடையே இருக்குமாயின் அது பல கட்சி முறை என அழைக்கப்படுகிறது.

- இம்முறை இந்தியா, ஸ்வீடன், நார்வே உள்ளிட்ட நாடுகளில் காணப்படுகிறது.

**இந்தியாவில் அரசியல் கட்சி முறை**

- இந்தியாவில் கட்சி முறை பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியது. கூட்டாட்சி அமைப்பினை பின்பற்றும் நாடுகளில் இருவகையான கட்சிகள் காணப்படுகின்றன.
- இந்தியாவில் உலகின் அதிக எண்ணிக்கையிலான கட்சிகள் காணப்படுகின்றன.
- இந்தியாவில் கட்சிகள் மூன்று படிநிலையில் உள்ளன. அவை தேசியக் கட்சிகள், மாநிலக்கட்சிகள், பதிவு செய்யப்பட்ட, அங்கீகரிக்கப்படாத (சுயேட்சைகள்) கட்சிகள் ஆகும்.
- ஒவ்வொரு கட்சியும் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

**தேர்தல் ஆணையம்- சட்டபூர்வ அமைப்பு**

இந்திய தேர்தல் ஆணையம் தேர்தல்களை நடத்துவதற்கு அதிகாரம் கொண்ட ஒரு சுதந்திரமான சட்டப்படியான அரசியலமைப்பு ஆகும். இதன் தலைமை இடம் புதுதில்லியில் அமைந்துள்ளது.

**கட்சிகள் அங்கீகரிக்கப்படுவதற்கான நிபந்தனைகள்**

- இந்தியாவில் அரசியல் கட்சிகளை அங்கீகரிப்பதற்கு இந்தியத் தேர்தல் ஆணையம் சில விதிமுறைகளை வகுத்துள்ளது.

**<u>தேசியக்கட்சிகள்</u>**

- Ø மக்களவைத் தேர்தலில் அல்லது நான்கு மாநிலங்களுக்கான சட்டமன்ற தேர்தலில் செல்லத்தக்க மொத்த வாக்குகளில் ஒரு கட்சி 6 சதவீதம் வாக்குகளை பெற்றிருத்தல் வேண்டும்.
- Ø ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட மாநிலங்களில் நான்கு மக்களவைத் தொகுதிகளில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும்.
- Ø இறுதியாக நடைபெற்ற மக்களவை தேர்தலில் குறைந்தபட்சம் மூன்று மாநிலங்களில் 2 சதவீதம் தொகுதிகளில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும்.

**<u>பிராந்திய அல்லது மாநிலக்கட்சிகள்</u>**

- Ø மாநில சட்டப்பேரவைக்கான தேர்தலில் செல்லத்தக்க வாக்குகளில் குறைந்த பட்சம் 6 சதவீதம் வாக்குகளை பெற்றிருத்தல் வேண்டும்.
- Ø 25 தொகுதிகளுக்கு ஒரு மக்களவைத் தொகுதி அல்லது சட்டப்பேரவைத் தேர்தலில் குறைந்தபட்சம் இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும்.
- Ø மாநில சட்டமன்ற மொத்த தொகுதிகளில் 3 சதவிதம் தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும்.

**<u>சுயேட்சை வேட்பாளர்</u>**

சுயேட்சை வேட்பாளர் என்பவர் எந்தக் கட்சியிலும் சேராமல் தானாக மக்களவை அல்லது மாநில சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் நபர் ஆவார்.

## அரசியல் கட்சிகள்

- Ø மக்களாட்சி அரசாங்கத்தில் முக்கிய பங்கு வகிப்பவை அரசியல் கட்சிகள். மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே ஒரு பாலமாக செயல்படுபவை அரசியல் கட்சிகள்.
- Ø ஓர் அரசியல் கட்சி என்பது அரசாங்கத்தில் ஆதிக்கம் செலுத்துவதற்காக தேர்தலில் போட்டியிடுவதற்காக நிகழ்ச்சி நிரல்களையும், குறிப்பிட்ட கொள்கைகளையும் கொண்ட மக்கள் குழுவின் அமைப்பாக காணப்படும்.
- Ø இந்தியாவில் மன்னராட்சி முறை மறைந்து மக்களாட்சி முறை நடைபெற்று வருகிறது.
- Ø மக்களாட்சி என்பது மக்களால், மக்களுக்காக , மக்களே ஏற்று நடத்தும் அரசு - ஆபிரகாம் லிங்கன் கூற்று.
- Ø கட்சி முறைகள் மூன்று வகைப்படும்.
- Ø 1. ஒரு கட்சி முறை- எ-கா.சோவியத்ரஷியா
- Ø 2. இருகட்சி முறை - எ.கா.அமெரிக்கா, இங்கிலாந்து
- Ø 3. பலகட்சி முறை - எகா. இந்தியா, பிரான்ஸ், இத்தாலி
- Ø மற்றும் இலங்கை.
- Ø பலவகையான சாதி, சமூக, பண்பாடு மற்றும் மொழி பிரிவுகளின் காரணமாக பல கட்சி அமைப்புமுறை இந்தியாவில் காணப்படுகிறது.
- Ø தேர்தல் முடிவிற்கு பிறகு மத்திய அரசில் கூட்டாட்சி அமைக்கவேண்டிய சூழ்நிலை உருவாகும் போது மாநில கட்சிகள் தேசிய கட்சிகளுக்கு ஆதரவை நல்கி கூட்டாட்சி அமைக்க முக்கிய பங்காற்றுகிறது.
- Ø **மாநில கட்சிகள்** - சட்டப்பேரவை அல்லது நாடாளுமன்ற தேர்தலில் குறிப்பிட்ட சதவீதம் அல்லது குறிப்பிட்ட இடங்களைப்

பெற்ற கட்சிகள் என்ற அடிப்படையில் இந்திய தேர்தல் ஆணையத்தினால் ஒப்புதல் பெற்ற கட்சிகள் மாநில கட்சிகளாகும்.

- **தேசிய கட்சிகள்** - குறைந்தது நான்கு மாநிலங்களில் மாநில கட்சி என ஒப்புதல் பெற்ற கட்சிகள் தேசிய கட்சிகள் ஆகும்.
- 2017 நிலவரப்படி அங்கீகரிக்கப்பட்டுள்ள தேசியக் கட்சிகளின் எண்ணிக்கை **ஏழு** ஆகும்.
- ஏழு தேசிய கட்சிகளைத் தவிர நாட்டின் பெரும்பான்மையான முக்கிய கட்சிகளை மாநில கட்சிகளாக தேர்தல் ஆணையம் வகைப்படுத்தி உள்ளது. இக்கட்சிகள் **பிராந்தியக் கட்சிகள்** எனப்படும்.
- இந்திய தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சி தேசியக்கட்சி என பங்குபெற மக்களவை தேர்தலிலோ, அல்லது மாநில சட்டசபை தேர்தலிலோ குறைந்தபட்சம் **நான்கு மாநிலங்களில்** பதிவான மொத்த செல்லத் தகுந்த வாக்குகளில் குறைந்தபட்சம் **ஆறு சதவீதம்** பெற்றிருக்க வேண்டும். அல்லது மக்களவையில் குறைந்தபட்சம் இரண்டு சதவீதம் இடங்களில் வெற்றிபெறவேண்டும்.
- மேலும், குறைந்தபட்சம் மூன்றுக்கும் மேற்பட்ட மாநிலங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அல்லது குறைந்த பட்சம் நான்கு மாநிலங்களில் மாநில கட்சியாக அங்கீகாரம் பெற்றிருக்கவேண்டும்.
- நாட்டில் சட்டங்கள் இயற்றுவதில் அரசியல் கட்சிகள் முக்கியப் பங்களிப்பு செய்கின்றன.
- தேர்தலில் தோல்வியடைந்த கட்சிகள் எதிர்கட்சியாக பங்களிப்பு செய்கின்றன.
- மக்களாட்சி முறையிலான அனைத்து அரசாங்கங்களிலும், எதிர்கட்சி தலைவர் முக்கியப் பங்கை வகிக்கிறார்.

- இவர் கேபினேட் அமைச்சர் தகுதி பெறுகிறார். பொதுக்கணக்கு குழுவின் தலைவராக இவர் அரசுத்துறைகளில் செயல்பாடுகளை கேள்விக்குள்ளாக்குவதோடு மக்கள் நலனுக்காக செலவிடப்படும் பொதுப்பணத்தை ஆய்வு செய்கிறார்.
- இதே போன்று அவர் மத்திய கண்காணிப்பு ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதிலும், முக்கியப்பங்கு வகிக்கிறார். இவ்வாறு எதிர்கட்சிகள் மக்களின் நியாயமான கோரிக்கைகள், விருப்பங்களை பிரதிபலிக்கின்றன.

## தமிழக அரசின் பிரபலமான திட்டங்கள்

### பெண்கள் நலத்திட்டங்கள்

- மகளிர் நலத்துறை ஏற்படுத்தப்பட்ட ஆண்டு - 1947
- சமூக நல வாரியம் - 1952
- மாநில சமூக நல வாரியம் - 1954
- குடும்ப நல அறுவைச்சிகிச்சை திட்டம் -1956
- தமிழக மகளிர் ஆணையம் -1990

### திருமண உதவித் திட்டம்

- **மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்** நினைவு திருமண உதவித் திட்டம்.- 1989
- ஏழை பெற்றோர்கள் தங்களின் பெண்களின் திருமணத்தை நடத்திடும் பொருட்டு இவ்வுதவித் தொகை வழங்கப்படுகிறது.
- **ஈ.வெ.ரா .மணியம்மை நினைவு** ஏழை விதவைப் பெண்கள் திருமண உதவித்திட்டம்-1981, 1982
- அன்னை தெரசா நினைவு அனாதைப் பெண்கள் திருமண உதவித் திட்டம் 1984-1985.

- டாக்டர்.தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணத் திட்டம் .
- டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம்.
- மகளிர் திட்டம் -1997
- பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்
- சத்யா அம்மையார் நினைவு அரசு அநாதைகள் திட்டம்.
- பெரியார் ஈ.வெ.ரா. நாகம்மை திட்டம்-1989.
- டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித்திட்டம் -1989.
- தொட்டில் குழந்தை திட்டம் -1992
- சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்.
- தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதிக் கழகம் -1974
- மாற்றுத்திறனாளிகள் நலத்திட்டம் - 1992
- முதியோர் ஓய்வூதியத் திட்டம் -1962
- அன்னபூர்ணா திட்டம்.
- ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்-1975.
- புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்-1982
- உழவர் சந்தை திட்டம்- 1999
- வரும் முன் காப்போம் திட்டம் - 1996.
- கோயில்களில் அன்னதான திட்டம் - 2002
- இலவச சைக்கிள் திட்டம் - 2004-2005
- புதுவாழ்வுத் திட்டம் - 2005
- இலவச வண்ணத்தொலைகாட்சி வழங்கும் திட்டம்-2009
- தன்னிறைவுத் திட்டம் - 1997, 1998
- அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்-2006.
- முதலமைச்சரின் சூரிய ஆற்றல் பசுமை வீடுகள் திட்டம்-2011.

- ஒருங்கிணைந்த பள்ளி கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம்-2011.
- ஊரக, கிராமப்புற சாலைகள் திட்டம்- 1995, 1996.
- சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டம் -2003-2004
- தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம்- தாய் திட்டம் - 2011-2012.
- ஆதரவற்ற திருநங்கைகளுக்கான ஓய்வூதியத் திட்டம்.
- முதலமைச்சரின் பெண்குழந்தைகள் பாதுகாப்பு திட்டம்.
- குழந்தை தத்தெடுப்புத் திட்டம்.
- அம்மா உணவகம் திட்டம்.
- அம்மா குடிநீர் திட்டம்.
- இலவச கணிணி வழங்கும் திட்டம்.
- அம்மா குழந்தை பாதுகாப்பு பெட்டகம் வழங்கும் திட்டம்.
- அம்மா உப்பு.
- அம்மா சிமெண்ட்.
- அம்மா விதைகள்.
- பண்ணை பசுமை நுகர்வோர் கூட்டுறவு கடை.
- அம்மா சேவை மையம்.
- அம்மா அழைப்பு மையம்.
- அம்மா மருந்தகம்.
- அம்மா ஆரோக்கியத் திட்டம்.
- முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டம்.
- அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம்.
- இலவச சேலை, வேட்டி வழங்கும் திட்டம்.
- அம்மா முழு உடல் ஆய்வு பரிசோதனைத் திட்டம்.
- விபத்து காப்பீட்டுத் திட்டம்.

***********

# தமிழ்நாடு அரசு

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு** : TNPSC **ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**)

**பாடம்** : **வரலாறு**

**பகுதி** : **தென்னிந்திய வரலாறு மற்றும் பண்பாடு**

©**காப்புரிமை** :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமை பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# வரலாறு

## தென்னிந்திய வரலாறு மற்றும் பண்பாடு

Ø பண்டைய தமிழகமானது **சேர**, **சோழ**, **பாண்டிய நாடு** என்ற முப்பெரும் அரசியல் பிரிவுகளைக் கொண்டது. இக்காலம் **சங்ககாலம்** எனப்பட்டது.

Ø களப்பிரர்கள் **கி.பி.**300 **முதல்** 600 **ம்** ஆண்டுவரை தமிழகத்தை ஆண்டனர்.

Ø **மூவேந்தர்** - சங்ககால ஆட்சியாளர்களின் சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர்களே முன்னிலையில் இருந்தனர்.

### சேரர்கள்

Ø அசோகரின் கல்வெட்டுக்களில் **கேரள புத்திரர்கள்** என்'று குறிக்கப்படுபவர்கள் சேரர்கள்.

Ø தற்கால கேரளத்தையும், தமிழ்நாட்டு மேற்கு பகுதியையும் ஆட்சி புரிந்தனர்.

Ø தலைநகரம் - **வஞ்சி**.

Ø துறைமுகப்பட்டினம் - **முசிறி**, **தொண்டி**.

Ø தமிழ்நாட்டில் தற்போதுள்ள **கரூர்** மாவட்டம்தான் வஞ்சி என்று குறிப்பிடப்படுகிறது.

Ø சங்க இலக்கியமான **பதிற்றுப்பத்து**, சேர அரசர்கள் குறித்தும், அவர்களுடைய நாட்டின் எல்லைகளைக் குறித்தும் பேசுகிறது.

Ø கரூரை அடுத்த **புகழூரில்** கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள், மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள், சேரமன்னர்களின் மூன்று தலைமுறைகளை குறிப்பிடுகிறது.

Ø சேரர்கள் **பனம்பூ மாலை** அணிந்திருந்தனர்.

Ø **வில்லும்**, **அம்பும்** சேரர்களின் இலச்சினை ஆகும்.

## சோழர்

Ø சோழர்கள் காவிரி வடிநிலப் பகுதியையும், தமிழ்நாட்டின் வடபகுதியினையும் ஆண்டனர்.

Ø தலைநகரம் - **உறையூர்**.

Ø துறைமுகம் - **காவிரிப்பூம்பட்டினம் என்ற பூம்புகார்**.

Ø சோழ மன்னர்களின் தலைசிறந்தவர் -**கரிகால் சோழன்**.

Ø சோழர்களின் இலச்சினை - **புலி**.

Ø கடியலூர் **உருத்திரங்கண்ணனார்** என்ற சங்ககால புலவர் காவிரிப்பூம்பட்டினம் குறித்து **பட்டினப்பாலை** என்ற நெடிய பாடலை இயற்றியுள்ளார்.

Ø காவிரிப்பூம்பட்டினத்தில் நடந்த வணிகத்தை **சிலப்பதிகாரம்** குறிப்பிடுகிறது.

Ø சோழர்கள் சதுர வடிவிலான **செப்பு** நாணயங்களை வெளியிட்டனர்.

## சோழப்பேரரசு

Ø சோழர்களின் வரலாறு மிகவும் பழமையானது.

Ø மகாபாரதத்திலும், அசோகரின் கல்வெட்டுகளிலும், **மெகஸ்தனிஸ்**, **தாலமி** ஆகியோரது குறிப்புகளிலும் சோழர்களைப் பற்றிய செய்திகளைக் காணமுடிகிறது.

Ø சங்க காலத்தில் சோழர்கள் **திருச்சி**, **தஞ்சாவூர்** ஆகிய பகுதிகளை ஆட்சி செய்துள்ளனர்.

Ø காவிரி ஆற்றின் குறுக்கே **கல்லணையைக் கட்டியவர் கரிகாற்சோழன்**.

Ø முற்காலச் சோழர்கள் தமது இறுதிக்காலத்தில் **உறையூரை** மட்டுமே ஆட்சி செய்யுமளவில் சிற்றரசர்களாயினர்.

**<u>பிற்காலச் சோழர்கள்</u>**

- Ø தென்னிந்திய வரலாற்றில் பிரபலமான நன்கறியப்பட்ட முடியாட்சி அரசுகளில் சோழர் அரசும் ஒன்று.
- Ø பண்டைய சோழ அரசு காவிரி ஆற்றின் கழிமுகப்பகுதியை மையப்பகுதியாகக் கொண்டிருந்தது.
- Ø அதன் தலைநகர் உறையூர் (இன்றைய திருச்சிராப்பள்ளி) ஆகும்.
- Ø கரிகாலனின் ஆட்சிக்காலத்தில் இவ்வரசு சிறப்பான இடத்தை வகித்தது.
- Ø ஒன்பதாம் நூற்றாண்டில் காவிரிக்கு வடக்கே ஒரு சிறு பகுதியை ஆண்டு வந்த விஜயாலயன் சோழ வம்சத்தை மீட்டெடுத்தார்.
- Ø தஞ்சாவூரைத் தலைநகர் ஆக்கினார்.
- Ø பிற்காலத்தில் முதலாம் ராஜேந்திரனும் அவருக்குப் பின் வந்தோரும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கங்கைகொண்ட சோழபுரத்தை தலைநகராகக் கொண்டு சோழப்பேரரசை ஆட்சி செய்தனர்.

Ø **கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டின்** இடையில் அதிகாரத்திற்கு வந்த சோழர்கள், பிற்காலச் சோழர்கள் அல்லது பேரரசுச் சோழர்கள் என அழைக்கப்பட்டனர்.

Ø பிற்காலச் சோழர்களின் எழுச்சிக்கு அடித்தளமிட்டவர் **விஜயாலயச்சோழன் கி.பி**.850-87

Ø விஜயாலயச்சோழனின் மகன் **முதலாம் ஆதித்திய சோழன்** (**கி.பி**.871 - 907)

Ø ஆதித்திய சோழனின் மகன் **முதலாம் பராந்தகன்** (**கி.பி**.907 - 955)

Ø பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து அதன் தலைநகரான **மதுரையை** வென்றதால் **மதுரை கொண்டான்** என்று புகழப்பட்டார்.

Ø புகழ்பெற்ற **தக்கோலம் போரில்** இராட்டிரகூட மன்னர் மூன்றாம் கிருஷ்ணனிடம் தோற்று கி.பி.955ல் மரணமடைந்தார்.

Ø **ஆத்துலார்சாலை** என அழைக்கப்பட்ட இலவச மருத்துவமனைகள் தஞ்சாவூர் உட்பட பல இடங்களில் அமைக்கப்பட்டிருந்தன.

**<u>முதலாம் இராஜராஜசோழன்</u>** (**கி.பி**.985 - 1014)

- **சோழப் பேரரசின் மாபெரும் வல்லமை பெற்ற பேரரசர்**.
- மிகச்சிறந்த ஆட்சியாளர், சேர, பாண்டிய, சாளுக்கியர்களை வென்றவர்கள். **முந்நீர் பழந்தீவுகள்** எனப்பட்ட மாலத்தீவுகளையும் வென்றார்.
- சேர மன்னன் பாஸ்கரவர்மனை **காந்தளூர்சாலை** என்ற இடத்தில் வென்றார்.
- சிறப்பு பெயர்கள் **மும்முடிச்சோழன்**, **ஜெயங்கொண்டான்**, **சிவபாதசேகரன்** ஆகும். இவரது காலத்தில் தான் **தேவாரம்** தொகுக்கப்பட்டது.
- கி.பி.1010-ஆம் ஆண்டு தஞ்சை **பிரகதீஸ்வரர் கோவிலை** கட்டினார்.
- கி.பி.1014-ல் இயற்கை எய்தினார்.

**<u>முதலாம் இராஜேந்திரன்</u>** (**கி.பி**.1012 - 1044)

- இராஜராஜசோழனின் மகன் ஆவார்.
- வங்காள மன்னர் **மகிபாலனை** வென்றார். இவ்வெற்றியின் நினைவாக **கங்கை கொண்ட சோழபுரம்** என்னும் நகரை நிறுவினார்.
- சிறப்பு பெயர்கள் - **கங்கை கொண்டான்**, **பண்டித சோழன்**, **கடாரம்கொண்டான்** போன்றவை ஆகும்.

## சோழப்பேரரசின் சரிவு

- முதலாம் ராஜேந்திர சோழனைத் தொடர்ந்து பதவியேற்ற மூவரும் திறமை வாய்ந்த அரசர்களாக இல்லை.
- மூன்றாவதாகப் பதவியேற்ற வீர ராஜேந்திரனின் மகன் அதி ராஜேந்திரன் உள்நாட்டுக் கலகம் ஒன்றில் கொல்லப்பட்டார்.
- அவருடன் விஜயாலயனின் வழிவந்தோரின் ஆட்சி முடிவுக்கு வந்தது.

**முதலாம் குலோத்துங்க சோழன்- ( ராஜேந்திர சாளுக்கியன் ) கி.பி.1071 - 1121)**

- கீழைச் சாளுக்கிய இளவரசர் முதலாம் குலோத்துங்கன் எனும் பெயரில் சாளுக்கிய - சோழ வம்சத்தின் ஆட்சியை அவர் தொடங்கி வைத்தார்.
- சிறந்த நிர்வாகி. நிலங்களை அளந்து வரி விதித்ததோடு சுங்க வரியை நீக்கி வணிகத்தை எளிமைப்படுத்தியதால் இவர் **சுங்கம் தவிர்த்த சோழன்** எனப் போற்றப்பட்டார்.
- இவர் **ஜெயங்கொண்டார்**, **ஒட்டக்கூத்தர்**, **புகழேந்தி**, **கம்பர்** முதலான கவிஞர்களை ஆதரித்தார்.
- 1279-ல் பாண்டிய அரசன் முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் மூன்றாம் ராஜேந்திர சோழனைத் தோற்கடித்து பாண்டியர் ஆட்சியை இன்றைய தமிழகத்தில் நிறுவினார்.
- அத்துடன் சோழ வம்சத்தின் ஆட்சி முடிவுற்றது.

## சோழப்பேரரசு சிதைவுறுதல்

- மூன்றாம் இராஜேந்திரன் காலத்தில் சோழப் பேரரசு சிதைவுறத்தொடங்கியது. காடவராயன் போன்ற குறுநில

மன்னர்களின் எழுச்சி, பாண்டிய நாட்டு எழுச்சி ஆகியவை சோழ அரசை நிலைக்குலையச் செய்தது.

- Ø பாண்டிய மன்னன் இரண்டாம் **ஜடா வர்மா சுந்தரபாண்டியன்**, சோழ நாட்டின் கடைசி அரசனான 3-**ம் இராஜேந்திரனை** வென்று, சோழ நாட்டை கைப்பற்றினார்.

## சோழர்களின் ஆட்சிமுறை

- Ø சிறந்த திறமையான நிர்வாக அமைப்பு. நிர்வாகத்தின் அடிப்படை அலகு **ஊர்** என்பதாகும்.
- Ø பல ஊர்கள் சேர்ந்தவை **வளநாடு** என்றும், பல வளநாடுகள் சேர்ந்து **மண்டலம்** என்றும், மண்டலங்கள் அனைத்தும் ஒருங்கே சேர்ந்ததாக **சோழ நாடு** விளங்கியது.
- Ø முதலாம் பராந்தக சோழன் காலத்தை சார்ந்த **உத்திரமேரூர் கல்வெட்டு** கிராம நிர்வாகத்தைப் பற்றி விரிவாக விளக்குகிறது.
- Ø ஒவ்வொரு கிராமமும், **ஊர் அல்லது சபை** என்ற அமைப்பின் மூலம் நிர்வகிக்கப்பட்டது.
- Ø கிராம சபை உறுப்பினர்கள், **குடவோலை** முறையின் படி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- Ø **வாரியங்கள்** என்ற விரிவான நிர்வாக அமைப்பும் நடைமுறையில் இருந்தது.

## சமூக பொருளாதார நிலை

- Ø சாதி முறை வழக்கில் இருந்தது.
- Ø **சதி**, **தேவதாசி** போன்ற வழக்கங்கள் நடைமுறையில் இருந்தன.
- Ø பெண்கள் “**சிறுபாடு**” என்றும் **சிறுசேமிப்புப்** பழக்கத்தை மேற்கொண்டிருந்தனர்.

**<u>வரிபொத்தகம்</u>**

- Ø வரிவிதிப்பு நடைமுறைகளை சோழர் காலத்தில் **ஓலைச்சுவடிகளில்** எழுதித் தொகுத்தனர். இது **வரிபுத்தகம்** எனப்பட்டது.
- Ø இராஜராஜன் காலத்தில் (கி.பி.1001) வரி விதிப்புக்கான கணக்கெடுப்புப் பணி **சேனாதிபதி குறவன்** என்பவரால் மேற்கொள்ளப்பட்டது.

**<u>சமயமும், கல்வியும்</u>**

- Ø சோழ வேந்தர்கள் சைவ சமயத்தின் மீது ஈடுபாடு கொண்டிருந்தனர்.
- Ø ஆலயங்களும், மடங்களும் கல்வி மையங்களாக விளங்கின.

**<u>இலக்கியம்</u>**

- Ø சோழர் காலம் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு புத்துணர்வு தந்தது.
- Ø **சேக்கிழாரால் பெரியபுராணமும்** (**திருத்தொண்டர் புராணம்**) **திருத்தக்க தேவரால் சீவகசிந்தாமணியும் எழுதப்பட்டன**.
- Ø உரையாசிரியர்களான **இளம்பூரணர்**, **நச்சினார்க்கினியார்**, **பரிமேலழகர்** ஆகியோர் சோழர் காலத்தவரே ஆவார்.

## <u>கலையும் கட்டிடக்கலையும்</u>

- திராவிட பாணியிலான கலைகளும், கட்டிடக்கலையும் சோழர்கள் காலத்தில் முழு வடிவத்தைப் பெற்றன.
- **திருச்சிராப்பள்ளி**, **திருவரங்கம்**, **தஞ்சாவூர்**, **கும்பகோணம்**, **சிதம்பரம்**, **திருவண்ணாமலை**, **சுசீந்திரம்**, **திருவனந்தபுரம்**, உடுப்பி போன்ற இடங்களில் கட்டப்பட்ட ஆலயங்கள் சிறப்பு மிக்கவை.
- நார்தா மலையின் விஜயாலய சோழீஸ்வரம் கொடும்பாளூரில் ஐவர் கோயில் ஆகியன முற்கால சோழர்காலத்தை சேர்ந்தவை.
- பிரகதீஸ்வரர் ஆலயம் உலகத் தொன்மையான சின்னங்களில் ஒன்றாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- இதன் விமானத்தின் உயரம் 216 அடி ஆகும்.
- தஞ்சாவூர் சுப்பிரமணியர் ஆலயம், தாராசுரம், அறிவட்டேஸ்வரர் கோவில், கும்பகோணம் அருகே திருபுவனம் என்னும் இடத்தில் உள்ள கம்பஹரேஸ்வரர் அல்லது திருபுவனேஸ்வரர் கோவில் ஆகியன பிற்கால சோழர்களால் கட்டப்பட்டவை.

## <u>சிற்பங்கள்</u>

- முதலாம் இராஜராஜனின் சிற்பம் கலைநயம் கொண்டது.
- எண்கரங்களுடன் காட்சி தரும் துர்க்கை சிற்பம் மிகவும் அழகு வாய்ந்தது.
- கும்பகோணம் நாகேஸ்வரர் கோயிலில் உள்ள நடராசர், அர்த்தநாரீஸ்வரர் ஆகிய உலோக சிலைகள் சோழர் கலையம்சத்திற்கு சிறந்த உதாரணங்கள் ஆகும்.

**<u>உத்திரமேரூர் கல்வெட்டுக்கள்</u>**

- இன்றைய காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர் கிராமம் பிராமணர்களுக்கு கொடையாக வழங்கப்பட்ட ஒரு பிரம்மதேய கிராமமாகும்.
- இக்கிராமத்தில் கிராம சபைக்கான உறுப்பினர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பது குறித்து தெளிவாக விளக்கும் கல்வெட்டுகள் உள்ளன.
- ஒவ்வொரு குடும்பிலிருந்தும் (வார்டு) உறுப்பினர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார். மொத்தம் 30 குடும்பங்கள் இருந்தன. போட்டியிடும் ஆடவர் 35 -70 வயது வரம்புக்குள் இருத்தல் வேண்டும்.
- வேதநூல்களிலும், சமய நூல்களிலும் தேர்ச்சி பெற்றிருப்பதும், நில உரிமையாளராகவோ, சொந்த வீடு உடையவராகவோ இருக்க வேண்டும் என்பவை தகுதிகளாகும்.
- தேர்ந்தெடுக்கும் முறை - ஒவ்வொரு குடும்பிலிருந்தும் தகுதியுடைய வேட்பாளர்களின் பெயர்கள் பனையோலைத் துண்டுகளில் எழுதப்படும்.
- அவை மட்பாண்டம் ஒன்றில் போடப்படும். மன்றத்தின் மூத்த உறுப்பினர் ஒரு சிறுவனை அழைத்து குடத்துக்குள் உள்ள ஓலைத் துண்டுகளை எடுக்கச் சொல்லி அதில் எழுதப்பட்டுள்ள பெயரை அறிவிப்பார். இம்முறையின் படி பல குழுக்கள் முடிவு செய்யப்படும்.
- குற்றம் புரியும் உறுப்பினர்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்படும் என்றும் அவர்கள் தேர்தலில் போட்டியிட தகுதியற்றவர்கள் என்றும் இக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

**<u>மெழுகு படிவ வளர்ப்பு</u>**

- இம்முறை சோழ கைவினைக் கலைஞர்களால் வெண்கலச் சிலை செய்ய பயன்படுத்தப்பட்ட முறையாகும்.

## வருவாய்

- சோழ அரசின் பொது வருவாய் முக்கியமாக நிலவரி மூலம் பெறப்பட்டது.
- நிலவரியானது "காணிக்கடன்" என அழைக்கப்பட்டது.
- மகசூலில் மூன்றில் ஒரு பகுதி வரியாக வசூலிக்கப்பட்டது. இவ்வரி பெரும்பாலும் தானியமாகவே வசூல் செய்யப்பட்டது.
- நிலவரியைத் தவிர தொழில் வரிகளும் வணிகத்தின் மீதான சுங்கவரிகளும் வசூலிக்கப்பட்டன.

## நிலம் சார்ந்த உறவுகளை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பு

- சோழ அரசர்கள் வரிவிலக்கு அளிக்கப்பட்ட நிலங்களை அரசு அதிகாரிகளுக்கும், பிரமாணர்களுக்கும், கோவில்களுக்கும் (தேவதானக் கிராமங்கள்) மத நிறுவனங்களுக்கும் கொடையாக வழங்கினர்.
- சமண, சமய நிறுவனங்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் "பள்ளிச்சந்தம்" என அழைக்கப்பட்டது.
- "வேளாண்வகை" என்னும் நிலங்களின் உடைமையாளர்கள் வேளாளர் என்றழைக்கப்பட்டனர்.
- வேளாளரில் ஒரு பிரிவினரான "உழுகுடி" என்போர் நிலங்களின் உடைமையாளர்களாக இருக்க இயலாது. அவர்கள் பிரம்மதேய, வேளாண்வகை நிலங்களில் வேளாண்பணிகளைச் செய்ய வேண்டியிருந்தது.
- மொத்த விளைச்சலில் வேளாண்வகை நிலவுடைமையாளர்கள் "மேல்வாரத்தைப் (விளைச்சலில் பெரும்பகுதி) பெற்றனர்.
- உழுகுடிகள் "கீழ்வாரத்தைப்" (விளைச்சலில் சிறிய பகுதி) பெற்றனர்.
- "அடிமை" மற்றும் "பணிசெய் மக்கள்" என்போர் சமுதாயத்தின் கீழ்நிலையில் இருந்தனர்.
- சமூகத்தின் இடை மட்டத்தில் போர் செய்வோரும் வணிகர்களும் இடம் பெற்றனர்.

**<u>நீர்ப்பாசனம்</u>**

- சோழர்கள் நீர்ப்பாசனத்திற்கு முக்கியத்துவம் வழங்கினர்.
- கங்கை கொண்ட சோழபுரத்தில் முதலாம் ராஜேந்திர சோழனால் உருவாக்கப்பட்ட பதினாறு மைல் நீளம் கொண்ட ஏரிக்கரைத் தடுப்பணை மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.
- காவிரியின் கழிமுகப் பகுதியில் குறுக்கும் நெடுக்குமாக மரபுசார்ந்த முறையில் நீரினைத் திசைமாற்றி விடுவதற்கான “வடிவாய்க்கால்கள்” அமைக்கப்பட்டிருந்தன.
- தேவைப்படும் நீரைக் கொண்டுவருவது “வாய்க்கால்”. தேவைக்கு அதிகமான நீரை வெளியேற்றுவது “வடிகால்”.
- பொதுமக்கள் அனைவருக்கும் சொந்தமான வாய்க்கால் “ஊர் வாய்க்கால்” என அழைக்கப்பட்டது.
- நாடு எனும் நிர்வாகப் பிரிவின் மட்டத்தில் பயன்பட்ட வாய்க்கால்கள் “நாடு வாய்க்கால்கள்” என குறிப்பிடப்பட்டன. நீர் விநியோகத்தில் சுற்றுமுறை நடைமுறையில் இருந்தது.

**<u>மதம்</u>**

- சோழர்கள் சைவத்தில் மீது மிகுதியான பற்றுக் கொண்டவராவர்.
- சிவபெருமானின் திருவிளையாடல்கள் சைவ அடியார்களான நாயன்மார்களால் பாடல்களாக இயற்றப்பட்டுள்ளன.
- நம்பியாண்டார் நம்பியால் தொகுக்கப்பட்ட அவை “திருமுறைகள்” என அழைக்கப்படுகின்றன.

**<u>கோவில்கள்</u>**

- சோழர்கள் காலத்தில் பிரமாண்டமான கோவில்கள் கட்டப்பட்டன.
- தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம், தாராசுரம் ஆகிய இடங்களிலுள்ள கோவில்கள் சோழர்களின் கலைகளான

கட்டடங்கள், சிற்பங்கள், செப்புச்சிலைகள், ஓவியங்கள், படிமவியல் ஆகியவற்றின் களஞ்சியமாக உள்ளன.

**<u>சோழர்களின் கல்விப் பணி</u>**

- Ø சோழ அரசர்கள் கல்விப் பணிகளுக்குப் பெரும் ஆதரவு நல்கினர்.
- Ø முதலாம் ராஜேந்திரன் எண்ணாயிரம் (தற்போதைய விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள) எனும் கிராமத்தில் வேதக் கல்லூரி ஒன்றை நிறுவினார்.
- Ø இன்றைய புதுச்சேரிக்கு அருகேயுள்ள திருபுவனை எனும் ஊரிலும், இன்றைய செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள திருமுக்கூடலிலும் முறையே 1048, 1067 ஆகிய ஆண்டுகளில் இதே போன்ற கல்லூரிகள் நிறுவப்பட்டன.
- Ø உன்னதமான இலக்கியங்களான "பெரியபுராணமும் கம்பராமயணமும்" இக்காலப் பகுதியைச் சேர்ந்தவையாகும்.

**<u>வணிகம்</u>**

- Ø சோழர்களின் காலத்தில் வணிகம் தழைத்தோங்கியது.
- Ø "அஞ்சு - வண்ணத்தார் ". " மணி- கிராமத்தார்" எனப்படும் வணிகக் குழு அமைப்புகளைச் (கில்டு) சேர்ந்த வணிகர்கள் வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.
- Ø அஞ்சு - வண்ணத்தார் குழுவானது மேற்கு ஆசிரியர்கள், அராபியர்கள், யூதர்கள், கிறித்தவர்கள், இஸ்லாமியர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாகும்.
- Ø மணி - கிராமத்தார் வணிகக் குழு அமைப்பைச் சேர்ந்த வணிகர்கள் உள்நாட்டு வணிகத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர் என சொல்லப்படுகிறது.
- Ø காலப்போக்கில் அவ்விரு அமைப்புகளும் ஐநூற்றுவர்" , திசை-ஆயிரத்து ஐநூற்றுவர்" எனும் பெயர்களில் ஒருங்கிணைந்தன.
- Ø அவை கர்நாடக மாநிலம் ஐகோலில் இருந்த தலைமை அமைப்பின் வழிகாட்டுதலில் செயல்பட்டன.

**ஓவியங்கள்**

- சோழர்களது சுவர் ஓவியங்கள் **தஞ்சாவூர்**, **திருமையம்**, **காஞ்சி கைலாசநாதர் கோயில்**, **நார்தாமலை விஷ்ணு கோயில்** ஆகிய இடங்களில் காணலாம்.

**இசை**

- நுண்கலை எனப்படும் இசைக்கலை வளர்ச்சிபெற்றது.
- கர்நாடக இசைக்கு சோழர்காலத்தில்தான் அடித்தளம் இடப்பட்டது.
- பரதநாட்டியம் என்னும் அழகு மிளிரும் ஆடற்கலையும் தோன்றியது.

**சோழர்ஆட்சியின் விளைவுகள்**

- **கி**.**பி**.850**ல் தொடங்கி கி**.**பி**.1279 **வரை சுமார்** 430 ஆண்டுகள் தமிழகத்தை ஆட்சி செய்த சோழர்கள் காலத்தில் தமிழகம் பல துறைகளில் வளர்ச்சி கண்டது.
- தமிழ் சமுதாயத்தின் பெருமை திக்கெட்டும் பரவியது.

**பாண்டியர்**

- பாண்டியர்கள் தென்தமிழகத்தை ஆண்டவர்கள்.
- **தலைநகரம்** - **மதுரை**.
- அசோகரது கல்வெட்டுகளில் பாண்டியர் பற்றிய குறிப்புகளும் உள்ளன.

Ø தமிழ்ச்சங்கங்களை நிறுவி ஆதரவு அளித்தவர்கள் என்று பாண்டிய அரசர்களை தமிழ் இலக்கியங்கள் போற்றுகின்றன.

Ø மாங்குளத்தில் கண்டறியப்பட்ட தமிழ் **பிராமி கல்வெட்டுக்கள்** பாண்டிய நெடுஞ்செழியனை குறிப்பிடுகிறது.

Ø **நெடியோன்**, **முடத்திருமாறன்**, **பலயாகசாலை**, **முதுகுடுமிபெருவழுதி** ஆகியோர் குறிப்பிடத்தக்க பாண்டிய மன்னர்கள்.

Ø பாண்டியர்களின் இலச்சினை **மீன்**.

Ø அன்றைய காலக்கட்டத்தில் பரந்திருந்த பாண்டியப் பேரரசானது இன்றை மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களும், திருச்சிராப்பள்ளியின் ஒரு பகுதி மற்றும் திருவாங்கூரின் சில பகுதிகளை உள்ளடக்கியதாக இருந்தது.

Ø மெகஸ்தனிஸ், பிளினி ஆகியோரது குறிப்புகளிலும் பழந்தமிழ் இலக்கியங்களிலும் யுவான்சுவாங், மார்க்கோபோலோ ஆகியோரின் பயணக் குறிப்புகளிலும் பாண்டியரின் வரலாற்று செய்திகளை அறியலாம்.

Ø இவர்களின் வரலாற்றை முற்காலப் பாண்டியர்கள், முதலாம் பாண்டியப் பேரரசு மற்றும் இரண்டாம் பாண்டியப் பேரரசு என மூன்று காலகட்டங்களாக வகைப்படுத்தலாம்.

**<u>முற்காலப் பாண்டியர்கள்</u>**

- Ø தமிழை வளர்க்க தமிழ்ச் சங்கங்கள் அமைத்த பெருமைப் பெற்றவர்கள்.
- Ø தென்தமிழகத்தை ஆண்டவர்கள்.

Ø **தலைநகரம்** - **மதுரை**.

Ø அசோகரது கல்வெட்டுகளில் பாண்டியர் பற்றிய குறிப்புகளும் உள்ளன.

Ø தமிழ்ச்சங்கங்களை நிறுவி ஆதரவு அளித்தவர்கள் என்று பாண்டிய அரசர்களை தமிழ் இலக்கியங்கள் போற்றுகின்றன.
Ø தமிழகத்தை களப்பிரர்கள் கைப்பற்றிய போது முற்காலப் பாண்டியர் ஆட்சியானது முடிவுக்கு வந்தது.

**முதலாம் பாண்டியப் பேரரசு (கி.பி.**550 - 950)

- Ø பாண்டிய அரசர் கடுங்கோன், களப்பிரர்களை வென்று கி.பி. 6ஆம் நூற்றாண்டின் இறுதியில் பாண்டியர்களின் ஆட்சியை மலரச் செய்தார்.
- Ø அரிகேசரி மாறவர்மன், இரணதீரன், முதலாம் மாறவர்மன் இராஜசிம்மன், முதலாம் வரகுணன் மற்றும் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் ஆகியோர் இப்பேரரசின் முக்கிய மன்னர்கள் ஆவர்.

**முடிவு**

- Ø ஸ்ரீமாறஸ்ரீவல்லபனின் வழித்தோன்றல்கள் பல்லவ, சோழர்களோடு பலமுறை போரிட நேரிட்டது.
- Ø கி.பி.10 முதல் 11 ஆம் நூற்றாண்டு வரை பாண்டியர்கள் பலமுறை போரிட்டும் தமது பெருமையை நிலைநிறுத்த முடியவில்லை.
- Ø அவர்களோடு நடந்த தொடர் போராட்டங்களில் பாண்டிய பேரரசு சிதறுண்டு போனது.

**இரண்டாம் பாண்டியப் பேரரசு**

- Ø கி.பி.13 ஆம் நூற்றாண்டில் பாண்டியர்கள் மெல்ல சோழரின் தலைமையிலிருந்து விடுபட்டு தங்களது தனியரசை நிறுவினர்.

- இந்நிலையில் விக்கிரம பாண்டியனுக்கும், வீர பாண்டியனுக்கும் இடையில் வாரிசுரிமை போர் ஏற்பட்டது.
- சோழவேந்தன் மூன்றாம் குலோத்துங்கனின் ஆதரவோடு விக்கிரம பாண்டியன் ஆட்சியை பிடித்தார்.
- முதலாம் ஜடாவர்ம குலசேகர பாண்டியன் தமது தந்தை விக்கிரம பாண்டியனை அடுத்து ஆட்சிப் பொறுப்பேற்றார்.
- இவரை அடுத்து ஆட்சி செய்ய இவரது சகோதரன் மாறவர்மன் சுந்தரபாண்டியனுக்கு மகுடம் சூட்டினார்.

**முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்** ( **கி.பி.**1216 - 1238 )

- இவர் கி.பி.1219 இல் மூன்றாம் குலோத்துங்க சோழனை போரிட்டு வென்றார்.
- எனினும் ஹொய்சாளர்கள் சோழர்களுக்கு ஆதரவாக செயல்பட்டதால் தான் வென்ற சோழ நாட்டை குலோத்துங்கனிடமே கொடுத்தார்.
- இதனால், சோணாடு வழங்கியருளிய சுந்தரப்பாண்டியன் எனப் புகழப்பட்டார்.

**இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்** ( **கி.பி.**1238 - 1253 )

- இவர் ஆட்சியேற்றபின் ஹொய்சாள மன்னர் சோமேஸ்வரன் உதவியுடன் சோழ மன்னன் மூன்றாம் ராஜேந்திரனிடமிருந்து சில பகுதிகளை மீட்டெடுத்தார்.

**<u>முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் ( கி.பி.1253 - 1268 )</u>**

- இவர் இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனை அடுத்து ஆட்சிப் பொறுப்பேற்றார்.
- இவரது காலத்தில் பாண்டியப் பேரரசு வடக்கே நெல்லூர், கடப்பா முதற்கொண்டு தெற்கே கன்னியாகுமரி வரை விரிவு பெற்றது.
- எம்மண்டலமும் கொண்டருளிய சுந்தர பாண்டியன், மகாராஜாதிராஜா, ஸ்ரீபரமேஸ்வரன், பொன்வேய்ந்த பெருமாள் என்றெல்லாம் இவர் சிறப்பிக்கப்பட்டார்.
- இவரது மகன் முதலாம் மாறவர்மன், குலசேகரன் (கி.பி.1268-1308) ஆட்சியின் போது பேரரசு மேலும் வலுப்பெற்றது.
- இவர் இலங்கையையும், சேரர்களிடமிருந்து கொல்லம் பகுதியையும் வென்றார்.
- இதனால் கொல்லம் கொண்ட பாண்டியன் என்று சிறப்பிக்கப்பட்டார்.
- இவரது ஆட்சிக்குப் பிறகு பாண்டிய நாட்டின் புகழ் வீழ்ச்சியடையத் தொடங்கியது.

**<u>பாண்டிய பேரரசின் வீழ்ச்சி</u>**

- முதலாம் மாறவர்மன் குலசேகரரின் மகன்களான சுந்தர பாண்டியனுக்கும், வீர பாண்டியனுக்கும் ஏற்பட்ட அரசுரிமைப் போரில் பாண்டிய நாடு பிளவுபட்டது.
- சுந்தர பாண்டியன் டெல்லியை ஆண்ட அலாவுதீன் கில்ஜியின் உதவியை நாடினார். அலாவுதீன் தமது தளபதி மாலிக்காபூர் என்பாரை அனுப்பி சுந்தரப் பாண்டியனுக்கு ஆட்சியை மீட்டுத்தந்தார்.
- மதுரை சுல்தான்களின் எழுச்சியினால் முழுமையாக பாண்டியப் பேரரசு வீழ்ச்சியடைந்தது.

**பாண்டியர்களின் நிர்வாகம்**

- பாண்டிய நாடு முழுவதும் பாண்டிய மண்டலம் எனப்பட்டது. மண்டலமானது பல வளநாடுகளாகவும், வளநாடு பல ஊர்களாகவும் பிரிக்கப்பட்டது.
- மன்னர் தமக்கு உதவியாக அரையர்கள் எனப்பட்ட அமைச்சர்களையும், படைத்தளபதியையும் நியமித்துக் கொண்டார்.

**உள்ளாட்சி**

- அறநிலை, நீர்நிலை நாணயம், வரித்தண்டல் மற்றும் நீதி வாரியங்கள் என்ற ஐந்து வாரியங்களும் ஒவ்வொரு கிராமத்தையும் நிர்வகித்தன.

**தொழில்**

- வேளாண்மை, வாணிபம் மக்களின் முக்கியத் தொழில். வேளாண் தொழில் செய்வோர் “பூமி புத்திரர்கள்” எனப்பட்டனர்.
- பாண்டிய நாடு முத்துக்குளிக்கும் தொழிலில் சிறந்து விளக்கியது. கொற்கை, தொண்டி சிறந்த துறைமுகங்களாக விளங்கின.

**இலக்கியம்**

- திருவாசகம் மாணிக்க வாசகரால் எழுதப்பட்டது.
- ஆண்டாள் திருப்பாவையையும், நம்மாழ்வார் திருப்பல்லாண்டையும், வில்லிப்புத்துாரார் மகாபாரதத்தையும், அதிவீரராம பாண்டியன் நைடதம் என்னும் நூலையும் எழுதினர்.

- Ø சேயூர் முருகன் உலா மற்றும் ரத்தினகிரி உலா ஆகிய நூல்களை ஸ்ரீகவிராயர் எழுதினார்.

**கலைகளும், கட்டிடக் கலையும்**

- Ø கோயில் கட்டிடக் கலையில் கருவறை, விமானம், பிரகாரம், கோபுரம் ஆகிய கட்டுமானப் பணிகளில் பாண்டியர்களின் கலைப்பாங்கு தனித்துவம் பெற்றது.
- Ø பாறைகளைக் குடைந்து குடைவரைக் கோயில்களை உருவாக்குவதிலும் முத்திரை பதித்தனர். (எ.கா. திருப்பரங்குன்றம், ஆனைமலை, கழுகுமலை, திருச்சிராப்பள்ளி, குன்றக்குடி, சித்தன்ன வாசல் ஆகியவற்றைக் கூறலாம். கோயில்பட்டி, திருப்பத்தூர், மதுரை, ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள கட்டுமானக் கோயில்கள் பாண்டியர் காலத்தவையாகும்.)
- Ø ஸ்ரீமாறன்ஸ்ரீவல்லபன் காலத்து சுவரோவியத்தை சித்தன்ன வாசல் குடைவரையில் காணலாம்.

**பிற்காலப் பாண்டியர்கள்**

- Ø கி.மு. (பொ.ஆ.மு) நான்காம் நூற்றாண்டிலிருந்து தென்னிந்தியாவைக் குறிப்பிட்ட இடைவெளிகளோடு ஆட்சி செய்த மூன்று பழமையான அரசவம்சங்களுள் பாண்டியர்கள் அடங்குவர்.
- Ø முத்துக்குளித்தலோடு தொடர்புடைய கொற்கை, தொடக்காலத்தில் அவர்களின் துறைமுகமாகவும், தலைநகரமாகவும் இருந்ததாகக் கருதப்படுகிறது.
- Ø சங்ககாலப் பாண்டியர்களின் கீழ் மதுரை நகர் மாபெரும் பண்பாட்டுமையமாகத் திகழ்ந்தது.
- Ø கி.பி.(பொ.ஆ) 6-ஆம் நூற்றாண்டில் களப்பிரர்களை வெற்றிகொண்டு பாண்டியர்கள் தென்தமிழகத்தில் தங்களை மீண்டும் வலுவாக நிறுவிக் கொண்டனர்.

**<u>பாண்டிய அரசு மீண்டெழுதல் (கி.பி.(பொ.ஆ) 600-920)</u>**

- கடுங்கோல் எனும் பாண்டிய அரசன் 6-ஆம் நூற்றாண்டின் இறுதியில் களப்பிரர்களிடமிருந்து பாண்டியர்களின் பகுதிகளை மீட்டார்.
- அரிகேசரி மாறவர்மன் எனும் வலிமை மிக்க முதல் பாண்டிய அரார் கி.பி.(பொ.ஆ)642-இல் அரியணை ஏறினார். அவர் பல்லவ அரசர்கள் முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன் ஆகியோரின் சமகாலத்தவராவார்.
- அரிகேசரி மாறவர்மன் சமணர்களைத் துன்புறுத்திய கூன் பாண்டியனே என அடையாளப்படுத்தப்படுகிறார்.

**<u>தகவல் பேழை</u>**

சைவத் துறவியான திருஞானசம்பந்தர் அரிகேசரியைச் சமண மதத்திலிருந்து சைவத்திற்கு மாற்றினார். மதம் மாறிய பின்னர் அரிகேசரி சுமார் 8000 சமணர்களைக் கழுவேற்றியதாகக் கூறப்படுகிறது. எண்ணிக்கை மிகைப்படுத்திக் கூறப்பட்டிருப்பினும் சைவத்திற்கு மாறிய பின்னர் அரிகேசரியின் சமண எதிர்ப்புப் போக்கு சந்தேகத்திற்கு இடமில்லாதது.

- அரிகேசரிக்குப் பின்னர் பாண்டியர் அரசவம்சத்தின் மகத்தான மன்னான ஜடிலபராந்தக நெடுஞ்சடையன் (முதலாம் வரகுணன் ) (756-815) ஆட்சிப் பொறுப்பேற்றார்.
- அவரே வேள்விக்குடிச் செப்பேடுகளின் கொடையாளி ஆவார்.

- பின்னர் ஆட்சிப் பொறுப்பேற்ற ஸ்ரீமாற, ஸ்ரீவல்லபன், இரண்டாம் வரகுணன் ஆகியோர் பல்லவர்களால் தோற்கடிக்கப்பட்டனர்.
- முதலாம் பராந்தகனிடம் தோல்வியடைந்த பாண்டிய அரசன் இரண்டாம் ராஜசிம்மன் 920-இல் நாட்டைவிட்டு வெளியேறினார்.
- இவ்வாறு கடுங்கோனால் மீள்எழுச்சி பெற்ற பாண்டியர் ஆட்சி முடிவுற்றது.

**பிற்காலப் பாண்டியர்களின் எழுச்சி** (1190 - 1310)

- அதிராஜேந்திரனின் (விஜயாலயனின் வழிவந்த கடைசி அரசர்) மறைவுக்குப் பின்னர் பாண்டிய நாட்டில் சோழ மண்டலாதிபதிகளின் ஆட்சி பலவீனமடைந்தது. அதன் விளைவாகப் பதிமூன்றாம் நூற்றாண்டில் பாண்டியர் மட்டுமே எழுச்சி பெற்ற தமிழ் அரச வம்சமாக விளங்கினர்.
- மதுரை அவர்களின் தலைநகராகத் தொடர்ந்தது. அவ்வமயம் காயல் அவர்களின் முக்கிய துறைமுகமாயிற்று.
- வெனிஸ் நாட்டைச் சேர்ந்த புகழ் பெற்ற பயணியான மார்க்கோபோலோ இரண்டு முறை (1288, 1293) காயலுக்கு வருகை தந்தார்.
- இத்துறைமுக நகர் அராபிய, சீனக் கப்பல்களால் நிரம்பியிருந்தது என்றும், விறுவிறுப்பான வணிக நடவடிக்கைகளைக் கொண்டிருந்ததாகவும் கூறுகிறார்.

**தகவல் பேழை**

பாண்டிய அரசு “ செல்வச் செழிப்பு மிக்க, உலகிலேயே மிக அற்புதமான பகுதியாகும்” என மார்க்கோ போலோ புகழாரம் சூட்டுகிறார். இலங்கையோடு சேர்ந்து உலகத்தில் காணப்படும் பெரும்பாலான மாணிக்கக்கற்களையும், முத்துக்களையும் உற்பத்தி செய்கிறது என மேலும் கூறுகிறார். தன்னுடைய பயணக் குறிப்புகளில் “சதி” (உடன்கட்டை ஏறுதல்) நிகழ்வுகளையும்

அரசர்களின் பலதார மணத்தையும் பதிவு செய்துள்ளார்.

- அரசர்களும், உள்ளூர் தலைவர்களும் " மங்கலம்" அல்லது " சதுர் வேதிமங்கலம்" எனும் பிராமணர் குடியிருப்புகளை உருவாக்கினர்.
- நிலத்தின் உண்மையான உடைமையாளர்கள் " பூமிபுத்திரர்" அல்லது "வேளாளர்" என விவரிக்கப்பட்டுள்ளனர்.
- வரலாற்று ரீதியாக அவர்கள் அப்பகுதியைச் சேர்ந்த மக்களாகையால் அவர்கள் " நாட்டுமக்கள்" எனவும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.
- இச்சமூக மக்கள் ஒன்றிணைந்த மன்றம் " சித்திர - மேழி - பெரிய நாட்டார் " என அழைக்கப்பட்டது.

**<u>அரசு அதிகாரிகள்</u>**

- பிரதம மந்திரி " உத்தம மந்திரி" என அழைக்கப்பட்டார்.
- முக்கிய வரலாற்று ஆளுமைகளான மாணிக்கவாசகர், குலச்சிறையார், மாரன்காரி ஆகியோர் அமைச்சர்களாகப் பணியாற்றினர்.
- அரசுச் செயலகம் " எழுத்து மண்டபம் " என அழைக்கப்பட்டது.
- மிகவும் மதிக்கப்பட்ட அதிகாரிகள் " மாறன் - எயினன் ", " சாத்தன் - கணபதி", "ஏனாதி - சாத்தன் ", " திற - திறன்" , மூர்த்தி- எயினன்", ஆகியோரும் மற்றவருமாவர்.
- " பள்ளி - வேலன்", " பராந்தகன்- பள்ளி- வேலன்", " மாறன் - ஆதித்தன்", " தென்னவன் - தமிழ்வேள்" ஆகியவை படைத் தளபதிகளின் பட்டங்களாகும்.

**<u>நிர்வாகப் பிரிவுகள்</u>**

- சோழநாட்டில் இருந்ததைப்போலவே " பாண்டியநாடு " பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.
- மண்டலங்கள் " வளநாடுகள் " என அழைக்கப்பட்டன.
- வளநாடுகள் பல " நாடுகளாகவும்", "கூற்றங்களாகவும்" , பிரிக்கப்பட்டன.
- நாடுகளை நிர்வகித்தவர்கள் "நாட்டார்" ஆவர்.
- நாடுகளும் கூற்றங்களும் மங்கலம், நகரம், ஊர் , குடி எனும் குடியிருப்புக்களைக் கொண்டிருந்தன.

**<u>கிராம நிர்வாகம்</u>**

- திருநெல்வேலி மாவட்டம் மானூர் என்னும் ஊரில் உள்ள கி.பி. (பொ.ஆ) 800-ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு கிராம நிர்வாகம் தொடர்பான செய்திகளைக் கொண்டுள்ளது.
- சிவில் இராணுவ அதிகாரங்கள் ஆகிய இரண்டும் ஒரே நபரிடம் வழங்கப்பட்டிருந்தன.

**<u>நீர்ப்பாசனம்</u>**

- வைகை, தாமிரபரணி ஆகிய ஆறுகளின் இரு கரைகளிலும், நீர்நிலைகளுக்கு நீர் கொண்டு செல்லும் கால்வாய்கள் வெட்டப்பட்டன.
- தென்தமிழகத்தில் சோழர்களைப் போலவே பாண்டியர்களும் புதிய நீர்ப்பாசனத் தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்தனர்.

**<u>மதம்</u>**

- வேள்விக்குடிச் செப்பேடுகளும் ஏனைய பொறிப்பியல் சான்றுகளும் சிறந்த பாண்டிய அரசர்கள் ஒவ்வொருவரும்

செய்த அஸ்வமேதயாகம், ஹிரண்ய கர்ப்பம், வாஜ்பேய வேள்வி போன்றவற்றை குறிப்பிடுகின்றன.

- பாண்டிய மன்னர்கள் சைவம், வைணவம் ஆகிய இரண்டையும் சமமாகவே கருதினர் என்பதைப் பொறிப்புச் சான்றுகளின் தொடக்கப் பகுதிகள் உணர்த்துகின்றன.
- அக்கால பாண்டிய அரசர்கள் தமிழ், சமஸ்கிருதம் ஆகியவற்றை ஆதரித்து வளர்த்தனர்.

**கோவில்கள்**

- பெரிய வடிவிலான அலங்கார வேலைப்பாடுகளுடன் கூடிய ஒற்றைக்கல்தூண்கள் இடைக்காலப் பாண்டியர்களின் தனித்தன்மை வாய்ந்த பாணியாகும்.
- சிவன், விஷ்ணு, கொற்றவை, கணேசர், சுப்ரமணியர் ஆகிய தெய்வங்களின் சிற்பங்கள் இக்கோவில்களில் காணப்படும் சிறந்த கலை வடிவங்களாகும்.
- வரலாற்று சிறப்புமிக்க மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குப் பாண்டியார் பேராதரவு நல்கினர்.

**வணிகம்**

- காயல் துறைமுகத்தில் மாலிக் உல் இஸ்லாம் ஜாமலுதீன் எனும் அராபிய வணிகரின் வணிக நிறுவனம் செயல்பட்டது.
- பாண்டிய அரசர்களுக்குக் குதிரைகள் எளிதாகக் கிடைப்பதற்கான வசதிகளை இந்நிறுவனம் செய்து கொடுத்தது.
- சம்பிரதாய விழாக்களுக்கும், போர்புரிவதற்கும் குதிரைகள் தேவைப்பட்டதால் அரசர்கள் குதிரைகளுக்காக முதலீடு செய்தனர் என்று மார்க்கோபோலோவும், வாசப்பும் குறிப்பிட்டுள்ளனர்.
- “குதிரை வணிகத்தில் ஈடுபட்டவர்கள் “ குதிரைச் செட்டிகள்” என அழைக்கப்பட்டனர்.
- பாண்டியர்களின் துறைமுகங்களில் மிகவும் விறுவிறுப்பாக வணிகம் நடைபெற்ற துறைமுகம் கிழக்குக் கடற்கரையிலிருந்த காயல்பட்டினம் ஆகும்.
- இது இன்றைய தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ளது.

- வணிகப் பரிமாற்றங்கள் தங்க நாணயங்கள் மூலம் நடைபெற்றதால் நாணயங்கள் அதிக அளவில் புழக்கத்தில் இருந்தன. அவை காசு, கழஞ்சு, பொன் எனப் பலவாறு அழைக்கப்பட்டன.

## வேளிர் - குடித்தலைமை

- தமிழகத்தை ஆட்சிபுரிந்த குறுநில மன்னர்கள் **வேளிர்** எனப்பட்டனர்.
- இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் கடையெழு வள்ளல்களான **பாரி**, **காரி**, **ஓரி**, **நள்ளி**, **பேகன்**, **ஆய்**, **அதியமான்** ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

## பல்லவப்பேரரசு

- பல்லவப் பேரரசினை தோற்றுவித்தவர் சிம்மவிஷ்ணு.
  - பல்லவர்களின் தலைநகரம் காஞ்சிபுரம்
  - தமிழ்நாட்டில் சங்க காலம் முடிந்த பிறகு களப்பிரர்களின் ஆட்சி சுமார் 250 ஆண்டுகள் நீடித்தது.
  - பின்னர் காஞ்சிபுரத்தை தலைநகராகக் கொண்டு தொண்டை மண்டலத்தில் பல்லவர்கள் தங்களது அரசை நிறுவினர்.
  - கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் பேரரசுச் சோழர்கள் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றும் வரை அவர்களது ஆட்சி தொடர்ந்தது.
  - தக்காணத்தில் ஆட்சி புரிந்த வாகாடகர்கள் என்ற பிராமண அரச குலத்தின் ஒரு பிரிவினரே பல்லவர்கள் என்று கூறப்படுகிறது.
  - கி.பி. 250 முதல் 350 வரையிலான முற்கால பல்லவர்கள் பிராகிருத மொழியில் பட்டயங்களை வெளியிட்டனர்.

.

**பிற்காலப்பல்லவர்கள்** (**கி**.**பி**.570-903)

**சிம்ம விஷ்ணு**

Ø பிற்காலப் பல்லவ அரசர்களில் முதன்மையானவர் **சிம்மவிஷ்ணு**.

Ø இவர் வடக்கில் ஆந்திரப்பகுதியான **விஷ்ணுகுண்டு** முதல் தெற்கில் காவிரி ஆறுவரையில் விரிந்ததொரு பேரரசை நிறுவினார்.

Ø இதனால் இவர் "**அவனிசிம்மன்**" அதாவது "**உலகின் சிங்கம்**" எனப் புகழப்பட்டார்.

**முதலாம் மகேந்திரவர்மன்** (**கி**.**பி**.600 - 630)

Ø சிம்மவிஷ்ணுவின் மகன் முதலாம் மகேந்திரவர்மன் ஆவார்.

Ø சாளுக்கிய நாட்டின் அரசர் இரண்டாம் புலிகேசி மகேந்திரவர்மனை தோற்கடித்து பல்லவ நாட்டின் வட பகுதிகளை கைப்பற்றினார்.

Ø மகேந்திரவர்மன் தமது ஆட்சியின் தொடக்கத்தில் சமணசமயத்தை பின்பற்றினார். பின்னர் சைவ குரவர் அப்பர் என்பவரால் சைவ சமயத்திற்கு மாற்றப்பட்டார்.

Ø இவர் புள்ளலூர் என்ற இடத்தில் வெற்றி பெற்றதாக பல்லவர் கல்வெட்டு குறிப்பிட்ட போதிலும் இழந்த பகுதியை அவரால் மீட்க முடியவில்லை.

Ø குணபரன், சத்யசந்தன், சேத்தகாரி (கோயில்களை கட்டுபவன்), சித்திரக்காரப் புலி, விசித்திர சித்தன், மத்தவிலாசன் போன்ற சிறப்பு பெயர்கள் பெற்றிருந்தார்.

Ø மண்டகப்பட்டு என்ற இடத்தில் காணப்படும் கல்வெட்டு இவரை விசித்திரசித்தன் என்று புகழ்கிறது.

Ø செங்கல், மரம், சுண்ணாம்பு, உலோகம் போன்றவற்றை பயன்படுத்தாமல் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோருக்கு கோயில் அமைத்தவர் என்ற சிறப்பும் உண்டு.

Ø மத்தவிலாச பிரகாசனம் என்ற வடமொழி நூல் இவரால் இயற்றப்பட்டது. குடுமியான் மலை இசைக்கல்வெட்டு இவரது காலத்தது என்று கருதப்படுகிறது.

Ø பல்லவர் தலைநகர் காஞ்சிபுரத்திற்கு வருகை தந்த சீனப்பயணி **யுவாங் டி சுவாங்**.

Ø **காஞ்சிபுரம்** தென்னிந்தியாவிலேயே மிகச்சிறந்த கல்வி மையமாக திகழ்ந்தது.

Ø காஞ்சியில் வாழ்ந்த **பண்டிதர் வத்சாயனார்**.

Ø **தர்மபாலர்** காஞ்சியிலிருந்து **நாளந்தாவிற்கு** சென்றவர்.

Ø **தண்டி அலங்காரம்** என்ற இலக்கண நூலை எழுதியவர் தண்டி.

Ø இவர் காஞ்சியில் வாழ்ந்த வடஇந்திய புலவர்.

## முதலாம் நரசிம்மவர்மன்

Ø முதலாம் நரசிம்மவர்மனின் சிறப்புப் பெயர் **மாமல்லன்**. **மற்போரில்** சிறந்தவன் என்பது இதன்பொருள்.

Ø சாளுக்கிய தலைநகரான வாதாபிக்கு படையெடுத்துச் சென்று வென்றதால் **வாதாபி கொண்டான்** என புகழப்பட்டார்.

Ø நரசிம்மவர்மன் ஆட்சியின் போது சீனப்பயணி **யுவான்சுவாங்** காஞ்சிக்கு வருகை தந்தார்.

Ø மாமல்லபுரத்தில் உள்ள **ஒற்றைக்கல் ரதங்கள் நரசிம்மவர்மன்** கட்டிடக்கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டு.

Ø காஞ்சிக்கு அருகிலுள்ள மணிமங்கலம் என்ற இடத்தில் நடைபெற்ற போரில் இரண்டாம் புலிகேசிக்கு எதிராக அவன் பெற்ற வெற்றியை கூரம் செப்பேடுகள் கூறுகின்றன.

- இவரது ஆட்சியில் சீனாவுடன் வணிக உறவு ஏற்பட்டது ஒரு முக்கிய நிகழ்வாகும்.
- மாமல்லபுரத்தை நிறுவியவரும் இவரே.

**இரண்டாம் நரசிம்மவர்மன் (ராஜசிம்மன்)-கி.பி.695-722**

- **இரண்டாம் நரசிம்மவர்மன்** காஞ்சிபுரத்தில் **கைலாசநாதர் கோயிலை க**ட்டினார்.
- மாமல்லபுரத்தில் கடற்கரை கோயில், பனைமலையில் **தாளதீஸ்வரர்** கோயில் உட்பட பல ஆலயங்களைக் கட்டினார்.
- சங்கரபக்தன், வாத்யவித்யாதரன், ஆகமப்பிரியன் போன்ற விருதுகளை சூட்டிக் கொண்டார்.
- இவரது ஆட்சியில் சீனாவுடன் வணிக உறவு ஏற்பட்டது ஒரு முக்கிய நிகழ்வாகும்.

**இரண்டாம் பரமேஸ்வரவர்மன் (கி.பி.728- 731)**

- இரண்டாம் நரசிம்மவர்மனின் மகன்.
- **கி.பி.728ல்** அரியணை ஏறினார்.
- சாளுக்கிய மன்னர் **இரண்டாம் விக்கிரமாதித்தனால்** போரில் தோற்கடிக்கப்பட்டார்.
- **கங்கர்களோடு** நடைபெற்ற போரில் பரமேஸ்வரவர்மன் கொல்லப்பட்டார்.
- இவரது மரணத்திற்கு பிறகு இவரின் மகன்கள் ஆட்சிக்கு வராத காரணத்தினால் சிம்ம விஷ்ணுவால் தொடங்கப்பட்ட பிற்கால பல்லவ மரபு முடிவடைந்தது.

**இரண்டாம் நந்திவர்மன்** (**கி**.**பி**.731 - 796)

- **ø** சிம்மவிஷ்ணுவின் தம்பியும், இரண்யவர்மனின் மகனுமான இரண்டாம் நந்திவர்மன் என்பவர் பல்லவ அமைச்சர்கள், கடிகைகளின் (கல்விநிலையங்கள்) உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களால் பல்லவ அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- **ø** சிறந்த விஷ்ணுபக்தர்.
- **ø** காஞ்சியில் **வைகுந்த பெருமாள் கோயிலைக்** கட்டினார்.
- **ø** **திருமங்கையாழ்வார்** இவரின் சமகாலத்தவர்.
- **ø** கடைசி பல்லவ அரசர் **அபராஜிதனை** (கி.பி.885 - 903) சோழமன்னன் ஆதித்தன் தோற்கடித்தார்.
- **ø** இவருக்'கு பிறகு தொண்டை மண்டலத்தில் பல்லவர்கள் ஆட்சி முடிவுற்றது.

**பல்லவர்களின் நிர்வாகம்**

- **ø** சிறந்த நிர்வாக அமைப்பு.
- **ø** பல்லவநாடு ராஷ்டிரம் எனக்கூடிய பல மண்டலங்களாக பிரிக்கப்பட்டது.
- **ø** மண்டலங்கள் பல விசயங்களாகவும் (கோட்டங்களாகவும்) விசயங்கள் பல நாடுகளாகவும், நாடுகள் பல ஊர்களாகவும் பிரிக்கப்பட்டன.
- **ø** நிர்வாகத்தின் அடிப்படை அலகு கிராமம்
- **ø** கிராமத்தை நிர்வகிக்க ஊர் அவை இருந்தது.
- **ø** கிராமங்களின் வளர்ச்சிக்கு **ஏரிவாரியம்**, **தோட்டவாரியம்**, **கோயில்வாரியம் உள்ளிட்ட சுமார்** 20 வாரியங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.
- **ø** வாரியங்கள் என்பவை நிர்வாக குழுக்கள் ஆகும்.
- **ø** ஆலயங்களுக்கு மன்னர் அளித்த நிலக்கொடை 'தேவதானம்" எனப்பட்டது.

Ø பிராமணர்களுக்கு வழங்கிய நிலக்கொடை 'பிரமதேயமாகும்".

**இலக்கியம்**

Ø பல்லவ மன்னர்கள் கல்விக்கு பெரும் ஆதரவு தந்தனர்.

Ø முதலாம் **மகேந்திரவர்மன் மத்தவிலாச பிரகாசனம்**, **பகவத்வியூகம்** ஆகிய நூல்களை எழுதினார்.

Ø **பாரவி** "**கீதார்ஜூனியம்**" என்ற நூலை எழுதினார்.

Ø **தண்டி** - **அவந்தி சுந்தரி கதாசாரம்** என்ற நூலை எழுதினார்.

Ø **பெருந்தேவனார்** - **பாரதவெண்பாவை** எழுதினார்

Ø **ஆழ்வார்களும்**, **நாயன்மார்களும்** எழுதிய பாடல்களில் பல பல்லவர் காலத்தைச் சேர்ந்ததாகும்.

Ø புகழ்பெற்ற **நந்திக்கலம்பகம்** இக்காலகட்டத்தில் எழுதப்பட்டது.

Ø காஞ்சிக்கடிகை மிகவும் சிறப்பு வாய்ந்த கல்விக்கூடமாகும்.

Ø கடம்ப குலத்தின் நிறுவனரான மயூர சர்மன் காஞ்சிக்கு வந்து வேதங்களைக் கற்றான்.

Ø நந்திக் கலம்பகம் மற்றொரு முக்கிய தமிழ் இலக்கியம். ஆனால், இதனை இயற்றியவர் பெயர் தெரியவில்லை.

Ø இவர்கள் கால மண்டபங்களில் சிறப்பானவை மகிஷாசுர மர்த்தினி மண்டபம், திருமூர்த்தி மண்டபம், வராக மண்டபம்.

Ø மாமண்டூர் கல்வெட்டு இசைப்பண் குறித்து விளக்குகிறது.

Ø முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் தட்சிண சித்திரம் என்ற ஓவியக்கலை விளக்கநூல் தொகுக்கப்பட்டது.

**பல்லவர் கால கலைகள்**

Ø திராவிடபாணியிலான கட்டிடக்கலை பல்லவர்கள் காலத்தில் தொடங்கப்பட்டது.

Ø இவர்களது கட்டிடக்கலையை நான்கு விதமாக பிரிக்கலாம்

Ø முதலாவது **பாறைக்குடைவு கோயில்கள்**. இவை முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் ஏற்படுத்தப்பட்டன. **எ.கா**. **மகேந்திரவாடி**, **மாமண்டூர்**, **தளவானூர்**, **சீயமங்கலம்**, **திருச்சி**, **திருக்கழுகுன்றம்** உள்ளிட்ட பல இடங்களில் உள்ளன.

Ø இரண்டாவது ஒற்றைக்கல் இரதங்கள், மண்டபங்கள். இவை மாமல்லபுரத்தில் உள்ளன.

Ø மூன்றாவது இராஜசிம்மன் வகையிலானது. **காஞ்சிபுரத்தில் உள்ள கைலாசநாதர் கோயில்**, **மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரைக்கோயில்** இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

Ø நான்காவது கட்டுமான கோயில்கள். காஞ்சியில் உள்ள முக்தீஸ்வரர் ஆலயம், வைகுந்த பெருமாள் கோயில் ஆகியன இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

Ø பல்லவ மன்னர்கள் இசை, ஓவியம், நுண்கலைகளை ஆதரித்தனர்.

Ø இசையில் வல்லவராய் திகழ்ந்ததால் முதலாம் மகேந்திரவர்மன் "**சங்கீரணஜாதி**" என்று புகழப்பட்டார்.

Ø பல்லவர் காலத்து அழகிய ஓவியங்கள் **காஞ்சி கைலாசநாதர்** கோயிலில் காணப்படுகின்றன.

**தக்காண அரசுகள்**

Ø இந்தியாவின் தெற்கு பகுதியானது தக்காணம் அல்லது தட்சணபதம் என அழைக்கப்படுகிறது.

Ø இடைக்காலத்தில் சாளுக்கியர்களும். இராட்டிரக்கூடர்களும் தக்காணத்தில் ஆட்சியை ஏற்படுத்தினார்கள்.

Ø சாளுக்கியர்களின் வீழ்ச்சிக்கு பிறகு இவர்களிடம் திறை செலுத்தி வந்த குறுநில அரசர்களாகிய ஹொய்சாளர்கள், காகத்தியர்கள், யாதவர்கள் ஆகியோர் சுதந்திர அரசை நிறுவினார்கள் .

**<u>சாளுக்கியர்கள் (கிபி 6-12 ஆம் நூற்றாண்டுகள்)</u>**

Ø தக்காணத்தை ஆண்ட அரசுகளில் முக்கியமான ஆட்சியாளர்கள் சாளுக்கியர்கள். இவர்களது ஆட்சிக்காலத்தை 3விதமாக பிரிக்கலாம். அவை

Ø 1.முற்கால மேலை சாளுக்கியர்(கி.பி 6-8 ஆம் நூற்றாண்டுகள்)

Ø பிற்கால மேலைச்சாளுக்கியர்(கி.பி.10-12ஆம் நூற்றாண்டுகள்)

Ø கீழைச்சாளுக்கியர்(கி.பி 7-12 ஆம் நூற்றாண்டுகள்)

**<u>முற்கால மேலைச் சாளுக்கியர்(கி.பி. 6-8 ஆம் நூற்றாண்டுகள்)</u>**

Ø கி.பி ஆறாம் நூற்றாண்டில், இன்றைய கர்நாடக மாநிலம் அமைந்துள்ள பகுதியில் சாளுக்கியர்கள் தங்களது அரசாட்சியை ஏற்படுத்தினர்.

Ø தற்போது பதாமி என்று அழைக்கப்படும், பிஜப்பூர் மாவட்டத்திலுள்ள வாதாபி அவர்களுடைய தலைநகரமாய் விளங்கியது.

Ø ஜெயசிம்மன், இராமராயா ஆகியோரது காலத்தில்தான் சாளுக்கிய மரபு மெல்ல வளரத் தலைப்பட்டது.

Ø முதலாம் புலிகேசி வாதாபி சாளுக்கிய மரபிற்கு அடித்தளமிட்டவர் ஆவார்.

- சாளுக்கிய அரசர்களில் மிகச்சிறந்தவராக விளங்கியவர்

**இரண்டாம் புலிகேசி**

- இரண்டாம் புலிகேசி கங்கர், மாளவர்கள், கூர்ஜரர்கள் ஆகியோரை வென்றதோடு கி.பி.637இல் ஹர்சரின் படையெடுப்பை எதிர்த்து நின்று வெற்றியடைந்தார்.
- கி.பி.640இல் மகேந்திரனின் மகன் நரசிம்மவர்மன் இரண்டாம் புலிகேசி மீது படையெடுத்து புலிகேசியை கொன்றார்.
- முதலாம் விக்கிரமாதித்தியன், விஜயாதித்தன், இரண்டாம் விக்கிரமாதித்தியன் ஆகியோர் சாளுக்கிய மரபில குறிப்பிடத்தக்க மன்னர்களாவர்.
- இராட்டிரகூட மரபை தோற்றுவித்த தந்தி துர்க்கர் சாளுக்கியன் இரண்டாம் கீர்த்தி வர்மனை தோற்கடித்து வாதாபியை கைப்பற்றினார்.

**பிற்கால மேலை சாளுக்கியர்கள் (கி.பி.10-12 நூற்றாண்டுகள்**

- கல்யாணியை தலைநகராக கொண்டு கி.பி.10 ஆம் நூற்றாண்டின் இறுதி பகுதியில் ஆட்சியை அமைத்தனர்.
- இம்மரபை தொடங்கிய அரசர் இரண்டாம் தைலப்பா (கி.பி.973 - 997) ஆவார்.
- பிற்கால மேலை சாளுக்கிய மரபின் சிறந்த மன்னர்களாக இரண்டாம் சோமேஸ்வரன், இரண்டாம் ஜெயசிம்மன், ஆறாம் விக்கிரமாதித்தியன் ஆகியோர் கருதப்படுகின்றனர்.
- நான்காம் சோமேஸ்வரன் இம்மரபின் கடைசி மன்னர் ஆவார்.

**கீழை சாளுக்கியர் (கி.பி.7 - 12 ஆம் நூற்றாண்டுகள்)**

- இரண்டாம் புலிகேசியின் சகோதரரான விஷ்ணுவர்த்தன் கீழை சாளுக்கிய மரபை தொடங்கிய மன்னர் ஆவார்.

- கீழை சாளுக்கியர்கள் சோழ மரபுடன் திருமண உறவுகளை கொண்டிருந்தனர். இத்திருமண உறவின் வழியாக தோன்றிய வாரிசே குலோத்துங்க சோழன் ஆவார்.
- இவர் கீழை சாளுக்கிய நாட்டினை சோழ பேரரசுடன் இணைத்து சோழ நாட்டு மன்னர் ஆனார்.

**சாளுக்கியர்களின் பங்களிப்பு**

- சாளுக்கிய மன்னர்கள் இந்து சமயத்தைப் போற்றினர். சமண மதத்தையும் ஆதரித்தனர்.
- இரண்டாம் புலிகேசியின் அவைப் புலவரான இரவிகீர்த்தி ஐஹோலே கல்வெட்டுக்களை படைத்தவர் ஆவார்.
- 70க்கும் மேற்பட்ட கோயில்களை ஐஹோலேவில் உருவாக்கியதால் "இந்திய கோயில் கட்டடக்கலையின் தொட்டில்" என ஐஹோலே சிறப்பிக்கப்படுகிறது.
- மேலும் பட்டாடக்கல்லில் உள்ள விருபாக்ஷா் ஆலயம், பாதாமி குகைக் கோவில்கள் ஆகியன மற்ற சிறந்த ஆலயங்கள் ஆகும்.
- விருபாக்ஷா கோயில் காஞ்சிபுரத்தின் கைலாசநாதர் கோயிலைப் போல கட்டப்பட்டுள்ளது.
- சாளுக்கியர் காலத்தில் தெலுங்கு இலக்கியங்கள் வளர்ச்சியடைந்தன.

**பட்டாடக்கல்**

- இது பண்டைய கிரேக்க ரோமானிய காலத்திலேயே புகழ்பெற்ற வரலாற்று தளமாகும்.
- இங்கு காணப்படும் 10க்கும் மேற்பட்ட கோயில்கள் சாளுக்கிய மன்னர்களால் கட்டப்பட்டவையாகும்.

**விருபாக்ஷா் கோயில்**

- இக்கோயில் இரண்டாம் விக்கிரமாதித்தனின் மனைவி ராணி லோகமகாதேவியால் கட்டப்பட்டதாகும்.

- இக்கோயிலின் புரோகிதர் அல்லது அந்தராலா அரைக்கு முன்னால் தூண்களால் ஆன மண்டம் ஒன்று பொதுமக்கள் கூடுகைக்காக உருவாக்கப்பட்டுள்ளது.

**இராட்டிரக்கூடர்கள் (கி.பி.8 - 10 ம் நூற்றாண்டு)**

- இராட்டிரக்கூடர்களின் ஆட்சிக்காலம் தக்காண வரலாற்றின் சிறப்புக்குரிய காலமாகும். வட இந்தியாவில் இருந்த இரத்தோர்களின் வழிவந்தோரே இராட்டிடக்கூடர்கள் ஆவர். கன்னடம் இவர்களின் தாய்மொழி ஆகும்.
- இராட்டிரக்கூடர் என்னும் சொல்லுக்கு இராட்டிரம் என்னும் (நாட்டின்) சிறிய பகுதியை ஆளுகை செய்யும் உரிமைப் பெற்றவர்கள் எனப் பொருளாகும்.
- இராட்டிரக்கூட மரபினர் முற்கால மேலை சாளுக்கியர்களிடம் இராட்டிர அதிகாரிகளாக பணியாற்றியவர்கள்.
- பதாமியை ஆண்ட இரண்டாம் கீர்த்தி வர்மனின் இராட்டிர அலுவலராக இருந்த தந்தி துர்க்கர் கி.பி.742இல் எல்லோராவை கைப்பற்றினார்.
- மால்கெட் நகரை தலைநகராக கொண்ட இவரது பேரரசு வடக்கே நாசிக் வரை பரவியிருந்தது.
- கி.பி.756இல் தந்தி துர்க்கர் மரணமடைந்த பிறகு முதலாம் கிருஷ்ணர் பட்டமேற்றார்.
- இவரைத் தொடர்ந்து இவரின் மகன் இரண்டாம் கோவிந்தன் ஆட்சியில் அமர்ந்தார்.
- இவர் வேங்கியின் மீது படையெடுத்து வென்றார்.
- கங்கவாடி, காஞ்சிபுரம், மாளவம் ஆகிய மன்னர்களுடன் உடன்படிக்கைகளை செய்து கொண்டார்.
- கோவிந்தனுக்கு அடுத்து பதவிக்கு வந்தவர் துருவன் (கி.பி.780 - 790) என்பவர் ஆவார். இவர் சிறந்த ஆட்சியாளராக விளங்கினார்.
- பல்லவ மன்னர் தண்டி வர்மனை வென்றார். இலங்கையை கைப்பற்றி அடிமைப்படுத்தினார். இவரது காலத்தில் இராட்டிரகூட அரசு புகழின் உச்சத்தை அடைந்தது.

- மூன்றாம் கோவிந்தனுக்குப் பிறகு அவரின் மகன் அமோக வர்ஷன் தமது 14ம் வயதில் மன்னர் ஆனார்.
- அடுத்து பதவியேற்ற அரசர்களில் குறிப்பிடத்தக்கவர் மூன்றாம் கிருஷ்ணர் (கி.பி.936 - 968) ஆவார்.
- இவர் தக்கோலம் போரில் சோழர்களை வென்று, தஞ்சாவூரைக் கைப்பற்றி இராமேஸ்வரம் வரையில் வந்தார்.
- இராட்டிரக்கூடர்களின் கடைசி அரசர் இரண்டாம் கார்கா ஆவார்.
- இவர் கல்யாணியை ஆண்ட சாளுக்கிய அரசர் இரண்டாம் தைலப்பா என்பவரால் தோற்கடிக்கப்பட்டார்.
- இதனால் இராட்டிரக்கூட பேரரசு முடிவுக்கு வந்தது.

**<u>இராட்டிரக்கூடர்களின் சிறப்புகள்</u>**

- இவ்வரசர்களில் துருவன், மூன்றாம் கோவிந்தன், மூன்றாம் இந்திரன் ஆகியோர் வட இந்தியாவில் படையெடுத்து தோற்கடித்தமையால் வட இந்தியாவின் வரலாற்றின் போக்கினையே மாற்றி அமைத்தனர்.
- இராட்டிரகூடர்களின் தென்னிந்திய படையெடுப்புகளும் குறிப்பிடத்தக்கவை.

**<u>இராட்டிரக்கூடர்களின் பங்களிப்புகள்</u>**

- எல்லோரா குகைகள் சாளுக்கியர்களாலும் பின்னர் இராட்டிரகூடர்களாலும் குடையப்பட்டவை ஆகும்.
- இக்குகைக் கோயில்களில் இந்து, புத்த, சமண மதக் கடவுளர்கள் காணப்படுகின்றனர்.
- இங்குக் காணப்படும் கைலாசநாதர் கோயில் ஒரே பாறையில் குடையப்பட்ட உலகிலேயே மிகப்பெரிய கோயிலாகும்.
- முதலாம் கிருஷ்ணர் கைலாசநாதர் கோயிலை எல்லோராவில் கட்டினார்.
- மும்பைக்கு அருகில் உள்ள எலிபெண்டா குகைக்கோயிலை கட்டி முடித்தவர்கள் இராட்டிரக்கூடர்களே.
- அமோக வர்ஷன் இலக்கியங்களை வளர்த்தார்.

- மேலும் இவர் கன்னட மொழியில் கவிராச மார்க்கம் என்ற இலக்கியத்தை படைத்துள்ளார்.
- இவரின் ஆசிரியர் ஜினசேன் என்பவர் பார்சுவநாதரின் வாழ்க்கை வரலாற்றை பார்சுவ உதயம் என்ற நூலாகப் படைத்தார்.

**ஹொய்சாளர்கள் (கி.பி.11-14 ஆம் நூற்றாண்டு)**

- துவார சமுத்திரத்தை ஆட்சி செய்தவர்கள்.
- இம்மரபில் குறிப்பிடத்தக்கவர்கள் விஷ்ணுவர்த்தனர், இரண்டாம் வீரபல்லாளா ஆவர்.
- இம்மரபின் பிற்கால மன்னர்களில் சிறந்த பேரரசர் மூன்றாம் பல்லாளா.
- இவர் கி.பி.1310 இல் மாலிக்கபூரால் தோற்கடிக்கப்பட்டார்.
- இவரது மகன் நான்காம் பல்லாளா தந்தை விட்டுச் சென்ற போர்களை தொடர வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்.
- இவரது மறைவிற்குப் பின் ஹொய்சால அரசு முடிவுற்றது.

**ஹொய்சாளர்களின் பங்களிப்பு**

- மைசூர் அரசு அமைவதற்கு வழியமைத்தனர்.
- கன்னட இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்டனர்.
- துவார சமுத்திரம், பேளூர் ஆகிய இடங்களில் ஏராளமான கோயில்களை கட்டினர்.
- அக்கோயில்களில் இராமாயணம், மகாபாரத காட்சிகள் சித்தரிக்கப்பட்டுள்ளன.
- நியச்சந்திரா, கண்டி, ராகவங்கர், நேமிச்சந்திரன் ஆகியோர் இக்காலத்தில் சிறந்த இலக்கியங்களைப் படைத்தார்கள்.

**காகத்தியர்**

- வாரங்கலை ஆண்டவர்கள்.
- கல்யாணியை ஆண்ட மேலைச் சாளுக்கியர்களிடம் குறுநில அரசர்களாக இருந்தவர்கள்.
- அனுமக்கொண்டா இவர்களது தலைநகரம்.
- இவர்களில் குறிப்பிடத்தக்க அரசர் கணபதி ஆவார்.

- இவர் சோழர்களிடமிருந்து காஞ்சிபுரம் பகுதியை வென்றார்.
- கணபதியிடமிருந்து ஆட்சி உரிமையை அவரது மகள் ருத்ராம்பாள் பெற்றார்.
- இவரது ஆட்சியில் நாடு வளமும், அமைதியும் பெற்று விளங்கியது.
- காகத்தியர்களின் இறுதி மன்னரான வினயகத்தேவன் பாமினி சுல்தான், முதலாம் முகமதுஷா என்பவரால் கி.பி.1362 இல் கொல்லப்பட்டதால் காகத்திய அரசு முடிவுக்கு வந்தது.

**காகத்தியர்களின் பங்களிப்பு**

- அனும கொண்டாவில் காகத்தியர்கள் கட்டிய ஆயிரம் தூண் ஆலயம் இவர்களது கட்டிட கலைக்கு நிலைத்த புகழினைத்தரும் ஒன்றாகும்.
- கொள்ளூரில் கிருஷ்ணா நதிக்கரையில் கண்டெடுக்கப்பட்ட உலக புகழ் வாய்ந்த கோகினூர் வைரம் காகத்தியருடையதாகும்.

**யாதவர்கள்**

- தேவகிரியை ஆட்சி செய்தவர்கள். தங்களை புராண நாயகனான கிருஷ்ண பகவானின் வழிவந்தோர் எனக் கூறிக் கொண்டனர்.
- இவர்கள் நாசிக் முதல் தேவகிரி (தௌலதாபாத்) வரையில் அமைந்திருந்த செவுனா பகுதியை ஆண்டதால் செவுனர்கள் என்றும் அழைக்கப்பட்டனர்.
- சிங்கனா என்பவர் இம்மரபின் மிகச்சிறந்த மன்னர் ஆவார். குஜராத் மீது பலமுறை படையெடுத்தார்.
- ராமச்சந்திர தேவா இம்மரபின் இறுதி மன்னர் ஆவார். இவரை அலாவுதின் கில்ஜி தோற்கடித்து டெல்லிக்கு திரை செலுத்தும் அரசராக மாற்றினார்.
- இறுதியாக ஹரபாலர் என்ற மன்னர் அலாவுதின் கில்ஜியின் மகன் முபாரக் என்பவரால் கொல்லப்பட்டார்.
- இதன் பின்னர் யாதவ அரசு முடிவுற்றது.

**யாதவர்களின் பங்களிப்பு**

- தேவகிரி கோட்டையானது யாதவர்களால் கட்டப்பட்டது.
- வலிமை வாய்ந்த இந்திய கோட்டைகளில் இதுவும் ஒன்று.
- இக்கோட்டைக்குள் டெல்லி சுல்தானியர்கள் ஜும்மா மசூதி, சார்மினார் ஆகியவற்றை பிற்காலத்தில் கட்டினர்.
- யாதவர்கள் அறிவியலையும், வானவியலையும் ஆதரித்து வளர்த்தனர்.

**எலிபெண்டா குகைகள்**

- இராட்டிரக்கூடர்களால் பாறைகளைக் குடைந்து உருவாக்கப்பட்டவை.
- மும்பையை அடுத்த சிறு தீவில் அமைந்துள்ளது.
- இந்தியாவிற்கு வந்த போர்ச்சுக்கீசியர்கள் அங்கு காணப்பட்ட பெரிய யானை சிற்பத்தின் காரணமாக அதற்கு எலிபெண்டா என பெயரிட்டனர்.
- இக்குகைக்கோயில் சிவனுக்கு அற்பணிக்கப்பட்டதாகும். இங்கு அநேக தேவ தேவியர் சிற்பங்களும் உள்ளன.

**தக்காண அரசுகளின் முடிவு**

- ஒன்றுக்கொன்று இடைவிடாமல் நிகழ்த்திய போர்களால் அனைத்து தக்காண அரசுகளும் வலிமையை இழந்தன.
- மேலும், அலாவுதின் காலத்திலிருந்து தொடர்ந்த டெல்லி சுல்தானியர்களின் தாக்குதல் இத்தக்காண அரசுகளின் வீழ்ச்சிக்கு முழுமையாக வழிவகுத்தது.

*****

# தமிழ்நாடு அரசு

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு** : TNPSC **ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**)

**பாடம்** : **வரலாறு**

**பகுதி** : **மராத்தியர்கள்**

©**காப்புரிமை** :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமை பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# வரலாறு

## மராத்தியர்கள்

Ø **தக்காணம் மற்றும் மஹாராஷ்டிரா** மலைப்பகுதியில் வாழ்ந்த மக்கள் மராத்தியர்கள் எனப்பட்டனர்.

Ø மராத்திய மாநிலத்தின் இயற்கை அமைப்பு அப்பகுதியில் வாழ்ந்த மக்களிடையே சிறப்புத் தன்மைகளை உருவாக்கியது.

Ø **கொரில்லா** என்ற போர் முறையை மராத்தியர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

Ø கொரில்லா போர்முறை என்பது **முறைசாரா போர்முறை** ஆகும். மராத்தியர்கள் மலைகளுக்கிடையே ஒளிந்து கொண்டு திடீரென்று எதிரிகளை தாக்கும் முறையாகும்.

Ø முஸ்லீம்களின் செயல்பாடுகளினால் ஏற்பட்ட வெறுப்பு மற்றும் பக்தி இயக்கம், மராத்தியர்கள் இடையே ஒற்றுமை உணர்வை உருவாக்கியது.

Ø பக்தி இயக்கத் தலைவர்களான **துக்காராம்**, **ராம்தாஸ்**, **ஏக்நாத்** மற்றும் **வாமண்பண்டித்** போன்றவர்கள் கடவுள் பக்தியையும் மற்றும் ஒரு வலிமையான தேசத்தை உருவாக்க வேண்டுமென்ற உணர்வையும் தோற்றுவித்தனர்.

Ø இத்தகைய சூழ்நிலையில் **சிவாஜி** ஒரு மாபெரும் தலைவராக தோன்றினார்.

**சிவாஜி** (**கி.பி.**1627 - **கி.பி.**1680)

Ø பூனாவிற்கு அருகில் உள்ள **சிவனேரி கோட்டையில்** சிவாஜி பிறந்தார்.

Ø பீஜப்பூர் சுல்தானிடம் பணியாற்றி வந்த **ஷாஜி பான்ஸ்லே** இவரது தந்தையாவார். இவரது தாய் **ஜிஜாபாய்**.

Ø ஷாஜி பான்ஸ்லே துக்காபாய் என்பவரை இரண்டாவது மணம் புரிந்துகொண்டதால் முதல் மனைவி ஜிஜாபாய் மற்றும் மகன் சிவாஜியை புறக்கணித்தார்.

Ø **தாதாஜி கொண்டதேவ்** சிவாஜியின் காப்பாளர் ஆனார். இவர் சிவாஜியை போற்றி பராமரித்தார்.

Ø சிவாஜி சிறு வயது முதற்கொண்டே இராமாயணம், மகாபாரதக் கதைகள் மற்றம் புராணங்களை தனது தாய் மூலம் கற்றுணர்ந்தார்.

Ø பக்திப் பெண்மணியாக விளங்கிய இவரது தாய் சிவாஜியை நல்வழிப்படுத்தினார்.

Ø இவருடைய குரு குதிரைப்பயிற்சி மற்றும் நிர்வாகப் பயிற்சிகளை பயிற்றுவித்தார்.

**<u>படையெடுப்புகள்</u>**

Ø சிவாஜி முஸ்லீம்களின் கீழ் பணியாற்ற வெறுப்பு கொண்டார். எனவே, சுதந்திரமான பேரரசு ஒன்றினை தோற்றுவிப்பதை நோக்கமாக கொண்டார்.

Ø **புரந்தர்**, **ரெய்கார் தோர்னா மற்றும் கல்யாண்** ஆகிய கோட்டைகளை பீஜப்பூர் சுல்தானிடமிருந்து **கி**.**பி**.1646-**ல்** கைப்பற்றினார்.

**<u>சிவாஜியும் பீஜப்பூர் சுல்தானும்</u>**

Ø சிவாஜியின் வளர்ச்சியைக் கண்டு பொறாமை அடைந்த பீஜப்பூர் சுல்தான் சிவாஜியை உயிருடனோ அல்லது சாகடித்தோ கொண்டு வரும்படி **அப்சல்கான்** என்பவரை **கி.பி**.1659 ஆம் ஆண்டு அனுப்பினார்.

Ø அப்சல்கானின் சூழ்ச்சியை சிவாஜி தெரிந்து கொண்டு, அவரை சந்திக்க தகுந்த பாதுகாப்புடன் சென்றார்.

Ø சிவாஜியும், அப்சல்கானும் ஒருவரை ஒருவர் சந்தித்து தழுவிக் கொண்டனர்.

**Ø** அச்சமயத்தில் அப்சல்கான் சிவாஜியின் கழுத்தை நெறித்து கொலை செய்யும் முயற்சியில் ஈடுபட்டார்.

**Ø** ஆனால் சிவாஜி தனது உடையில் மறைத்திருந்த புலிநகத்தால் **அப்சல்கானை** கிழித்துக் கொலை செய்தார்.

**Ø** இதனால் சிவாஜியின் பெருமையும், புகழும் மேலும் அதிகரித்தது.

**<u>சிவாஜியும் முகலாயர்களும்</u>**

**Ø** முகலாய மன்னராக பொறுப்பேற்ற ஔரங்கசீப் தனது தக்காண ஆளுநர் **செயிஷ்டகானை கி**.**பி**.1660 ஆம் ஆண்டு சிவாஜியை அடக்க அனுப்பினார்.

**Ø** செயிஷ்டகான், பூனா என்ற இடத்தில் முகாமிட்டிருந்தார். இதனை அறிந்த சிவாஜி அவரை சந்திக்க திருமண கோஷ்டியினர் போன்று மாறுவேடம் பூண்டு செயிஸ்டகான் தங்கி இருந்த இடத்தை அடைந்தார்.

**Ø** அப்போது செயிஸ்டகான் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார். சிவாஜி அவரைத் தாக்க முற்பட்டார். ஆனால் செயிஸ்டகான் அங்கிருந்து உயிர் தப்பினார். அவரது கட்டை விரல் துண்டிக்கப்பட்டது.

**Ø** ஔரங்கசீப், சிவாஜியை அடக்க இரண்டாவது முறையாக **ராஜா ஜெய்சிங்** என்பவரை அனுப்பினார்.

**Ø** முகலாயப்படை சிவாஜியை சூழ்ந்துகொண்ட சூழ்நிலையில், சிவாஜி வேறு வழியின்றி அமைதி உடன்படிக்கையில் கையொப்பமிட தயாரானார்.

**Ø** இவரது முயற்சியால் **கி**.**பி**.1665 ஆம் ஆண்டு **புரந்தர்** உடன்படிக்கை ஏற்பட்டது.

**Ø** இதன்படி சிவாஜி ஔரங்கசீப்பை சந்திக்க ஒப்புக்கொண்டார். தனது மகன் சாம்பாஜியுடன் ஔரங்கசீப்பை சந்திக்க கி.பி.1666 ஆம் ஆண்டு ஆக்ரா சென்றார். அங்கு சிவாஜி அவமானப்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

Ø பழக்கூடை ஒன்றின் மூலம், சிறையிலிருந்து சிவாஜி உயிர் தப்பினார். ஔரங்கசீப்பால் சிவாஜியை ஒன்றும் செய்ய இயலவில்லை.

Ø சிவாஜியை "**மலை எலி**" **என்றும்** "**தக்காண புற்றுநோய்**" என்றும் அழைத்தனர்.

Ø சிவாஜி முகலாயர்களின் தீவிர எதிரியானார். இதன்பிறகு சிவாஜி பல்வேறு கோட்டைகளை கைப்பற்றி, மராத்திய பேரரசை பலப்படுத்தினார்.

Ø கி.பி.1674 ஆம் ஆண்டு **ரெய்கார் கோட்டையில்**, சிவாஜியின் முடிசூட்டு விழா நடைபெற்றது.

Ø சிவாஜி "**சத்ரபதி**" என்ற பட்டத்தை சூட்டிக்கொண்டார்.

Ø இந்த முடிசூட்டு விழாவின் மூலம் புதிய பேரரசு (மராத்திய பேரரசு) தோன்றியது. முடிசூட்டு விழாவிற்கு பிறகு ஏற்பட்ட நிதி நெருக்கடியினால் கர்நாடக படையெடுப்பை மேற்கொண்டார்.

Ø **செஞ்சி**, **வேலூர்** மற்றும் பல்வேறு கோட்டைகளை கைப்பற்றினார். இவரது பேரரசு **மைசூர்**, **கொங்கன்** மற்றும் **மஹாராஷ்டிரா** வரை பரவியிருந்தது. கிபி.1680 ஆம் ஆண்டு சிவாஜி **ரெய்காரில்** உயிர் துறந்தார்.

## <u>சிவாஜியின் நிர்வாகம்</u>

Ø சிவாஜி ஒரு சிறந்த நிர்வாகி. மக்கள் நலன் கருத்தில் கொண்டு செயல்பட்டார். நிர்வாகத்தில் தனக்கு உதவி செய்ய 8 நபர்களைக் கொண்ட அமைச்சரவை ஒன்றை அமைத்தார். இது "**அஷ்டப்பிரதான்**" என்று அழைக்கப்பட்டது.

Ø இவருடைய அரசவையில் **அஷ்டதிக்கஜங்கள்** - **நவரத்தினங்கள்** இருந்தனர்.

Ø பீஷ்வா (பிரதம அமைச்சர்)

Ø மந்திரி (காலமுறை அமைச்சர்)

Ø சச்சிவா (உள்துறை அமைச்சர்)

- Ø சுமந்த் (வெளியுறவு அமைச்சர்)
- Ø சேனாதிபதி (இராணுவம் அமைச்சர்)
- Ø அமத்தியா (நிதி அமைச்சர்)
- Ø பண்டிட்ராவ் (சமயத் தலைவர்)
- Ø நியாயதீஷ் (தலைமை நீதிபதி)
- Ø ஒவ்வொரு அமைச்சரும் ஒரு துறைக்கு பொறுப்பாவார். பேரரசு பல மாநிலங்களாக அல்லது பிராந்தியங்களாக பிரிக்கப்பட்டிருந்தன.
- Ø மேலும், **பர்கானாக்களாகவும்**, **கிராமங்களாகவும்** பிரிக்கப்பட்டன.
- Ø சிவாஜியின் பேரரசு "**சுயராஜ்யம்**" என்று அழைக்கப்படுகிறது.

**<u>வருவாய்துறை நிர்வாகம்</u>**

- Ø சிவாஜி **ஜமின்தாரி** முறையை ஒழித்தார்.
- Ø விவசாயிகளிடம் நேரிடையாக தொடர்பை ஏற்படுத்தினார்
- Ø நிலங்கள் கவனமாக அளக்கப்பட்டு நிலத்தீர்வை மேற்கொள்ளப்பட்டது. விளைச்சலில் **ஐந்தில் இரண்டு பகுதி** அரசின் பங்காக நிர்ணயிக்கப்பட்டது.
- Ø இதைப் பணமாகவோ, தானியமாகவோ செலுத்தலாம். பஞ்சம் மற்றும் அவசர காலங்களில் விவசாயிகளுக்கு கடன் வழங்கப்பட்டது.
- Ø நிலவரித்திட்டம் அக்பர் காலத்தில் **ராஜாதோடர்மால்** பின்பற்றிய முறையை ஒட்டி அமைந்திருந்தது.
- Ø **சவுத்**, **சர்தேஷ்முகி** என்ற இரண்டு முக்கிய வரிகள் வசூலிக்கப்பட்ன.

**<u>நீதித்துறை நிர்வாகம்</u>**

- Ø சிவாஜி ஆட்சிக்காலத்தில் இந்துமதச் சட்டங்களின் அடிப்படையில் நீதி நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டது.

Ø கிராமங்களில் வழக்குகளை **கிராம பஞ்சாயத்து** சபை தீர்த்து வைத்தது.

Ø **பட்டேல்** என்ற அதிகாரி குற்றவியல் வழக்குகளை விசாரித்தார்.

Ø அனைத்து உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளில் மேல்முறையீட்டினை **நியாயதீஷ்** என்ற அதிகாரி விசாரணை செய்தார்.

Ø இவர் அமைச்சரவையில் ஓர் உறுப்பினராவார்.

**<u>இராணுவ நிர்வாகம்</u>**

Ø சிவாஜி ஓர் சிறந்த வீரராகவும், இராணுவத் தளபதியாகவும் விளங்கினார்.

Ø இவர் கட்டுப்பாடான நிரந்தர இராணுவத்தைப் பராமரித்தார்.

Ø இவரது இராணுவத்தில் காலாட்படை, குதிரைப்படை, பீரங்கிப்படை, யானைப்படை, ஒட்டகப்படை மற்றும் கப்பற்படை இடம் பெற்றிருந்தன.

Ø குதிரைப்படை முக்கிய படை பிரிவாகக் கருதப்பட்டது.

Ø இராணுவ நிர்வாகத்தில் கோட்டைகள் முக்கிய அங்கம் வகித்தன.

Ø மராட்டியர்கள் கோட்டைகளை தாயாக கருதினர்.

Ø வீரர்களுக்கு சம்பளமாக பணம் வழங்கப்பட்டது.

Ø வீரர்கள் இறந்த பிறகு அவரது குடும்பத்தினரும் பராமரிக்கப்பட்டனர்.

Ø இராணுவ முகாமில் பெண்கள் அனுமதிக்கப்படவில்லை.

Ø இராணுவம் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்லும் போது விளைச்சலுக்கு எவ்வித சேதத்தையும் ஏற்படுத்தக்கூடாது.

**<u>சிவாஜியின் வழித்தோன்றல்கள்</u>**

Ø சிவாஜியின் மரணத்தை தொடர்ந்து அவரது மூத்த மகன் **சாம்பாஜி பேரரசராக** பொறுப்பேற்றார்.

- முகலாய மன்னர் ஔரங்கசீப்பிற்கு பிறகு **முதலாம் பகதூர் ஷா** பொறுப்பேற்றார்.
- மராத்திய பேரரசில் **ஷாகு மற்றும் தாராபாய்** இடையே உள்நாட்டுப் போர் தோன்றியது.
- இதில் தாராபாய் தோற்கடிக்கப்பட்டு ஷாகு மராத்திய பேரரசராக கி.**பி**.1708 **ஆம்** ஆண்டு பொறுப்பேற்றார்.
- இதற்கு பாலாஜி விஸ்வநாத் என்பவர் மூலகாரணமாக விளங்கினார். எனவே அவரை **பீஷ்வா** அல்லது பிரதம அமைச்சராக ஷாகு நியமனம் செய்தார்.
- சிவாஜியின் வழித்தோன்றல்கள் திறமை குறைந்தவர்களாக காணப்பட்டதால் பீஷ்வா மராத்திய பேரரசின் ஆட்சியாளர் ஆனார்.
- இவர்கள் உண்மையான ஆட்சியாளர்களாகவும், திறமையான நிர்வாகிகளாகவும் திகழ்ந்தனர்.

**பேஷ்வாக்கள்** (1713-1818)

**பாலாஜி விஸ்வநாத்** (1713-1720)

- வருவாய்த்துறை அதிகாரியாக பணிக்கு சேர்ந்தவர்.
- 1713 இல் பேஷ்வா பதவிக்கு முன்னேறினார்.
- உள்நாட்டுப்போரில் முக்கிய பங்கு வகித்த அவர் இறுதியாக ஷாகுவை மராட்டிய அரசராக நியமித்தார்.

**முதலாம் பாஜிராவ்** (1720-1740)

- பாலாஜி விஸ்வநாத்தின் மூத்த மகன்.
- இவரது காலத்தில் மராட்டியத்தின் புகழ் உச்சிக்கே சென்றது.
- மராட்டியத் தலைவர்கள் அடங்கிய கூட்டிணைவு ஒன்றை அவர் ஏற்படுத்தினார்.

**<u>பாலாஜி பாஜிராவ்</u>** <u>(1740-1761)</u>

- தனது 19 ஆம் வயதில் பதவியேற்றார்.
- 1749 இல் மராட்டிய அரசர் ஷாகு வாரிசு ஏதுமின்றி இறந்தார். வாரிசாக நியமிக்கப்பட்ட ராம்ராஜ் என்பவரை பாலாஜி பாஜிராவ் சதாராவில் சிறை வைத்தார்.
- 1761 ஆம் ஆண்டு நடைபெற்ற மூன்றாம் பானிபட் போரில் அகமது ஷா அப்தாலியை எதிர்த்து மராட்டியர்கள் வீரத்துடன் போரிட்டும் தோல்வியடைந்தனர்.
- இத்தோல்வியினால் அதிர்ச்சியடைந்த பேஷ்வா பாலாஜி பாஜிராவும் இறந்தார்.
- மராட்டியத் தலைவர்களான ஹோல்கர், சிந்தியா, போன்ஸ்லே போன்றவர்களிடையே நிலவிய ஒற்றுமையின்மையே அவர்களது வீழ்ச்சிக்கான காரணங்களில் முதன்மையானதாகும்.
- எனவே பிரிட்டிஷ் ஆதிக்கம் நிலைநாட்டப்படுவதை மராட்டியரால் தடுக்க இயலவில்லை.

*******

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு** : TNPSC **ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**)

**பாடம்** : **வரலாறு**

**பகுதி** : **மொகலாயர்கள்**

©**காப்புரிமை** :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமை பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்**,

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# வரலாறு

## மொகலாயர்கள்

Ø மொகலாயப் பேரரசுக்கான அடித்தளத்தை இந்தியாவில் உருவாக்கியவர் பாபர்.

### பாபர் (**கி.பி.**1526-1530)

Ø மத்திய ஆசியாவில் உள்ள பர்ஹானா நிலப்பகுதியை ஆட்சி செய்த **உமர்சேக் மிர்சா** என்பவருக்கு **கி.பி.**1483 ல் மகனாக பிறந்தார்.

Ø இவரது இயற்பெயர் **சாகிருதீன் முகமது**

Ø தந்தை வழியில் தைமூர் இனம். தாய் வழியில் செங்கிஸ்தான் இனம் கி..பி.1494ல் தனது 11**வது** வயதில் **பர்ஹானாவின்** ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.

### படையெடுப்புகள்

### முதல் பானிப்பட்போர்.

Ø கி.பி.1526 - ஏப்ரல் 21

Ø **இப்ராஹிம் லோடிக்கும் பாபருக்கும்** இடையே நடந்தது.

Ø பாபர் வெற்றிபெற்றார்.

Ø பாபரின் **பீரங்கி படை** இப்போரில் முக்கியப் பங்கு வகித்தது.

Ø சுல்தானியர் ஆட்சி முடிவுற்றது.

**கன்வா போர்**

- கி.பி.1527
- **பாபர்** - **ராணாசங்கா** இவர்களுக்கிடையே நடைபெற்றது. இப்போரில் பாபர் வெற்றிபெற்றார். வெற்றிக்கு பிறகு **காஸி** என்ற பட்டத்தை சூட்டிக்கொண்டார்,

**சந்தேரி போர் (கி.பி.**1528)

- பாபர் - முகமது லோடி இவர்களுக்கிடையே நடைபெற்றது. இப்போரில் பாபர் வெற்றிபெற்றார்.

**ஹுமாயுன் கி.பி** 1530-1540)

- பாபரின் மூத்த மகன்.
- முகலாய மன்னராக 1530**ல்** பதவியேற்றார்.

**சவுசா போர் (கி.பி.**1539)

- சொர்கான் - ஹுமாயுன் இவர்களுக்கிடையே நடைபெற்றது. இப்போரில் சொர்கான் முகலாய படைகளை நசுக்கினார்.

**கன்னோசிப்போர் (கி.பி.**1540)

- **சொர்கான்** - **ஹுமாயூன்** இவர்களுக்கிடையே நடைபெற்றது. இப்போரில் ஹுமாயூன் தோல்வியடைந்தார்.
- ஹுமாயூன் வாழ்க்கை முழுவதும் தடுமாறினார் - **லேன்பூல்** கூற்று
- ஹுமாயூன் கி.பி.1556ல் மரணம் அடைந்தார்.

**ø** இறப்பதற்கு முன் தனது மகன் அக்பரை வாரிசாக நியமனம் செய்து பைராம்கானை பாதுகாப்பாளராக நியமித்தார்.

**ஷெர்ஷா சூர்(கி.பி.1540 - 1545)**

**ø** இயற்பெயர் **பரீத்**.

**ø** ஆப்கானிய கவர்னரால் **ஷெர்கான்** என்ற பட்டத்தினை பெற்றார். இவரால் நிறுவப்பட்ட பேரரசு **சூர் வம்சம்** என அழைக்கப்பட்டது.

**ஷெர்ஷாவின் நிர்வாகம்**

**ø** இவரது அமைச்சரவையில் நான்கு முக்கிய அமைச்சர்கள் இடம்பெற்றிருந்தனர்.

1.திவானி-இ-விசாரத் - வரவு மற்றும் செலவு பொறுப்பாளர்

2.திவானி-இ-ஆரீஷ் - இராணுவ பொறுப்பாளர்

3.திவானி-இ-ரசாவத் -வெளியுறவு மற்றும் தூதரக பொறுப்பாளர்

4.திவானி-இ-இன்சா - அரசு ஆணைகள் மற்றும் கடித போக்குவரத்து பொறுப்பாளர்

**நிர்வாக அமைப்பு**

**ø** பேரரசு - சர்கார் - பர்கானா - கிராமம்

**ø** மாநில நிர்வாகத்தின் கடைசி அங்கம் கிராமம்

**ø** நிலவருவாய் முக்கிய இடம்பெற்றது.

**ø** **ரயத்துவாரி** முறை அறிமுகப் படுத்தப்பட்டது.

**ø** **அக்பரின் முன்னோடி** என அழைக்கப்பட்டார்.

**ø** குதிரைப்படையில் குதிரைகளுக்கு சூடுபோடும் “**தாக்**” முறையை அறிமுகப்படுத்தினார்.

**ø** **நவீன நாணய முறையின் தந்தை** என அழைக்கப்பட்டார்.

Ø நாணயங்களில் தனது பெயரை **தேவநாகிரி** எழுத்தில் பொறிக்கச் செய்தார்.

Ø டெல்லியில் புகழ்பெற்ற **புராணகிலா** என்ற சிறந்த கட்டிடத்தை உருவாக்கினார்.

**இரண்டாம் பானிபட் போர்** ( **கி.பி.**1556)

Ø **ஹெமு** - **அக்பார்** இவர்களுக்கிடையே நடைபெற்றது.

Ø இப்போரில் **ஹெமு** தோல்வியடைந்தார்.

Ø அக்பரின் வளர்ப்புத் தாய் **மாகம் அனாகா**.

Ø இவரது காலம் அந்தப்புர அரசாங்க காலம் என அழைக்கப்படுகிறது.

**அக்பரின் ஆட்சி நிர்வாகம்**

Ø **அக்பார்**, **இராஜாமான்சிங்**, **இராஜபகவான்தாஸ்**, **இராஜா தோடர்மால்**, **மற்றும் பீர்பால்** போன்றவர்களை உயர் பதவியில் அமர்த்தினார்.

Ø 1562 இல் **ஜிசியா** மற்றும் புனித பயண வரியினை இரத்து செய்தார்.

Ø **அபுல்பைசி**, **இராமாயணம்** மற்றும் **மகாபாரதத்தை** பாரசீக மொழியில் மொழிபெயர்த்தார்.

Ø அக்பரின் அவையை அலங்கரித்த இசைஞானி தான்சேன்.

Ø 1575 இல் அக்பர் பதேப்பூர் சிக்ரியில் **இபாதத் கானா** என்ற வழிபாட்டுக் கூடத்தை அமைத்தார்.

Ø 1579 இல் **தவறுபடா ஆணையினை** பிரகடனப்படுத்தியவர்.

Ø கி.பி.1582ல் **தீன்இலாஹி அல்லது தெய்வீக மதத்தை** வெளியிட்டார்.

Ø **இராஜா தோடர்மால்** அக்பரது ஆட்சிக் காலத்தில் நில வருவாய் நிர்வாகத்தில் சீர்திருத்தங்களை மேற்கொண்டார்.

Ø விவசாயிகளும், அரசாங்கமும் நிலவரி தொடர்பாக செய்து கொண்ட ஒப்பந்தம் **குபிலியாத்** எனப்பட்டது.

Ø மொகலாயரின் இராணுவம் மற்றும் பொது நிர்வாக முறைக்கு அடிப்படையாக அமைந்தது. **மன்சப்தாரி முறை**.

Ø குஜராத் வெற்றியின் நினைவாக அக்பர் எழுப்பிய கட்டடம் **பதேபூர் சிக்ரி**.

**ஜஹாங்கீர் (உலகினை வெல்பவர்)** (1605-1677)

Ø அக்பரின் மூத்த மகன் .

Ø கி.பி.1605ல் அரியணை ஏறினார்.

Ø 1611 ஆம் ஆண்டு ஜஹாங்கீர் மெஹருனிசாவை மணந்து கொண்டார். அவர் **நூர்ஜஹான்** (**உலகின் ஒளி**) என்று அழைக்கப்பட்டார்.

Ø இவரது ஆட்சியில் இங்கிலாந்து நாட்டிலிருந்து ஆங்கில வணிகக்குழு சார்பாக தளபதி **வில்லியம் ஹாக்கின்ஸ் மற்றும் சர்தாமஸ் ரோ** ஆகியோர் முகலாய அரசவைக்கு வருகை புரிந்தனர்.

Ø **கி.பி**.1615**ல்** சூரத் நகரில் வணிகம் செய்ய **சர்தாமஸ் ரோ** ஜஹாங்கிரிடம் அனுமதி பெற்றார்.

**இலக்கியப்பணி**

Ø ஜஹாங்கீர் தலைசிறந்த அறிஞர் .

Ø நீதித்துறையில் சிறந்து விளங்கினார்.

Ø **நீதிச்சங்கிலி மணி** என்ற புதிய முறையை அறிமுகப்படுத்தினார்.

Ø நீதிமணி **ஷாபர்ஷ்** அரண்மனையில் ஒருமுனையில் கட்டப்பட்டு மறுமுனை யமுனை ஆற்றங்கரையில் அமைக்கப்பட்டிருந்த கல்தூணில் இணைக்கப்பட்டிருந்தது. (பண்டைய தமிழகத்தில் மனுநீதிச் சோழன் நீதிச்சங்கிலி முறையை கொண்டுவந்தார்.)

**நூர்ஜஹான்**

- Ø இயற்பெயர் **மெஹருன்னிசா**
- Ø இளம்பருவத்தில் **ஷெர்ஆப்கன்** என்பவரை மணந்து ஒரு பெண் குழந்தைக்கு தாயானார்.
- Ø கணவரின் மறைவிற்கு பிறகு **கி.பி.**1611**ல் ஜஹாங்கீரை** மணந்தார்.
- Ø **நூர்மஹால்** (**அரண்மனையின் ஒளி**) என்ற சிறப்பு பெயரையும் **நூர்ஜஹான் அல்லது உலகின் ஒளி** என்ற சிறப்பு பெயரையும் பெற்றார்.
- Ø கி.பி.1611 முதல் கி.பி.1626 வரையிலான காலம் முகலாய வரலாற்றில் **நூர்ஜஹானின் காலம்** எனப்பட்டது.

**ஷாஜஹான்** (1627-1658)

- Ø ஜஹாங்கீர் மகனான **குர்ரம்** வரலாற்றில் **ஷாஜஹான்** என அழைக்கப்படுகிறார்.
- Ø குர்ரம் **உலகின் அரசன்** (ஷாஜஹான்) என அழைக்கப்பட்டார்.
- Ø போர்ச்சுக்கீசியர்களுக்கு எதிராக போரிட்டார்.
- Ø தக்காணத்தின் ஆளுநராக தனது மூன்றாவது மகன் **ஔரங்கசீப்பை** நியமனம் செய்து திறம்பட நிர்வாகம் செய்தார்.
- Ø பேரரசர் ஷாஜஹானின் காலம் "**மொகலாயர்களின் பொற்காலம்**" என்றழைக்கப்படுகிறது.
- Ø கட்டடக்கலையின் விந்தைகள் இப்பேரரசின் பொருளாதார செழிப்பினை பறைசாற்றும்.
- Ø பேரரசர் ஷாஜஹான் **கட்டடக்கலையின் இளவரசா்** என்றும் **பொறியாளர் பேரரசர்** என்றும் சிறப்புடன் அழைக்கப்படுகிறார்.
- Ø தான் கட்டிய மாளிகைகளுக்கு சிவப்பு கற்களுக்கு பதிலாக **வெள்ளை பளிங்கு கற்களை** பயன்படுத்தினார்.
- Ø **ஷாஜஹானாபாத்** என்ற புதிய தலைநகரை உருவாக்கினார்.

**Ø** டில்லியில் கண்கவரும் **செங்கோட்டையை** உருவாக்கினார்.

**Ø** புகழ்மிக்க பெருமை வாய்ந்த "**ஜிம்மா மசூதியை**" வெள்ளை பளிங்கு கற்களால் கட்டினார்.

**Ø** இது உலகிலேயே மிகப்பெரிய பள்ளி வாசல்களில் ஒன்றாக கருதப்படுகிறது.

**Ø** உலக அதிசயங்களில் ஒன்றாக விளங்குகின்ற வரலாற்று புகழ்மிக்க **தாஜ்மகாலைக்** கட்டி முடித்த பெருமை பேரரசர் ஷாஜஹானையே சாரும்.

**Ø** இந்த நினைவுச் சின்னம் யமுனை ஆற்றங்கரையில் **ஆக்ரா** நகரில் தனது அன்பு மனைவி **மும்தாஜின்** நினைவாக கட்டப்பட்டதாகும்.

**Ø** இம்மாளிகை பளிங்குக் கற்களின் கனவுலகமாக கருதப்படுகிறது.

**Ø** **உஸ்தாத் இஷா** என்ற தலைமை சிற்பியின் மேற்பார்வையில் சுமார் 22 ஆண்டுகள் கடின உழைப்பில் சுமார் 20 லட்சம் ரூபாய் செலவில் தாஜ்மஹால் கட்டப்பட்டதாக அறியப்படுகிறது.

**Ø** ஷாஜஹான் **முத்து மசூதி** என்று அழைக்கப்படுகின்ற **மோதி பள்ளி வாசலை** ஆக்ராவில் கட்டி முடித்தார்.

**Ø** விலைமதிப்பற்ற அரிய வகை கற்கள் மூலம் மயிலாசனத்தை உருவாக்கி புகழ் பெற்ற **கோகினூர் வைரத்தை** அதில் பதிக்கச் செய்தார்.

**Ø** இதனை பாரசீக படையெடுப்பாளர் **நாதிர்ஷா கி**.**பி**.1739 ஆம் ஆண்டு எடுத்துச் சென்றார்.

**Ø** இவரது ஆட்சியின் போது இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வந்த **பெர்னியர்**, **டிராவர்னியர்**, **மற்றும் மனுசி** என்ற இத்தாலியரும் ஷாஜஹானைப் பற்றி மிகச் சிறந்த வரலாற்றுக் குறிப்புகளைப் பதிவு செய்துள்ளனர்.

**ஔரங்கசீப்** (**கி.பி.**1658 - **கி.பி.**1707)

**Ø** இவர் ஷாஜஹானின் மூன்றாவது மகன்.

**Ø** முகலாய வம்சத்தின் கடைசி வலிமை வாய்ந்த மன்னர்.

**Ø** ஔரங்கசீப் "**ஆலம்கீர்**" என்ற பட்டத்தினை தனக்குத் தானே சூட்டிக் கொண்டார்.

**Ø** ஒன்பதாவது சீக்கிய **குரு தேஜ்பகதூரை** தூக்கிலிட்டார்.

**Ø** பத்தாவது சீக்கிய குரு **குரு கோவிந்தசிங்**. **கல்சா** என்ற இராணுவ அமைப்பினை உருவாக்கி ஔரங்கசீப்பை இறுதிவரை எதிர்த்தார்.

**Ø** மராத்திய தலைவர் **சிவாஜியை** அழிக்க தக்காணத்தின் ஆளுநரான **செயிஷ்டகானை** ஔரங்கசிப் நியமித்தார்.

**Ø** **தக்காண புற்றுநோய்** ஔரங்கசிப்பை அழித்தது.

**Ø** ஔரங்கசீப்பின் தீவிர சமயக்கொள்கை, அகன்ற பேரரசு, யார் மீதும் நம்பிக்கை இல்லாத தன்மை, தக்காணத்தில் நீண்ட காலம் போரில் ஈடுபட்டது, தன்னை அழித்ததோடு மட்டுமல்லாமல், பாபரால் உருவாக்கப்பட்ட வலிமை மிகுந்த முகலாய பேரரசையே வீழ்ச்சி அடையச் செய்தது. முகலாய பேரரசின் வீழ்ச்சிக்கு ஔரங்கசீப்பின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**முகலாயர்களின் ஆட்சிமுறை**

**Ø** பேரரசு - **மாகாணங்கள்** - **சுபா** - **சர்க்கார்** - **பர்கானாக்கள்** - **கிராமங்கள்** என பிரிக்கப்பட்டன.

**Ø** இராணுவம் சார்ந்த வல்லாட்சி நடைபெற்றது.

**Ø** பேரரசர் இறைவனின் நிழலாக பூமியில் கருதப்பட்டார்.

**Ø** பேரரசருக்கு உதவிட அமைச்சரவை இருந்தது. **வசீர் அல்லது தலைமை அமைச்சர்** முக்கிய அமைச்சராக கருதப்பட்டார்.

- நிர்வாக வசதியை கருதி, பேரரசு பல்வேறு மாகாணங்களாக பிரிக்கப்பட்டு இருந்தது. அவற்றை "**சுபா**" என்று அழைத்தனர்.
- சுபாவினை நிர்வாகம் செய்தவர் "**சுபேதார்**" என்று அழைக்கப்பட்டார்.
- அக்பரின் காலத்தில் பேரரசு 15 சுபாக்களாக பிரிக்கப்பட்டிருந்தது.
- சுபேதார் **சிவில் மற்றும் இராணுவ** அதிகாரங்களை பெற்றிருந்தார்.
- சுபாக்கள் பல்வேறு சர்க்கார் அல்லது மாவட்டங்களாக பிரிக்கப்பட்டிருந்தது.
- **பவுஜ்தார்** சர்க்காரின் ஆட்சியாளர் ஆவார்.
- சர்க்கார் பல **பர்கானாக்களாக** பிரிக்கப்பட்டது.
- **கிராமங்கள்** மாநிலங்களின் கடைசி பிரிவு
- **பிராமினி** கிராமத்தின் அதிகார நிர்வாகியாக இருந்தார்.

## வருவாய் நிர்வாகம்

- பேரரசின் முக்கிய வருவாய் **நிலவரியாகும்**.
- **இராஜாதோடர்மால்** வருவாய்த்துறை அமைச்சர்
- அக்பர் ஜாதி முறையை அறிமுகப்படுத்தினார்
- ஷெர்ஷா **அக்பரின் முன்னோடி** என்று கருதப்படுகிறார்.

## இராணுவ நிர்வாகம்

- முகலாய பேரரசில் இராணுவம், தரைப்படை, குதிரைப்படை, யானைப்படை மற்றும் பீரங்கிப்படையினை உள்ளடக்கி இருந்தது.
- இவற்றில் குதிரைப்படை முக்கிய பங்கு வகித்தது.
- அக்பர் **மன்சப்தாரி** முறையை அறிமுகப்படுத்தினார்
- மன்சப் என்றால் **தரம் அல்லது இடம்** என்பது பொருள்.

- மன்சப்தார்கள் 10 **முதல்** 10000 குதிரைகள் வரை வைத்திருந்தனர்.
- பேரரசருக்கு உதவுவது இவர்களின் முக்கிய கடமையாகும்.

**<u>நீதி நிர்வாகம்</u>**

- பேரரசர் நீதியின் ஊற்றாக கருதப்பட்டார்.
- **தலைமைக்காசி** பேரரசருக்கு நீதி பரிபாலனம் செய்ய உதவினார்.
- புனித நூலான **குர்ஆனின்** உதவி கொண்டு வழக்குகள் விசாரிக்கப்பட்டு வந்தன.

******

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு** : TNPSC **ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**)

**பாடம்** : **வரலாறு**

**பகுதி** : **விஜயநகர பேரரசு மற்றும் பாமினி அரசு**

©**காப்புரிமை** :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமை பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்**,

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# <u>விஜயநகர பேரரசு (கிபி.1336 - 1672)</u>

Ø விஜயநகர பேரரசினை உருவாக்கியவர்கள் **ஹரிஹரர் மற்றும் புக்கர்**.

Ø **கி.பி.**1336 இல் துங்கபத்திரா ஆற்றின் தென் கரையில் விஜயநகர அரசினை உருவாக்கினர்.

Ø விஜயநகர பேரரசின் தலைநகரம் **ஹம்பி**.

Ø இப்பேரரசு **சங்கம**, **சாளுவ**, **துளுவ**, **அரவீடு** என்னும் நான்கு மரபினர்களால் ஆளப்பட்டது.

Ø கிபி,1336 இல் முதலாம் **ஹரிஹரர்** ஆட்சிக்கு வந்தார்.

Ø கிபி.1356ல் **முதலாம் புக்கர்** விஜயநகர பேரரசினை ஆட்சிசெய்தார்.

Ø இப்பேரரசின் சிறப்புக்குரிய மன்னர்கள் **இரண்டாம் ஹரிஹரர்**, **முதலாம் தேவராயர்**, **இரண்டாம் தேவராயர்**, **கிருஷ்ணதேவராயர்** ஆகியோர் ஆவார்.

## <u>கிருஷ்ணதேவராயர்</u>

- Ø விஜய நகரத்தின் மிகச்சிறந்த பேரரசர்.
- Ø துளுவ மரபினைச் சேர்ந்தவர்.
- Ø போர்த்துக்கீசியர்களுடன் நட்புறவினை மேற்கொண்டார்.
- Ø தாம் வைணவராக இருந்தபோதிலும் அனைத்து சமயங்களையும் மதித்து நடந்தார்.
- Ø கலை, இலக்கியப் புரவலராகவும் திகழ்ந்ததால் ‘ஆந்திரபோஜர்” என்று அழைக்கப்பட்டார்.
- Ø கிருஷ்ணதேவராயர் முழு நிறைவான அரசர் என்று வரலாற்று அறிஞர் **டோமிங்கோபயஸ்** குறிப்பிட்டுள்ளார்.
- Ø தனது பட்டத்தரசி நாகலாதேவியின் நினைவாக நாகலாபுரம் என்ற புதிய நகரை நிர்மானித்தார்.

Ø விஜயநகரப் பேரரசில் **ஹசராசாமி கோயிலும்**, **விட்டலசாமி ஆலயமும்**, கோயில் கட்டுமான கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகும்.

Ø உலோக உருக்குக்கள் சிறப்பிற்கு கிருஷ்ணதேவராயர் சிலையே ஒரு மகுடமாகும்.

Ø கிருஷ்ணதேவராயர் தெலுங்கில் எழுதிய நூல் **அமுக்-தமால்யதா**. மேலும், அவர் **உஷாபரிணயம்**, **ஜாம்பவதி கல்யாணம்** ஆகிய சமஸ்கிருத நூல்களையும் எழுதியுள்ளார்.

Ø கிருஷ்ணதேவராயர் அவையில் அஷ்டதிகஜங்கள் எனப்படும் 8 அறிஞர்கள் இடம் பெற்றிருந்தனர்.

Ø **விட்டலசாமி கோயில்** தூண்கள் தட்டினால் இசை எழுப்பும் இயல்புடையதாகும். இத்தூண்கள் **இசைத்தூண்கள்** அல்லது **சரிகம தூண்கள்** என அழைக்கப்படுகின்றன. இக்கோயில் கிருஷ்ணதேவராயர் காலத்தில் கட்டப்பட்டது.

Ø **இவருக்குப் பின் அச்சுதர்**, **வெங்கடர் ஆகியோர் அரியணை ஏறினர்**.

Ø தலைக்கோட்டைப் போர் நடைபெற்ற ஆண்டு **கி**.**பி**-.1565

Ø இப்போர் ‘ரக்ஷா தங்கடி” என்றும் அழைக்கப்படுகிறது.

Ø விஜய நகர அரசின் கடைசி அரசர் இரண்டாம் ஸ்ரீரங்கர் ஆவார்.

**<u>ஆட்சிமுறை</u>**

- Ø பேரரசு பல மண்டலங்களாகவும் , மண்டலங்கள் பல நாடுகளாகவும் , நாடு பல ஸ்தலங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது.
- Ø ஸ்தலம் என்பது பல கிராமங்களைக் கொண்டிருந்த பிரிவாகும்.
- Ø மண்டலத்தின் ஆளுநர் மண்டலேஸ்வரர் அல்லது நாயக் என்று அழைக்கப்பட்டார்.
- Ø ராணுவத்தின் உயரதிகாரிகள் நாயக் அல்லது பாளையக்காரர் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் ஆற்றும் பணிக்கு ஈடாக

நிலங்கள் வழங்கப்பட்டன. இந்நிலங்கள் ‘அமரம்” என்று அழைக்கப்பட்டது.

**<u>சமூக வாழ்க்கை</u>**

- Ø பிராமணர், ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு ஜாதிப்பிரிவுகள் இருந்ததாக அல்லசானி பெத்தண்ணா தமது மனுசரித்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்.
- Ø மகளிர் நிலையில் முன்னேற்றம் இல்லை.
- Ø குமார காம்பணரின் மனைவி கங்கா தேவி மதுரா விஜயம் என்ற நூலை இயற்றினார்.
- Ø ஹன்னம்மா, திருமலம்மா இருவரும் அக்காலத்தில் புகழ் வாய்ந்த பெண்புலவர்கள்.
- Ø தேவதாசி முறை வழக்கத்தில் இருந்ததாக பயஸ் குறிப்பிட்டுள்ளார்.
- Ø சதி வழக்கம் பெருமையாகக் கருதப்பட்டது.

**<u>பொருளாதார நிலை</u>**

- Ø விஜயநகரம் புகழ்பெற்ற வர்த்தக நகரமாக விளங்கியது.
- Ø முக்கிய தங்க நாணயம் வராகன் என்பதாகும்.
- Ø கண்ணனூர் துறைமுகம் குறிப்பிடத்தக்கதாகும்.
- Ø கப்பல் கட்டும் தொழில் வளர்ச்சியடைந்திருந்தது.

## <u>பாமினி அரசு (கி.பி.1347 - 1526)</u>

Ø பாமினி அரசை தோற்றுவித்தவர் அலாவுதீன் பாமன்ஷா. இவர் **ஹசன்கங்கு என்றும் அழைக்கப்பட்டார்**.

Ø பாமினி அரசு உருவாக்கப்பட்ட ஆண்டு **கி.பி.**1347.

- இதன் தலைநகரம் குல்பர்கா.
- பாமினி அரசை மொத்தம் 14 சுல்தான்கள் ஆட்சி புரிந்தனர்.
- அவர்களில் அலாவுதீன் பாமன்ஷா , முதலாம் முகமது ஷா, பிரோஸ் ஷா ஆகியோர் சிறப்பு வாய்ந்தவர்கள். பின்னர் அகமதுவாலிஷா என்பவர் தலைநகரை குல்பர்காவிலிருந்து பீடாரக்கு மாற்றினார்.
- மூன்றாம் முகமதுஷாவின் ஆட்சிக்காலத்தில் பாமினி அரசின் புகழ் அதன் உச்சிக்கு சென்றது.
- முகமது ஷா வின் வெற்றிக்கு காரணம் அவரது அமைச்சராக விளங்கிய முகமது காவன் என்பவரின் ஆலோசனைகளும் சேவைகளுமேயாகும்.

**முகமது காவன்**

- பாரசீக வணிகர்.
- தனது தனிப்பட்ட ஆளுமையினால் பாமினி சுல்தானியத்தின் முதலமைச்சரானார்.
- முகமது காவனின் மறைவுக்குப்பிறகு பாமினி அரசு வீழ்ச்சியடையத் துவங்கியது.
- 1526 ஆம் ஆண்டு வாக்கில் பாமினி அரசு ஐந்து சுதந்திர சுல்தானியங்களாக சிதறுண்டன.
- அகமது நகர், பீஜப்பூர், பீரார், கோல்கொண்டா,பீடார் என்ற ஐந்தும் தக்காண சுல்தானியங்கள் என்று அழைக்கப்பட்டன.

**நிர்வாகம்**

- பாமினி அரசின் நிர்வாகம் நிலமானியமுறையில் அமைந்தது. நாடு பல மாநிலங்களாக பிரிக்கப்பட்டு **தராஃபுகள்** என அழைக்கப்பட்டன.

- பீஜப்புரில் உள்ள **கோல்கும்பாஸ்** கட்டடம் **முணுமுணுக்கும்** அரங்கம் என்ற சிறப்பைப் பெற்றது.
- **கோல்கொண்டாக் கோட்டை** நுழைவாயிலில் எழுப்பும் கரவொலி மலையின் மேல்பகுதி வரை தெளிவாக கேட்பது இதன் தனிச்சிறப்பாகும்.
- விஜயநகர அரசர்களுடன் தொடர்ச்சியாக போர்கள், மூன்றாம் முகமதுஷாவுக்குப்பின்னர் திறமையற்ற அரசர்களின் ஆட்சி, அயல்நாட்டு பிரபுக்களின் கலகங்கள் போன்றவை பாமினி அரசின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தன.

*********